# Criticism on Self-respect.

Published by :

P. V. Kannappa Mudaliar.

புராணிகர், காளத்தி
திரு. இ. சிதம்பரசாமி பாண்டியர்
அவர்கள்
அன்பளிப்பு

XVII. C. 6

1493

(7750)

ஓம் சிவம்.

# சுயமரியாதைக்கு ஓர் சூட்டுக்கோல்.

தி. மு. ஆறுமுகம் எழுதியது.

முதற்பதிப்பு.

1929

காபிரைட்.]

[விலை அணா 8.

GF
Q2:9.8N0
F9

PRINTED AT THE SRI BHARATHI PRESS, CHOOLAI, MADRAS.

# PREFACE.

I have great pleasure in writing a brief introduction to this book which seems to be of great service to the tamil nad.

Of all creations of God, man is considered and accepted to be the highest of all for he is endowed with the special faculty of reasonings. Everyman that comes into existence into this world has a special mission and purpose to fulfil that is to become one with the lord of the universe the creator, protector, destroyer and the everlasting eternity. This goal is not within the reach of all other lower creations.

Our great Maharishis who were great research scholors, were struggling hard to find out the truth, the lord himself. After a good deal of hard penance and self sacrifice in various respects on their part, thay were able to attain their goal of fiinding the lord, and the amount of joy they derived thereby, knew no bounds. Out of pure sympathy and love they had towards humanity they formulated and established their experiences in the form of certain laws and regulations, by following which others can also attain the same goal and enjoy the bliss. They are, as at present, known as religious Sastras.

Many greatmen, such as Manickavasagar, Appar, Sundarar, Sambandar, Thayumanavar & Pattinattar who

came afterwards carefully studied them, followed them practically in the path indicated and finally reached their desired goal. All their opinions and respective experiences were unanimous and concurrent. Thevaram, Thiruvasagam and other such like books are the great productions of those greatmen which the Tamil Nad now boasts of.

It is to be inferred that it is due to want of proper penance on the part of Tamil Nad, that it is going more and more towards materialism wealth riches, worldly ambitions & luxuries, resulting in Non-belief in God. Certain *Stalwarts* have sprung up very recently in our Tamil Nad, with the peculiar gospel of no God religion in order to expel and bury all the said sastras which they emphatically say to contain many superstitions. They are simply trading in the name of our Hindu religion in a wrong way and get spoiled not only themselves but exert their utmost to spoil others particularly the uneducated both through press & platforms, in order to win worldly name and fame. It is regrettable to note that some had already fallen in their fold and some on their way.

At this momentous and important hour my esteemed friend Mr. T. M. Arumugam Pillai, considered it quite necessary for the publication of a small book which should serve as a direct answer to those meaningless questions raised by the so called stalwarts referred to above. Therefore, after a good deal of exertion and self sacrifice, he has compiled this small book titled "சுயமரியாதைக்கோர் குட்டுக்கோல்" (Criticism on self-respect movement) for

which the Tamil Nad as a whole is deeply indebted. The importance of this small book, at this hour need not be explained.

This book very clearly explains all the questions relating to God, religion, & Sastras and very solidly affirms and establishes the very truth & essentials of Hindu religion.

A line of personal reference about Mr. T. M. Arumugam Pillai, will not be out of place here. He is a native of Woorayur, Trisirapuram. He is a perfect scholar in Tamil Literature and a great devotee to God. He is Saivite by faith and a strick observer of moral principles. He is much respected and honoured by his friends and relations and they all anxiously await the days of his glory.

In conclusion, I would thank Mr. T. M. Arumugam Pillai, in all sincerity and gratitude in requesting me to give an introduction to this book. It is a mark of confidence, which I deeply appreciate, but as an earnest effort after truth and as the expression of a singularly love and lovable spirit, I would wish them a wide perusal. May the God spare the author of this book with long life and prosperity to enable him to write many a book more like this, with which we may cherish. May the Holy spirit of Truth Himself lead us into all the Truth.

Madras
15-8-1929

C. T. THANGAVELU MUDALIAR,
PRESIDENT,
Kadavul Thondar Kalakam.

1493
67750

# தந்துரை.

"சுயமரியாதைக்கோர் சூட்டுக்கோல்" என்னும் இப்புத்தகத்தின் பெயரைப் படித்தவுடன் படிப்போரின் மனம் பிற முகவுரை யெதையும் விரும்பாது. ஆனால், "சுயமரியாதையின் மீது சூடிடுதலா? அஃதொரு சுயமரியாதை யாகுமா?" என்ற ஆராய்ச்சியிலேயே செல்லும். "சரி! ஆனாலும் அந்நோய் சூடுபட வேண்டிய நிலைக்கு இப்பொழுது வந்து விட்டதா" என்ற கேள்வி அடுத்த படியில் நிற்கின்றது! அவ்வாறு ஆலோசனை புரியும் விவேகிகளுக்கு இந்நூலாசிரியரும் ஆராய்ச்சி முறையிலேயே தக்க உதவி செய்துள்ளார்.

எனவே, எனது முகவுரையும் முகவுரையாக நீளாது ஒரு ஆராய்ச்சிக் குறிப்புரையாகவே அமைதல் இந் நூலினுக்குப் பொருத்தமாகுமெனக் கருதுகின்றேன்.

"எல்லோரும் நெல்லை உலர்த்தினால் எலி வாலை உலர்த்துமாம்!" அதுபோல மனிதவர்க்கம் முழுதும் அறிவு நிலையிலே ஒற்றுமைகொண்டு வாழவேண்டுமெனும் பேராவலினால் அந்த அமெரிக்கநாட்டு நிபுணர் போன் எலியட்துரை மகனார் 1911-ம் வருஷத்தில் கிறிஸ்தவ வேதாந்த கலாசாலை மாணவர்க்கு ஒரு புதிய அறிவு புகட்டினார். அதனைக் கேட்டு அங்குள்ள நிபுணர்கள் "இனி விவேகிகள் சம்மதிக்கத்தக்க மதம் எது" என்ற அரிய பெரிய விஷயத்தை ஆராயத் தொடங்கினர்.

பிரஞ்சுக்காரருக்கு இந்து மதமும் அதன் தர்சனங்களும் (அறுவகைத் தத்துவ சாத்திரக் கண்களும்) அநுகூலமானவையென்றும், அவைகளால்தான் பிரான்ஸியர் நாஸ்திகத்தினின்றும் ஆஸ்திக மார்க்கத்திற்குத் திரும்பக் கூடுமென்றும் அவைகளாலேயே மனிதவர்க்கத்தின் இன்பவாழ்வு அமைதியுடன் அனுபவிக்கப்பெறுமென்றும் பிரான்ஸீ தேசத்து வித்வத் ரத்

தினமாகிய ஷீல்ஸ் அம்மையார் ஷை அரசாக்ஷி முறையில் விபர மாக ரிபோர்ட்டு செய்திருக்கிறார்.

எந்த ஆங்கிலேய மக்களைப் பின்பற்றி யொழுகுமாறு சுய மரியாதைத் தலைவர் உபதேசிக்கின்றாரோ அந்த ஆங்கிலேய மக்களிலேயே தோன்றிய கலைவல்லோர் பல்லோர் இந்திய மத நூல்களைப் பயிலுமாறு உலகமக்களுக்கெல்லாம் உள்ளன்போடு எடுத்துரைத்தனர்; உரைக்கின்றனர். உதாரணமாக சென்னை மாகாணத்தில் கலெக்டராயிருந்த நண்பர் ஓ உல்ப்பரே என்பார் இந்தியாவுக்கு வருகின்ற வழியில் உத்தியோகஸ்தருக்கெல்லாம் கீதை, உபநிஷத்துக்களையும் குரானையும் கட்டாயங் கற்றுக் கொடுத்தனுப்பவேண்டுமென்று நம் சக்ரவர்த்திப் பெருமானுக்கு விண்ணப்ப மனுப்பியுள்ளார். தவளை தாமரை யுடன்தான் பிறந்து வளர்கின்றதாயினும், அத்தாமரையின் நறுந்தேனை வண்டே வந்துண்பதுபோல, அதனை அது கண்டு கொண்டிருப்பதுபோல, ஸ்வீடன்பர்க்கு போன்ற பிற நாட்ட வரும் சுவைத்துப்போற்றும் அன்புச் சமயத்தைச் சுவைத்தறிய மாட்டாத சுயமரியாதைக் கூட்டத்தார் எச்சமயமும் இந்தியா வுக்கு வேண்டாம்; உலகத்திற்கும் சமய ஞானம் தேவையில்லை யெனத் தீர்மானிக்கின்றனர்!

பேடிக்கு மனைவியும் வில்லும் நஞ்சுகளாகத்தோன்றலாம். ஆனால், அருச்சுனன் தோன்றிய இந்தியாவில் அவனது பின் தோன்றல்களாகிய மக்கள் யாவரும் தமது வில்லின் பெருமையை இழந்து, மனையையும் மனைவியையும் மக்களையும் மாநிலத்தையும் மாற்றானுக்கு விட்டுக் கொடுக்கச் சம்மதியார். குலப் பெருமையினால் அநுமானுக்குச் சக்தி கூடியது என்ற கதையைச் சுயமரியாதையினர் அங்கீகரியாவிடினும் ராஜபுத்திரருக்குத் தமது குலப்பெருமையை நினைக்குந்தோறும் வீரியம் சௌரியம் முதலிய க்ஷத்திரிய குணங்கள் பெருகின வென்பது உண்மை. இனி இதனைச் சுயமரியாதையியக்கத்தார் அங்கீகரியா ராயின், கலைகளின் வளர்ச்சிக்கென்று பரம்பரையாக உழைக்கும் ஒரு ஜாதியார் மூலமாகக் கலைகள் பலவும் இந்தியாவில்

சித்திர விசித்திரமாகச் செழிக்குமென்பதை அங்கீகரிக்கலாம்; செழிக்குமாறு உதவி புரியலாம். தம்மோடு முரண்பட்ட அபிப்பிராயங்கொண்ட தாகூர் பெருமானுக்குத் திலகர் பெருமான் இத்தகைய பேராதரவு அளித்துத் தமது அரசகுணத்தை வெளியிட்டனர். கலைகளின் வளர்ச்சிக்காக நமது சகோதர இந்தியருக்கு நாம் செய்யத்தக்க உதவிக்கும், அரசியல் துறையிலுள்ள அபிப்பிராய வேற்றுமைக்கும் தொடர்பில்லையென்பது திலகரின் கருத்து. அவர் அதை விளக்கினர்! அத்தகைய தற்பெருமை விரும்பாத அசல் சுயமரியாதைப் பெருங்குணம் இந்த சுயமரியாதைத் தோன்றலுக்குண்டா? அல்லது மனத்தைக் களங்கமின்றி வைத்துள்ளவரும், வாக்கினல் கண்டபடி பேசாதவரும் சொல்லிய வண்ணஞ் செய்வோருமாகிய மகாத்மா காந்தியடிகள் போன்ருர் சுயமரியாதை யியக்கத்தில் ஒருவரேனு மிருப்பின் சுயமரியாதையியக்கம் ஒருவாறு நலஞ் செய்யும் இயக்கமாக அமையும். ஆனல் அத்தகைய தூய்மையைக் காரியத்தில் காட்டு வதைவிட 1000 பங்கு பேச்சிலும் அதைவிட 10000 பங்கு பத்திரிகையிலும் எழுதுவதே போதுமானதென்று அந்த இயக்கத்தார் கருதுவதே அந்த இயக்கத்தின் அழிவுக்குப் போதுமானது! இதன் காரணமும் அவர்க்கே தெரியும்!

ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் இங்கு யாத்திரையாக வந்து செல்வோர் பலர் இங்கிருந்து எதாகிலும் உடைந்த கற்கள், சங்குகள், சுரைக்காய்க் குடுக்கைகள், பக்ஷிகள், தோகைகள் இவற்றைமட்டும் எடுத்துச்சென்று இந்தியாவின் அரிய பொருள்கள் இவைதாம் என்று அங்குள்ளார்க்கு உபதேசிப்பதுபோலச் சுயமரியாதை யியக்கத்தார் ஆங்கிலத்தில் வெளியிடும் 'ரிவோல்டு' பத்திரிகையின் பிரசாரம் இந்து மதம் பெரிதும் ஆபாசமானது என்று பலரும் கருதுமாறு இடமுண்டாக்கிவிட்டது.

பத்திரிகை உலகமாகிய இந் நவீனயுகத்தில் எழுத்துக்கு எழுத்து பதிலளித்தாலன்றி, மேயோவும் மேயோ நாய

க்களும் தோன்றுதிருக்க வழியில்லே. நினைப்பிலிருப்பதை வாயால் சொல்லித்தான் காரியத்திற்குப்பலமுண்டாக்கவேண்டு மென்று அந்த ஒருசாரார் கூட்டம் சேர்ப்பதுபோல நாமும், பத்து இடங்களில் விவேகிகளை ஒருங்கே திரட்டி அவர்களின் செவியில்படுமாறு நாட்டின் பொதுநிலைமையை நன்கு எடுத்துக் காட்டவேண்டியதுதான்.

'கலகம் பிறப்பித்தால் நியாயம் தன்னிச்சையாகப் பிறக் கும்' என்ற கருத்தினுல்தான் 'ரிவோல்ட்' கிளம்பி யிருக்கின் றதுபோலும்! ஆனுல் விவேகிகள் விவேகானந்தரின் வழியில் பகுத்தறிவை உபயோகிப்பதே ஆண்மைக்கு அழகென்பர். கல்வியறிவற்ற சுயமரியாதையியக்கத் தலைவர் கடவுளிருப்பதை யும் இல்லாததையும்பற்றி முற்கால தற்கால அறிஞர்களைப் போல் வாதிட்டு முடிவுகூறச் சக்தியற்றவராய்,"கடவுள் இருப் பதையும் இல்லாததையும்பற்றிக் கவலை கொள்ளாதே" என்று சாதுரியமாக இதோபதேசஞ் செய்கின்றுர்.

வெளியுலகிலே பல்லாயிரங் கதிர்களுடன் ஒளிர்கின்ற கதி ரவனைக் கண்கொண்டு காணும் பாக்கியமற்ற கூகைக்குஞ்சுகள் "நிலவுலகத்திலே சூரியனில்லையெனப் பேசித்திரிதலால்" பய னுண்டோ? "மக்களனைவருக்கும் ஒரு பெருந்தந்தையுளன்; அவன் கருணாநிதி!" என்று உலகநன்மை கருதியேனும் அங்கீ கரியாவிடில் அறிவாளரின் அறிவும், பொருளாளரின் செல்வ மும், தொழிலாளரின் திறனும் எவர்க்கும் பயன்படமாட்டா. கடவுளை மறந்த உலகம் கணவனையிழந்த மங்கையைப்போல் மனம்வருந்தி அமைதியின்றித் தவிக்கும். ஆகவே, கடவுளின் அருளைத்துலக்கி சமரச புத்தியை வளர்க்கின்ற கல்வி முறையே ஒரு நாட்டுமக்களை நல்வழிப் படுத்துவதாம்.

கண்ட தண்ணீரை மொண்டு பருகினுல் தூல உடலிலே நோய்காணும் என்பதை யறிகின்ற நன்மக்கள் அத்தண்ணீரை நன்னீராக வடிகட்டிப் பருகுதல் வழக்கமாவதுபோல இக் காலத்து நம் சிறுவர் சிறுமியர் யாவருங் கண்ட நூல்களையெல் லாம் படித்துத் தமது மனவுட்டிலே நோய்கொண்டு திரிவதை

நாம் விவேகக் கண்கொண்டு கவனித்துத், தக்க பரிகாரம் செய்வதையும் வழக்கமாகக் கொள்ளவேண்டும். "விஷயம்மட்டும் சரியாக இருந்தால் அதை யார்சொன்னபோதிலும் நாம் நன்றியுடன் அங்கீகரிக்கவேண்டும்" என்பதே நமது இந்தியநாட்டின் விவேகிகளுக்குகந்த கொள்கை. 'ஊகமுளதேல் சிறுவருரையுங் கொள்க!' என்பதும் ஒரு நன்மொழி.

அத்தகைய பகுத்தறிவுடையா ரனைவரும் சம்மதிக்கத்தக்க நல்லியக்கமொன்றை நவமாய்க் காணத்தெரியாது "இப்பொழுதுள்ள சமய புத்தகங்களையெல்லாம் எடுத்தெறி" யென்று கட்டளையிடுகின்றார் சுயமரியாதைத்தலைவர்.

காரணங் கூறும் என்றால், எமக்குப் படிப்பில்லையெனக் கூறிவிடுகின்றார். "படிப்பில்லாதவர் சும்மா இரும்!" என்றும் கேட்பதில்லை. அதற்காகவே படியாதாரின் பகுத்தறிவற்ற பகுத்தறிவுக் கொள்கைக்குச் சூடிடும் நூலொன்று வெளிவர வேண்டி வந்தது போலும்! மயக்கத்தைக் கொடுக்கக்கூடிய மதுபானத்தையொழிக்க வேண்டுமென்று பூனைக்கால் ஜான்ஸன் ரிஷியும் சென்னை யரசாங்கமுங்கூட ஒத்துழைக்கின்ற இக்காலத்தில் 'வரும் பயனைக் கூறாது மயங்கிச் செல்லும் சுயமரியாதை யியக்கத்திற்குக் குழிதோண்ட வேண்டாமா' என்பதையும் பொதுஜனங்கள் ஊகிக்கவேண்டும்.

காட்டுத்தீபோல் கண்ட இடங்களில் பரவி வருகின்ற போலியியக்கத்தைக் காண்போர் பலர், இனி, "நமக்கு உண்மையான தேசாபிமானம் உண்டாக எத்தனை நூறாண்டுகள் வேண்டுமோ" என்று நெஞ்சம் வருந்துகின்றனர். நமக்குப் பின்வருபவர்களை யுத்தேசித்தேனும் நாம் ஒற்றுமையோடு வாழும் வழி என்ன என்பதே முதற்கேள்வி.

அதனை இந் நூலாசிரியர் ஆங்காங்கு விளக்கிச்செல்வது படிப்போரின் மனத்தில் சிந்தனை சக்தியை வளர்க்கின்றதென்னலாம்.

ஆரம்பம் இரண்டுபக்கங்களிலும் தனது பணியைச் செய்து கொண்டு செல்வதுபோல அரசியல் துறையிலும் சமூகத்துறை

யிலும் சுயமரியாதை இயக்கம் திருந்தவேண்டிய முறையை இவ் வாசிரியர் குறித்துச்செல்கின்றார்.இனித் தண்ணீர் போனபிறகு அணைகோலிப் பயனில்லை! ஆதலால்,தமிழ்நாட்டு மக்கள் யாவரும் நாத்திக மதவாதிகளானபிறகு மடாதிபதிகள் விழித்துப் பயனில்லை. சுயமரியாதை யியக்கத்தார் ஆங்கில முதலிய பாஷைகளிலும் தமது கொள்கையைப் புகட்டும் பத்திரிகைப் பிரசாரம் செய்வதுபோல, அதன் தீமையைத் தடுக்க விரும்புகின்றவிவேகிகள் உடனேவிழிப்புற்றுப் பலபாஷைகளிலும் பிரசார வேலைசெய்யவேண்டும். பூஞ்சோலையின் வனப்பிற்காகப் பூஞ்செடிகளின் வளர்ப்புக்காகத் தோட்டக்காரனிடம் அளித்த அருஞ்செல்வத்தை அவன் தின்று ஏப்பமிட்டுச் செடிகள் யாவும் பட்டுப்போகுமாறு பார்த்திருப்பதுபோலச், சமய வளர்ச்சிக் கெனச் சமயாபிமானிகளளித்த செல்வத்தைச் சமயகுரவர்கள் தின்றழித்தல் அக்கிரமமாம்.

ஆனால் வித்துவான்களும் விவேகிகளும் சுயநலம் விரும்பாதாரும், வயது ஞானம் சீலம் எல்லாம் முற்றியவர்களுமாகிய பொதுமக்களில் சிலரும் மடாதிபதிகளும் ஒருங்கே கூடி, செங்கற்பட்டில் சுயமரியாதைக் கூட்டத்தார் நமக்கு (நம் நாட்டுக் கொள்கைக்கு) செய்தஅவமரியாதையை அடியோடு ஒழிப்பதற்காகவும், நமது வருங்கால வாலிப இந்து சமூகத்திற்குச் சமூக மதவாழ்வில் சமரச அறிவு தழைப்பதற்காகவும் அந்தச் சமயத் தலைவர்கள் சொந்த ஹோதாவில் அல்லது பொதுநிலையில் ஒரு பெரிதான வேலைத் திட்டம் அமைத்து, நாடெங்கும் அஸல் சுய (சமய) மரியாதை யுணர்வை யெழுப்பவேண்டும்.

ஜெனரல் பூத் என்னும் பாதிரியார் மற்ற சங்கங்களைவிட்டு விலகித் தாமாகவே ஒருமாதிரி சங்கம் ஏற்படுத்தி, இங்கிலாந்து ஜெயிலிலிருந்து வெளியான மனிதர்களை யெல்லாம் வசப்படுத்தி அவர்களுக்கு நன்னெறிபுகட்டி நல்லறிவோடு உழைத்து வரச்செய்தார். அந்த சங்கம் 1864-ம்ஞூத்தில் லண்டன் மாநகரில் அமைக்கப்பெற்று அதுவே 1878-ல் ரக்ஷணிய ஸேனையாகப் பிரபலித்தது. அதுபோல் இந்துமதத்தைப் பாதுகாப்

பதற்காக எல்லா மடாதிபதிகளும் சேர்ந்து ஒரு பெரிதான ரக்ஷணை சேனை திரட்டி இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் வேலை செய்யவேண்டும். அதன் மூலமாக அவ மரியாதை மறைந்து சுயமரியாதை நிலைக்கச்செய்யலாம்.

தாய் தனது மக்களில் எவரேனும் தீயவழியில் செல்லுவராயின், அத்தருணத்தில் அவரது பிடிவாதம் தீரச் சூடிட்டேனும் மருந்தளிப்பதுண்டு. பக்கத்தில் இதனைக் கண்டு கொண்டிருக்கின்ற மக்கள் மதிநுட்பமுடையவராயின் அவர்க்கு நாமும் நமது கடமையுணர்ந்து ஒழுகாவிடின் நமக்கு இதே தண்டனைதான் ஏற்படும் என்பது புலப்படும்!

அதுபோல, சுயமரியாதை யியக்கத்தின் மீது இடப்பெறுகின்ற தீச் சூட்டுக்கோலின் மூலமாக நமது மடாதிபதிகளும் பற்பல க்ருமத்தை மனத்திற்கொள்ளலாம். இப்பொழுது நமக்கிருக்கும் ஸ்டாக் சரக்கெல்லாம் "நம் முன்னோரனைவரும் வானத்தை வில்லாக வளைத்துவிட்டார்கள்" என்பதே. அந்தக் கீர்த்திநிழலில் நாம் சுகமாகக் குடிசைபோட்டு வாழ்ந்து வருகின்றோம். நம்மைத் தவிர்த்து இதர சீடர்களெல்லாம் இலௌகிக வைதிகக்கல்விகளை மிகமிகக்கற்று நம்முடையவும் நம்முன்னோருடையவும் சமயாசாரக் கொள்கைகளைப்பற்றி என்னென்னவோ பேசித் திட்டி நொறுக்குகின்றார்களே! அவற்றையெல்லாம் பார்த்து அல்லது பாராது விராடராசன்போல் வீற்றிருக்கின்ற நாம் இனியும் விழித்து வேலைசெய்யாவிடில் இச் சூட்டுக்கோல் நம்பக்கமும் திரும்புமோ எனவும் சமயாசாரியர்கள் கருதலாம். எனவே, ஊக்கமுள்ள மடாதிபதிகள் அசம்பாவித நிகழ்ச்சிகளையும் பொய்ப் பெருமைகளையும் என்றைக்கு உதறித் தள்ளிவிட்டு, (பகலவன்முன் பகல் தீவட்டியிட்டுச் செல்லும் சிறிய செயல்களைத் தீயிலிட்டு)இந்தப் பரந்த ஞானவுலகத்திலே இரவுபகலறியாது பண்டைச் சமயாசாரியர்களைப்போல் திருவருள் வெளிச்சங்கொண்டு மனிதவர்க்க முழுதுக்கும் கடவுளின் காருண்யத்தைப்பற்றி யுபதேசிக்கப் புறப்படவேண்டுமென நெஞ்சத்தில் சூடுபிறக்கப் பெறுகின்றனரோ அன்றைக்

குத்தான் அவர்களுக்குச் "சமய சரித்திர சாத்திர ஞான தீக்ஷைக்கு" உரியகாலம் வந்ததெனக் கருதவேண்டும்.

இத்தகைய தீர்க்காலோசனையை உடனே செய்து பணி தொடங்காது இனியும் "சமயம் வரப்போகின்றது! சமயசாரியார் வரப்போகின்றனர்!! அவதார புருஷர் வந்து திருத்துவர்!!!" என்று பலபலவாறு பைத்தியக்காரப் பேச்சுப் பேசி வந்தால், அடுத்த அவதாரம் எண்டோமெண்டு போர்டின்மூலமாக மகாஜனசக்தி வெளிப்பட்டு மடங்களையெல்லாம் கிழித்து மாலையிட்டுக்கொள்ளும் நரசிங்காவதாரமாக முடியும்.

முற்காலத்திருந்த சமயாசாரியர்கள் உண்மையாகவே நெல்லையப்பர்சகாயமெனக்கொண்டு வாழ்ந்தனர்! இப்பொழுது வெள்ளையப்பர் சகாயந்தான் அவசியமெனத் தெரிந்து அதற்கான முறையில் நெல்லையப்பரை யுபயோகிக்கின்றனர் இக்காலத்திருக்கின்றசமயாசாரியர்! ஆனல், பாபா பிரேமானந்தபாரதியார் நெல்லையப்பரின் பெயரைச் சொல்லிக்கொண்டு மடத்தில் அடங்கிக் கிடக்கவில்லை! அந்யதேசமான அமெரிக்காவுக்குச் சென்று 900 சிஷர்களை, பிரபுக்களை நெல்லையப்பரை வெள்ளையப்பரைச் சம்பாதித்திருக்கின்றார்! அதன் பயனாக ராக்பெல்லர் என்னும் கோடீசுரர் 60 கோடி பவுன் தர்மஞ் செய்து பூலோகத்திலுள்ள-எந்த நாட்டிலுமுள்ள மகாஜனங்களுக்குத் துன்ப நிவாரணமும் இன்பப் பெருக்கும் உண்டாவதற்குச் சாதகமான கல்வி வளர்ச்சியோ வேறு எவ்வித தர்மமோ செய்து சகல ஜனங்களுக்கும் நன்மைசெய்ய வேண்டுமென்று தர்ம சாதனம் எழுதிவைத்தார். பகுத்தறிவுக்கு மேற்பட்ட பொருளொன்று இருக்கின்றதெனக் கூறும் சமய நூல் அறிவில்லாத ஒருவருக்கு இத்தகைய புத்தி தோன்றுதல் அரிது! பாபா பாரதி செய்தது போல் நம்நாட்டுச் சமயாசாரியர் செய்ய முற்பட்டால் உலகத்திலுள்ள பொருளெல்லாம் மனித வர்க்கத்தின் துன்பம்நீக்கப் பயன்படும். அதிவீரராமபாண்டியனார் கூறியதுபோல் அதற்கான திறமையுடையார் வெளிநாடு செல்லவேண்டும். உள்நாடெங்கும் திரிந்து பிரசாரம் செய்யவேண்டும். அவ்வாறு

தக்கார் எவரும் செய்யாமையின், பிறசமயத்தார் செய்கின்றமையின் 'கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன், பொல்லாச் சிறகை விரித்தாடு'வதுபோல ஒரு கூட்டத்தார் செய்வதைச் சமயாசாரியர் கவனித்தல் நலம். ஒரு விவேகானந்தரும், தாகூரும், மகாத்மாவும் தோன்றிய நாட்டிலே 'சுயமரியாதைக்காளர்ன்' குடியரசுக் குடையாக விளங்க முயல்கின்றது! இதனைப் பார்த்துக்கொண்டிருக்கின்ற சமயாசாரியர்களைத் தர்மபுத்திரரென்று யாரும் இந்த நவீன பாரத சரித்திரத்தில் எழுதப்போவதில்லை! ஆனால், அருச்சுனன்போல் அறப்போர் தொடங்க ஆற்றலில்லையா என்று தான் பல பக்கங்களிலிருந்தும் கேட்கின்றனர்!

உலகத்திற் காணும் மதபேதங்களும் கடவுள் விஷயமான சண்டைகளும் குறைந்து, எல்லா மதஸ்தர்களும் சகோதர வாஞ்சையுடன், பரஸ்பர நேயமிகுந்து—விவேகம் வளரப் பெற்று ஒரே கடவுளின் மக்களென வாழவேண்டிய இவ்விருபதாவது நூற்றாண்டிலே "குட்டிக் கலகங்களையும் குப்பைக் கூளங்களையும்" வீடுகள்தோறும் நிறைத்து அதற்கு "குடியரசு-சுயமரியாதை" யெனப் பெயருமிட்டுப் பிதற்றித் திரியும் கூட்டத்திற்கு நாம் ஒன்றுகூற விரும்புகின்றோம். உங்களுக்குப் பன்முறையும் நல்லுரை வழங்கியாயிற்று! உங்கள் வழியில் சென்றால் எளிய மீன்களைப் பெரிய மீன்கள் விழுங்கும் பின்னேற்றந்தான் இந்தியாவுக்கு ஏற்படும்! நீங்கள் கனவு காண்கின்றவாறு எவ்வித முன்னேற்றமும் வாராது. முன்பின் ஆலோசனையின்றி இந்திய மக்களைத் துன்புறுத்தாதீர்! விவேகிகள் சம்மதிக்கும் அளவைகொண்டு வாதிட வாரும்! இல்லையேல் இந்தச் சூட்டுக்கோல்போன்ற பல சூட்டுக்கோல் தோன்றி உமது போலியியக்கத்தைச் சுட்டெரிக்கும்!

உண்மையாகவே நாட்டின் நலங்கோரி, விவேகிகளின் வழி நின்று ஒரு சில அளவையங்கீகரித்து வாதிட வருவீராயின் ஒரு முனிவர் இருக்கு வேதத்தின் முடிவிலே கானஞ்செய்கின்றவாறு "ஒருங்கே கூடுங்கள்! சேர்ந்து செல்லுங்கள்! சரியாகச்

செல்லுங்கள் ! ஒருவர்க்கொருவர் மனதையறிந்து பேசுங்கள் ! உங்களுடைய கூட்டமும் ஆலோசனையும் உள்ளமும் சிந்தனையும் ஒன்றாகுக ! பேதம் என்ற சிற்றாறுகளையெல்லாம் ஐக்கியம் என்ற அறிவுக்கடலிலே கொண்டு சேருங்கள் ! அதன் பயன் விடுதலை.! அஃதே உண்மையான குடியரசு ! ஆன்ம சுய ராஜ்யம் !" என்பதை நன்கு அறிவீராக !

உலகத்திற்குச் 'சாந்தவாழ்வை உபதேசித்த இந்தியாவில் பிறந்து 'கலகம்—நாஸ்திகக் கிளர்ச்சி' செய்து நாட்டின் பெயரையும், நாற்பது வருஷமாகச் செய்த ஒரு பெரும் ஒற்றுமையையும் அழிக்காதீர் ! அழிக்காதீர் !!

உருவத்திற் சிறிதாயிருக்கின்ற இப்புத்தகம் கருத்தில் பெரிதாக விளங்குகின்றது. எவ்விதச் சீர்திருத்த நோக்கங்களையும் கண்டியாது—ஆனால் வள்ளுவர் கூறியவாறு மக்களனைவரையும் அன்புமுறையில் நல்வழிப்படுத்திச் சகோதர உரிமை பூண்டு சாந்தமான நெறியில் அடுக்கடுக்கான திட்டமமைத்துத் தீமைகளின் மூலகாரணமுணர்ந்து மக்கள் யாவரையும் தூயவராக்குமாறு தூண்டுகின்ற இப்புத்தகம் தமிழர் யாவராலும் எற்றுப் படிக்கத்தக்க நூல்களில் ஒன்றாம் என்பது படிப்போர்க்கே நன்கு விளங்குவதாகும். நமது அருந்தமிழ் நேயர் ஆறுமுகம் பிள்ளையவர்கள் இதுபோன்று பல நூல்களை யெழுதி இளந்தமிழருக் குதவுமாறு வேண்டுகிறேன். திருவருள் துணை செய்வதாக !

தி. கோ. ராமபத்ர சர்மா,
'இந்துமதப் பிரசாரிணி' சபைத்தலைவன்,
34, கானுபாக் தெரு, சென்னை.

ஓம் சிவம்.

# முன்னுரை.

இந்நூற்குச் 'சுருங்கச்சொல்லல்' என்னும் அழகுபற்றிச் 'சுயமரியாதைக்கோர் சூட்டுக்கோல்' எனப் பெயரிடப் பெற்றிருப்பினும் இஃது உண்மைச் சுயமரியாதைக்கொரு சூட்டுக்கோலாகாதெனவும், 'சுயமரியாதை' என்று பெயரளவிலே சொல்லிக்கொண்டு செயலளவிலே நாட்டிடை அவமரியாதையைப் பரப்பும் போலிச் சுயமரியாதைக்கே சூட்டுக்கோலாகுமெனவுங்கொள்க. இனி, இந்நூலை எழுதப் புகுந்ததற்குக் காரணம் 'சுயமரியாதையினர்' என்று சொல்லிக் கொள்வோர்பாலுள்ள எரிவென எவருங் கொள்ளற்க. அவர்கள்மேலுள்ள அன்புமிகுதியே அதற்குக் காரணமென்பது இந்நூலின் பெயரளவிலேயே விளங்குவதாகும். வலிநோய் வுந்தார்பால் இரக்கமும் அன்புமுடையாரே அவர்க்குச் சூடிடுவரன்றி அவரல்லாதார் அங்ஙனஞ் செய்யார் என்பது அனைவருமறிந்தது ஆகலான். இந்நூலின்கண் எழுதப்பெற்றுள்ள பொருள்கள் ஆறு. அவை முறையே 'சுயமரியாதை', 'பிராமணரல்லாதார்', 'பகுத்தறிவு'' 'சமயகுரவர்', 'சமயம்', 'கடவுள்' என்பன. அவையிற்றைப்பற்றி ஏழையேற்குத் தெரிந்த அளவிலே மறுப்புக் கூறியுள்ளேன். அவைகளில் ஏதேனும் பிழையுளதெனஆன்றோர்காரணத்தோடு எடுத்துக் கூறுவரேல் அவருரையைச் சிரமேற்கொள்ளுதற்குத் தயாராகவிருக்கின்றனன். அன்றியும் இந்நூலில் பலவிடங்களில் இலக்கண வழுக்கள் காணலாகும். அவைகள் விரைவான கால அளவிற்குள் நூல் முடியவேண்டுமெனத் தூண்டப்பெற்றமையால் பிழை திருத்தம் முதலியன சரிவரப்பாராத குறைபாடுகளால் நிகழ்ந்தனவாகும். அவைகளை மறு பதிப்பில் திருத்தி

அச்சிடுதல் என்னுங் கருத்துடையேம். ஆதலால், அக்குற்றங்களையும், பிறகுற்றங்களையும் ஆன்றோர்பொறுத்தருளிப் பொருளில் கவனத்தைச் செலுத்தி,ஏழையேற்கு வாழ்த்துக்கூறுமாறு அவர்தம் பொன்னடிகளைப் பன்முறையும் பணிந்து விண்ணப்பித்துக்கொள்ளுகின்றனன். முடிவாக, இந்நூலுக்குச் சுயமரியாதையினர் எனச் சொல்லிக்கொள்வோரோ பிறரோ யாவரேயெனினும் காய்தல் உவத்தலின்றி நடுநிலைநின்று மறுப்புரை கூறுவரேல் ஏழை அவருரைகளை அருளுரைகளாகக் கொண்டு தக்க பதிலளிக்கும் கடமையையுடையேன். அங்ஙனமின்றிச் சிற்றினமொழிகளால் வசைபாட முன்வருவாரைப் பற்றிக் கவலைப்படவும் ஏழையேற்குக் கருத்தில்லை. பதிலாக வசைபாடுதலையும் மேற்கொள்ளப் போவதில்லை.

ஏழை எழுதிய இந்நூலையும் வெளியிடுவதற்கென முன்வந்த என் அன்பிற்குரிய நண்பர் திருவாளர் பெ. வ. கண்ணப்ப முதலியாருக்கு எனது மனமுவந்த நன்றியறிதலைச் செலுத்துவதன்றி, அவர்க்கு இறைவன் எல்லா நலன்களு முதவுவதோடு வாழ்நாட்பெருக்கு முதவ வேண்டுமென அவ் இறைவன் பாத மலர்களைப் பன்முறையும் இறைஞ்சுகின்றனன்.

குற்றம் பொறுக்க ! குணங் கொள்க.

அன்புள்ள

ஆறுமுகம்.

1493
(7250)

# சுயமரியாதைக்கோர் சூட்டுக் கோல்.

## சுயமரியாதை

'சுயமரியாதை' நாட்டிற்கு நலனளிக்கப் போகிற தெனக் கூறுகின்றனர் ஒரு சாரார்; பிறிதொரு சாரார் அது கேட்டினை யளிக்கப் போகிறதெனப் பேசுகின்றனர். பின்னையோர் கூற்றே நமக்கு உடன்பாடு. ஆதலால், அதைப்பற்றிய ஆராய்ச்சியை இப்பகுதியில் விளக்கத் துணிந்தோம்.

ஒரு இயக்கத்தைப்பற்றி ஆராயப்புகு முன்னர் அவ்வியக்கத்தின் தலைவரைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுவ தவசியமாகும். காரணம், தலைவரின் காரியமே இயக்கமாதலால் என்க. சுயமரியாதை இயக்கத் தலைவர், ஈரோடு திருவாளர் ஈ. வே. இராமசாமி நாயக்கரவர்கள். இப்பெரியாரைத் தமிழ்நாடு தெரிந்துகொண்டதற்குக் காரணமாக நின்றது மகாத்மா காந்தியடிகளால் எழுந்த ஒத்துழையாமை இயக்கமே. அவ்வியக்கத்தில் அன்பர் நாயக்கர் சேர்ந்து தொண்டாற்றிப் புகழ்பெறுவதற்குக் காரணர்கள் இருபெரியார். அவருள் ஒருவர் நமது டாக்டர் திருவாளர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள்; மற்றொருவர் நவசக்தி ஆசிரியர் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் என்பதைத் தமிழுலகம் நன்கு அறியும். இங்ஙனமாகத் தேசிய இயக்கத்திலீடு பட்டு வெளிவந்த நமது அன்பர் நாயக்கர் அந்நாள் நாட்

டிற்குப் பெருந்தொண்டாற்றி வந்தார் என்பதும் தமிழுலகு அறிந்ததே. அதனால் நாயக்கரவர்களின் புகழ் கதிரவன் ஒளிபோல் நாட்டிடைப் பரவலாயிற்று. இராமசாமி நாயக்கரவர்களைப் போற்றுபவரே தமிழகத்தில் மிக்கிருந்தாரென்பதும் மிகையாகாது. அவ்வியக்கத்தினால் அன்பர் நாயக்கர் இரண்டு மூன்று முறை சிறைச்சாலைக்கும் சென்றுள்ளார். இந்நிலையில் தேசிய மகா சபைத் தலைவர்களையும் பிறரையும் ஒவ்வொருவராக அரசாங்கத்தார் சிறைச்சாலைக்கு அனுப்புவாராயினர். இறுதியில் மகாத்மாகாந்தியடிகளும் சிறைவாசத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. காந்தியடிகள் சிறை சென்றதும் தேசிய சபையை நடத்தவேண்டிய 'தலைமைப் பொறுப்பு தேசபந்து சித்தரஞ்சன தாஸருடையதாயிற்று. அவர் ஒத்துழையாமைக்கு மாறாக, சட்டசபை நுழைவு வேண்டுமெனத் தாம் தலைமை வகித்த தேசிய மகாநாட்டின்கண் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார். அப்பொழுது தீவிர ஒத்துழையாதார் என்னும் பெயரோடு திரு. இராஜகோபாலாச்சாரியார், இராமசாமி நாயக்கர், முதலானோர் அத்திட்டத்தை எதிர்த்தனர்.

இங்கு அன்பர்கள் ஒன்றைக் கவனித்தல்வேண்டும். தேசபந்து தாஸர் என்பவர் எத்தகையவர் என்பதைத் தமிழ்நாட்டிற்கு நாம் இப்பொழுது எடுத்துக் கூறவேண்டியதில்லை. அவர்களுடைய உண்மைத் தியாகத்தையும், வீரத்தையும், தமிழ்நாடு முன்னரே அறிந்திருக்கின்றது. அத்தகைய மாபெருந்தலைவரான தேசபந்து தாஸர் சட்டசபை நுழைவுவேண்டுமென்றார்; நமது நாயக்கர் முதலானோர் அதனை மறுத்தனர் என்று முன்னமே கூறியுள்ளோம். எதற்காக இவர்கள் அதனை மறுத்தார்கள் என்றால் அது மகாத்மாவின் கொள்கைக்கு மாறுபட்டது

என்னும் ஒன்றுகொண்டே என்பதை எவரும் மறுக்க முடியாது. இவர்கள் மறுத்தும் அப்பெருமானுர் தமது திட்டத்தை நிலைநிறுத்தியதற்குக் காரணமென்ன கூறினர். மகாத்மாகாந்தியடிகள் சொல்லைக் கேட்டுத்தான் நானும் மாதமொன்றுக்கு ஆயிரக்கணக்காக வந்துகொண்டிருந்த பெரும் ஊதியத்தை விடுத்து ஒத்துழையாமையை மேற்கொண்டேன். ஆனல் இப்பொழுது சட்டசபை நுழைவு நமக்கிருந்தாற்ருன் நம்முடைய இயக்கம் வலுவடையுமென்று எனது ஆராய்ச்சியின் முடிவு கூறுகின்றது. அம்முடிவினல் நன்மை பயக்குமென்றே நான் எண்ணுகின்றேன்; ஒரு இயக்கமானது காலநிலைக் கேற்ற திட்டங்களை மேற்கொண்டு நடக்க வாரம்பித்தாற்ருன் நன்மையையளிக்கும். மகாத்மா அப்பொழுது நுழைவு கூடாதென்ருர்; எனக்கும் அக்காலத்தில் அது பயனளிக்குமென்றே தோன்றியது. அதனையே மேற்கொண்டொழுகினேன். இப்பொழுது நுழைந்தாற்ருன் பயனளிக்குமெனத் தோற்றுகின்றது; ஆதலால் அத்திட்டத்தை நிலைநிறுத்துவேன் என்று இவர்களின் மறுப்பைச் சிறிதும் ஏற்றுக்கொள்ளாது தானும் தேசீய சபையைவிட்டு விலகி 'சுயராஜ்யக்கட்சி' என்னும் ஒரு புதுக்கட்சியினைத் தோற்றுவித்துக்கொண்டு தம் செயலை நடத்த முந்தினர். தேசீய சபை சரியான தலைவனெருவனில்லாது மாலுமியில்லாத மரக்கலம்போலத் தவிக்க ஆரம்பித்தது. ஒன்று தாஸர் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் அவர் தேசீய மகா சபையைத் தீவிரமாக நடத்தி யிருப்பர். அங்ஙனமின்றி எதிர்த்தாய்விட்டது. பின்னர்த் தேசீய சபையைக் காக்கவேண்டிய பொறுப்பு யாரிடத்திலிருக்கின்றது என்று பார்ப்போமானல் தாஸரையும், அவரது திட்டத்தையும் எதிர்த்தவர்களிடத்திலேயே அப்பொறுப்பு இருக்

கிறதென்பதை நாம் அறியலாம். பொறுப்புடையவர்கள் இவர்களாயின் தேசிய இயக்கத்திற்கு அல்லும் பகலும் உழைக்கவேண்டியதிலும், அதனை முன்னுக்குக்கொண்டு வரவேண்டிய பொறுப்பிலும் முன்னிருக்கவேண்டியவர் கள் இவர்களேயன்றோ? இப்பொழுதுதான் நமது அன்பர் இராமசாமி நாயக்கர் நாட்டை இரண்டுபிளவு படுத்தி விட்டுத் தமக்குத் தேசிய மகா சபையிலுள்ள சில பார்ப் பனரிடத்து உண்டான ஆற்றாமை காரணமாக நாட்டிலே யுள்ள பிராமணர்கள் அனைவரையும் எதிர்க்கவேண்டி இச் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார் என்பது தான் அன்பர்கள் கவனிக்கவேண்டியதாகும். அந்தோ! தாஸரையும் விடாது, தாமும் நிற்காது, அநேர்டும் நில் லாது சாதிச்சண்டையை மத்தியில் இழுத்துக்கொண்டு வந்துவிட்டு நாட்டையலைத்த நமது அன்பர் நாயக்கர் செயல் கொடுமையுடையது; கொடுமையுடையது. இங்கு நூல்கள் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். 'பகுத்தறிவு' ஒன்றே சாலுமெனக் கூறுகின்ற அன்பர் நாயக்கரவர்களை ஒன்று கேட்கிறோம். தாங்கள் சொல்லுகின்றபடிப் பகுத்தறிவு ஒன்றே சிறந்ததென்பதை ஏற்றுக்கொள் வோம். ஆனால் நீவிர் கூறுகின்ற பகுத்தறிவு ஒரு காலத் துக் கொருமாதிரியாக மாறுகின்ற இயல்புடையதுபோ லிருக்கிறதே; அதனை உயர்ந்ததென நாங்கள் கொள்வ தெப்படி? ஒரு காலத்துத் தேசிய இயக்கமே சிறந்ததென உமது பகுத்தறிவு கூறியது; மகாத்மாகாந்தி யடிகளே உலகிற் பெரியார் என்றும் வழுத்தியது. பிறிதொரு காலத் தில் தேசிய இயக்கத்தைக் காட்டிலும் ஒரு மோசமான இயக்கத்தை நான் காணவில்லையெனவும், மகாத்மாகாந்தி யடிகள் குறைவுடையவரெனவும் கூறுகின்றது. இங்ஙன மாகக் கூறுகின்ற தங்கள் பகுத்தறிவின் கூற்றுக்களில்

எதனை நம்புவது? முன்சொன்னதற்குப் பின்சொன்னது முரணாகவிருக்கிறதே. முன்னரும் பகுத்தறிவுகொண்டு தானே தாங்கள் அம்மாதிரிக் கூறினீர்கள். இப்பொழுதும் பகுத்தறிவுகொண்டு தானே சொல்லுகிறீர்கள். இதற்கு முடிவு என்ன? என்றே அன்பர் நாயக்கரை வினவுகின்றோம். இல்லை; இல்லை. இப்பொழுது நான் சொல்லுவதே பகுத்தறிவுகொண்டு சொல்லுவது என்னும் தங்கள் கூற்றை ஒப்புக்கொள்ளவேண்டின் முன்னர்த் தாங்கள் கூறியனவெல்லாம் முட்டாள் தனமாகவே கூறியவை யென்று தானே நாங்கள் கொள்ளவேண்டும். முன்னர்க் கூறியது முட்டாள் தனமென நீங்கள் கூறுகின்றீர்கள்; இப்பொழுது கூறுவதுதான் முட்டாள்தனமென நாங்கள் கூறுகின்றோம். முடிவு காண்பதெப்படி? இதுநிற்க,

நமது நாடு மிகத் தொன்மையது; நம் நாடே எல்லா வகையான நலன்களையுமுடையது என நம் நாட்டு அறிஞரே யன்றிப் பிறநாட்டு அறிஞரும் கூறுவதிலிருந்தே இது தெளியப்படும். நம் நாட்டில் எல்லாநாட்டு மக்களும் குடியேறியுள்ளார். எல்லாநாட்டு மக்களையும், எல்லா மொழிகளையும் நம் நாட்டில் காணலாம். இப்படிப் பல நாட்டவரும் பல நாட்டு மொழிகளும் விரவியிருக்கின்ற நம் நாடு அவ்வவர்களின் பழக்க வழக்கங்களையும், மொழிகளையும் மேற்கொள்ள ஆரம்பித்தது. காரணம் பெற்றதில் வெறுப்பும், பெறாததில் விருப்பும் உடையவர் மக்களாதலினாலே நமது நாட்டுப் பழக்க வழக்கங்களையும், மொழியினையும் விடுத்து அந்நாட்டவர் பழக்க வழக்கங்களையும், மொழிகளையும் மேன்மை யுடையனவென்று நம் நாட்டு மக்கள் மயக்கத்தால் எண்ணி அவ்வழிகளில் மிக விரைந்து செல்ல ஆரம்பித்தனர். அதனால் நம் நாடு புராதன மேன்மையை இதுபொழு திழந்து பல வகையில்

தாழ்வினையடைந்து நிற்கின்றதென்பதை மறுக்கவல்லா ரொருவருமில்லை. போதாக்குறைக்கு நமது அன்பர் நாயக்கர் ஒரு நாஸ்திக இயக்கத்தை ஆரம்பித்தார். அதன் கண் பிறநாட்டுப் பழக்க வழக்கங்களிலும், மொழிகளி லும் ஆசைவைத்து, அது காரணமாக நம் நாட்டுப் பழக்க வழக்கங்களையும், மொழியினையும் இகழ்ந்துகொண்டிருந்த மக்களனைவரும் சேருவாராயினர். சேரவே, நண்பர் நாயக்கர் தமது சுயமரியாதைக் கட்சி மிக உயர்ந்ததென எண்ணி இறுமாந்து திரியலானார். இதுதான் நாயக்க ரவர்களின் சரித்திரம்.

இச்சரித்திரத்தால் நாம் அறிவது என்னை 'என்றூற் கூறுதும். நாயக்கரவர்கள் திடமான ஒரு கொள்கை யுடையாரல்லர்: சமயத்திற்குத் தக்கபடி அதாவது அப் பொழு தப்பொழுது தமது அறிவு எப்படி யெப்படிக் கூறுகிறதோ அப்படி அப்படியெல்லாம் போய்க்கொண் டிருப்பவர் என்பதும், இச் சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்ததற்குத் தேசிய மகா சபையிலுள்ள சில பார்ப் பனரிடத்து அவர்க்குண்டாய எரிவே காரணமென்பதும் நமக்கு வெளிப்படையாகத் தோற்றுகின்றன வன்றோ? திடமான ஒரு வழியை மேற்கொள்ளாத ஒருவர்க்கு நமது நாட்டில் சிறிதும் மதிப்பு கிடையாது. அவர் சொல்லுவதை எப்படித்தான் நாம் நம்புவது. இன்று ஒன்று நல்லதெனக் கூறுகின்றவர் நாளை அதற்கு மாறான மற்றொன்று நல்லதெனக் கூறினால் அவருரையை மக்க ளுலகம் எவ்வாறு கைக்கொள்ளுதல் முடியும். இன்னும் எப்படி யெப்படி மாறுவரோ என்றும் எண்ணவேண்டி யிருக்குமன்றோ? அன்று ஒத்துழையாமை இயக்கமே சிறந்ததென அறைகூவித் தமிழக மக்களை அழைத்தார்; எல்லாரும் நாயக்கர் பேச்சைக் கேட்டு ஒத்துழையாமை

இயக்கத்திற்குத் தங்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்தனர். இன்று நேர் மாறான சுயமரியாதை இயக்கமே தலை சிறந்ததெனத் தமிழக மக்களின் பொருளையும் பிறவற்றையும் பறிக்க வாரம்பித்துள்ளார். இவரையும், இவர் இயக்கத்தையும் நாம் எவ்வகையில் உயர்ந்தவரெனவும், உயர்ந்ததெனவும் கூறுதல் முடியும்.

இனி, அவ்வியக்கமாவது நல்லதா என்பதைப்பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்வோம். அவ்வியக்கத்தின் முக்கிய நோக்கம் மக்கள் அனைவரும் பிறப்பினாலும் சிறப்பினாலும் ஒரு திறத்தவரே என்பதாகும். பிறப்பினால் மக்கள் அனைவரும் ஒரு திறத்தவர் என்பதை மறுப்பவன் மக்களுலகத்திற் கிடையாது; அங்ஙனமே சிறப்பினாலும் மக்கள் பேதமுடையா ரல்லரென்பதை ஒப்புக் கொள்பவனும் அவ்வுலகத்திற் கிடையாது. எல்லா நாட்டுத் தாய்மார்களும் குழந்தைகளைப் பத்துமாதம் சுமந்தே பெறுகிறார்கள். பிறவும் எல்லார்க்கும் ஒத்தனவே. ஆதலினால் பிறப்பினால் உயர்வு தாழ்வில்லையென்பதை மறுக்க முடியாது. சிறப்பு அதாவது அவரவர்களுடைய செயல்களைப்பற்றிப் பார்க்கும்பொழுது ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி செயலுடையாராகத்தானே தோற்றுகின்றனர். அப்படித் தோற்றுங்காலத்து நாம் எப்படி அவர்களனைவரையும் ஒரு திறத்தவரெனக் கூறுவது. ஒத்தவரெனக் கூறுவதில் இழுக்கென்னையென்றால் பெரிதும் இழுக்கு அதனிடத்திருக்கின்ற தென்பதை நாம் கூறக் கடமைப்பட்டுளோம். ஒரு மனிதன் இரவோர்க்கீந்து வாழ்கின்றான்; பிறிதொருவன் மற்றையோரிடத்து இருக்கும் பொருள் முதலியவற்றை வௌவிக்கொண்டு வாழ்ந்து வருகின்றான்; இவ்விருவரையும் நாம் எப்படி ஒருதிறத்தவரெனக் கூறமுடியும். இங்ஙனமே, நல்லொழுக்கமுடை

அடையாறு; சென்னை-20

யவர்களும், தீயொழுக்க முடையவர்களும் ஒன்ருவர் என்று நாம் கூறமுடியுமா?

கொலைபுரியாதவன் உயர்ந்தவனே; அதனைப் புரிகின்றவன் தாழ்ந்தவனே; புலையுண்ணுதவன் உயர்ந்தவனே; உண்ணுபவன் தாழ்ந்தவனே. ஆசாரமும் பிற நல்லொழுக்கங்களும் உடையவரை மேலோராகவும், அல்லாதாரைக் கீழோராகவும் பிரிக்கின்றது நமது நாடு. இப்பிரிவு கூடாதென்பவர் செய்யவேண்டுவதென்ன? பிரிவினைக்குக் காரணமெதுவோ அதனைக் களைவதேயன்றே? அக்காரணத்தையும் களையமாட்டேன்; உயர்வு தாழ்வும் கூடாது என்று கூறுதல் பகுத்தறிவுடைய மக்களுக்குப் பொருந்துமோ? இது நோயை இன்னதென அறியாது ஏதேதோ மருந்துகளைக் கொடுத்து மனிதனைக் கொல்லுகின்ற ஒரு வைத்தியனின் செயலை ஒத்திருக்கின்றதல்லவா? இதுநிற்க, மக்கட்கு ஒழுக்கம் இன்றியமையாததாகும். இக்கருத்தினைச் சுயமரியாதை இயக்கத்தினரும் ஒத்துக்கொள்ளுகின்றனர். ஒத்துக்கொள்ளுகின்ற அவர்கள் செயற்கையினுல் உயர்வு தாழ்வு கூடாதெனக் கூறுதல் நமக்குப் பெருவியப்பாகவே யிருக்கின்றது. ஒழுக்கத்தை நிலைநிறுத்த வேண்டுமாயின் என்செய்தல் வேண்டும்; என் செய்தனர் முன்னேர் என்று பார்ப்போமாளுல் ஒழுக்கமுடையார்க்கு உயர்வும், அஃதிலார்க்குத் தாழ்வும் உண்டென்பதை மேற்கொள்ளவேண்டும். மேற்கொண்டாற்ருன் உயர்வுண்டென ஒழுக்கத்தை மேற்கொள்ள மக்கள் முந்துவர். தாழ்வுண்டென ஒழுக்கக் குறைவை மேற்கொள்ளப் பின் வாங்குவர். உதாரணமாக ஒன்று கூறுவோம். அரசாங்கத்தார் திருடுதல் கூடாது; ஆனல் திருடியவர்க்குத் தண்டனைகிடையாது எனக் கூறுகின்ருர்கள் என்று வைத்துக்கொள்வோம். மக்களுள் எவரேனும்

திருடுவதற்காக அஞ்சுவரோ? திருடினுல் தண்டனையுண் டென்னும் இக்காலத்திலேயே சிறைச்சாலை நிறைந்து போம்படி நாள்தோறும் பலர் அதனையே தொழிலாகக் கொண்டுள்ளார்களென்றுல், தண்டனை யில்லையென்றுல் அதைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? இதுபோலவே, ஒழுக்கமே உயர்வுக்குக் காரணம்; அஃதின்மையே தாழ்வுக்குக் காரணம் என்றிருக்கின்ற இந்நாளிலேயே ஒழுக்கமுடையார் விரல்விட் டெண்ணத்தக்கவர் நாட்டிடையுள்ளார் என்றுல், உயர்வு தாழ்வென்பது இல்லையென்று போய்விடின் ஒழுக்கத்தை மேற்கொள்ளுவாரைக் காணுதலே அரிதாகிவிடும். இதனுற்றுன் ஆன்ருேர்கள் ஒழுக்கம் நிலவவேண்டுமாயின் அதற்கு உயர்வு தாழ்வு இருந்தே தீரவேண்டுமெனக் கூறிப் போந்தனர். இதனைத் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் தமது அரிய நூலிலே,

“பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்”

என்று கூறுகின்ருர். ஆதலினுல் பிறப்பினுல் உயர்வு தாழ்வுண்டென்பது அடியோடு தொலையவேண்டு மென்பதும், சிறப்பினுல் உயர்வு தாழ்வுண்டென்பது நிலைபெருக இருந்து தீரவே வேண்டுமென்பதும் முடிவாகின்றன. இவையிற்றை விடுத்துச் சிறப்பினுலும் உயர்வு தாழ்வுண் டென்பது தவறெனக் கூறுகின்ற இயக்கம் ‘சுயமரியாதை’ இயக்கமன்று; அதனை யொழித்து மக்களிடையில் அவமரியாதையினை நிலைநிறுத்த வந்த ஒரு பாழும் இய்க்கமே யென்பதும் புலனுகின்றதன்ருே? இனி, பிராமணர், பிராமணரல்லாதார் என்னும் இரண்டு பிரிவுபடுத்தி அவ்விருவருள் முன்னையோர் விலக்க வேண்டியவர்; பின்னையோர் கொள்ளவேண்டியவர் என்று கூறுகின்ற சுயமரியாதையின் கொள்கையைப்பற்றி ஆராய்வாம்.

# பிராமணரல்லாதார்.

இது நம் நாட்டிடை நாத்திகத்தைப் பரப்பும் சுயமரியாதைக் கொள்கைகளில் முட்டாள் தனமான கொள்கையென்பது நமது கருத்து என்னை? உலகத்து மக்கள் அனைவரும் ஒரு திறத்தவரே; அவர்களுள் உயர்வு தாழ்வென்பதே இருத்தல் கூடாதெனக் கூறுகின்றனர் சுயமரியாதைக்காரர்களென முன்னரே கூறியுள்ளோம். அக்கொள்கையையும், இக்கொள்கையையும் ஒக்கவைத்துப் பார்ப்போமாயின் முன்னையதற்குப் பின்னையது முரண்பாடுடையது என்பதனை நாம் அறியலாம். எவ்வகையினும் மக்களுள் எவ்விதமான பிரிவும் கூடாதெனக் கூறுவார்க்குப் பிராமணர், பிராமணரல்லாதார் என்னுங் கொள்கை எவ்வாறு பொருத்தமுடையதாகும். பிராமணர் மக்கள் வகுப்பைச் சேராதாராயின் அவர்கள் கொள்கை சரியாம்; இல்லையே! அவர்களும் மக்களினத்தவர்தானே. அப்பொழுது எப்படி அவர்களை வேறு பிரித்துத் தாழ்வாகக் கருத முடியும்? அவர்கள் மக்களினத்தவர்க்குத் தீங்குசெய்கின்றனர்; ஆதலால் அவரை விலக்கினோம் என்று கூறினால்; தீயதையோ அன்றி நல்லதையோ எதைப் புரிந்தாலும் உயர்வு தாழ்வென்பது இருத்தல் கூடாதெனும் கொள்கைக்குப்பொருளுண்டோ? அவரையும் விலக்கித் தள்ளாது சேர்த்துக்கொள்ளுதலே அவர் கொள்கைக்குச் சால்புடையதாகும். இன்னும் ஒரு விஷயம் இதிலுளது. தீமை செய்கின்றனரென்றுவது செய்கின்ற பிராமணரை விலக்கித் தள்ளினால் அது கூடச் சிறிது பொருத்தமென்னலாம். அப்படியுமில்லை; பிராமணராகப் பிறந்ததனாலேயே அவர்கள் இவர்களால் விலக்கப்படுகின்றார்கள். பிறப்பினால் ஒருவனைப் பறையனென்று

தள்ளுதல் குற்றமெனக் கூறுகின்ற தாங்களே பிறப்பினுல் ஒருவனைப் பார்ப்பனனென ஒதுக்கித் தள்ளுதல் தான் பகுத்தறிவுடைய செயல்போலும். உலகிலுள்ள மக்களுள் ஒரு கூட்டத்தவர் கெட்டவர் என்று சொல்வது மடமை; மடமை. சிலர், திருச்சிணுப்பள்ளி போக்கிரி ஊர், புதுக் கோட்டை போக்கிரி ஊர் எனச் சொல்லித் திரிவர். அவர் தம் கூற்று எவ்வளவு சிறப்புடையதோ அவ்வளவு சிறப்புடையது பிராமணர் அனைவரும் கெட்டவர் என்று சொல்லுகின்ற சுயமரியாதைக் கூற்று. பிராமணரை மட்டும் தள்ளினுரோ சுயமரியாதைக் காரர்கள் என்றுல், இல்லை; இல்லை. 'பிராமணர்' என்று கூறுகின்ற நூல்களை யும் தள்ளிவிட்டனர் அவர்கள். என்னே விந்தை; இப்படி ஒரு பொருமை ராஜ்ஜியம் நமது நாட்டில் தோன்றுமென நாம் கனவினும் கருதவில்லை. திருக்குறள்,

> "அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
> செந்தண்மை பூண்டொழுக லான்."

என்று கூறுகின்றது. ஆசிரியர் பரிமேலழகர் உரை கூறுவார், 'எல்லா வுயிர்கள் மேலும் செவ்விய தண்ணளி யைப் பூண்டொழுகலான் அந்தணரென்று சொல்லப் படுவார் துறவறத்தினின்றவர்' என்று கூறுகின்றுர். 'அந்தண ரென்பது அழகிய தட்பத்தினை யுடையாரென ஏதுப்பெயராகலின், அஃது அவ்வருளுடையார் மேலன்றிச் செல்லாதென்பது கருத்து' என மேலும் அப்பெருமாணுர் கூறியிருத்தலை அன்பர்கள் நோக்கல் வேண்டும். உரை இவ்வாறிருப்பதைச் சுயமரியாதையின ரறிந்தாலன்றே? திருக்குறளில் கூறப்பெற்றிருக்கும் அந்தணர் வேறு; அவர் தம் செய்கையால் சிறப்பினை யுடையார்; பிறப்பினுல் உயர்வுடையரல்லர். ஆதலால் நாம் கூறுகின்ற பார்ப்பனரை வள்ளுவர் ஒன்றும் உயர்த்திக்

கூறவில்லை யென்பதை உணர்வர். அந்தணர் என்று திருக்குறளில் சொல்லி யிருக்கின்றதல்லவா? உயர்வா யிருந்தாலும் இருக்கட்டும்; தாழ்வா யிருந்தாலும் இருக்கட்டும். அந்தணர் என்று எப்படி அந்நூல் கூறலாம்? அதனை முதலில் தீயிலிடுங்கள்; அப்பொழுதுதான் நமது அடிமை தீர்ந்து தொலையும்; நமக்கு வானநாட்டரசு கிட்டும் என்றெல்லாம் கூறிக்கொண்டு போகின்ற சுயமரியாதைக் கட்சியினரைப் பற்றி நாம் என்ன சொல்லக் கிடக்கின்றது. இப்படியே பிற நூல்களையும் பிராமணர் என்ற ஒரு பதத்தை மேற்கொண் டிருந்தால் போதுமானது. அவைகளை யெல்லாம் தீக் கிரையாக்க முந்துவர் அவர்கள். நூல்களை மட்டுமோ அவர்கள் இக்கருத்துக் கொண்டு தள்ளினர்; நமது சமய குரவர்கள் நால்வருள் திருநாவுக்கரசர் ஒருவரை விட்டு விட்டு மற்ற மூவரையும் சுயமரியாதைக் காரர்கள் வசைச் சொன்மாலைகளால் அலங்கரிப்பதும் இதுகொண்டே யென்பதை அனைவரு மறிவர். 'வாழ்க வந்தணர்' என்று ஞானசம்பந்தர் சொல்கின்றார். "வேத வேள்வி நிந்தனை" என்றுஞ் சொல்கிறார். அவர் எப்படிக் கூறலாம். சுந்தரரும், மணிவாசகரும் அப்படியே. ஆதலால் அவர்களைப் போற்றுதலையும், அவர்கள் நூல்களைப் போற்றுதலையும் விட்டொழித்தல் வேண்டு மென்கின்றனர். மேலும், இப்பார்ப்பனரைச் சேர்ந்தவர்கள் தாமே அம்மூவரும். ஆதலினாலும் அவர்கள் விலக்கவேண்டியவரே என்றும் கூறுகின்றார். அப்படியாவது இச் சுயமரியாதையினர் குற்றமுடையாரெனக் கூறுகின்ற கூட்டத்தையாவது சேர்ந்தவர்களா மூவர்கள் என்று சிந்திப்போமானால், அவர்கள் ஆரியப் பார்ப்பனரன்று; தமிழந்தணரே; வேளாளருள் கடவுட் தொண்டிற்கென ஒதுக்கி உயர்த்தி வைக்கப்பட்டவரே யென்பதை நாமறிய

லாம். அல்லாமலும் அவர்களிடத்தில் இவர்கள் கூறு கின்ற குற்றங்கள் ஒன்றுமில்லையே.

"மாதொரு பாக னார்க்கு வழிவழி யடிமை செய்யும்
வேதியர் குலத்துட் டோன்றி மேம்படு சடையனாருக்
கேதமில் கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானி யார்பாற்
றீதகன் றுலக முய்யத் திருவவ தாரஞ் செய்தார்."

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிறப்பினைப் பெரிய புராணங் கூறுகின்றது. வேளாளருட் பூசைக்கெனப் பிரித்து வைக்கப்பட்டவர் தமிழந்தண ரென்பதனை, 'மாதொரு........வேதியர்' என்னும் தொடர் வலியுறுத்து கின்றதன்றோ? இனி அவர்கள் பால் இவர்கள் கூறும் குற்றங்களுளவோ என்று பார்ப்போம். சடையனார் தமிழ் அந்தணராயிருப்ப, சுந்தரரை விரும்பிக் கேட்ட நரசிங்கமுனையரென்னும் அரசனாகிய தம்மிலுங் குறைந் தானுக்கு ஒருவிதத்தடையுமின்றி சடையனார் மகவாக நல்கினார். அவர்களிடத்துப் பேத உணர்வு யாண்டுளது? நோக்குங்கள். இது ஒன்றுதானோ? சுந்தரமூர்த்தியார் பரவையாரையும், சங்கிலியாரையும் மணந்துகொண்டது பேத உணர்வுகொண்டா? இல்லையே! பின்னர் ஏன் அவ் வந்தணரை—அவ்வந்தணர் மரபிலுதித்த எங்கள் பெரு மானை-சுந்தரனைப்பழித்தலும் இழித்தலுங் கூறவேண்டும். திருஞானசம்பந்தர் பாணரை உடன் வைத்துக்கொண் டிருக்க வில்லையோ? பார்ப்பானென்று சொன்னால் உடனே விலக்கிவிடுவதுதானோ? இது அவர்கட்கு இருக் கும் ஒரு உண்மையைப் புலப்படுத்துகின்றது. தமிழர் களிடத்துச் சுயமரியாதையினர்க்கு அன்பு கிடையாது; பார்ப்பனரிடத்து வன்பிருக்கிறது; அவ்வன்பினைத் தீர்த்துக்கொள்ளத் தமிழர் நன்மை நாடுகிறோமென வெளிவேஷ மிடுகின்றனர் என்பதை நன்கு இது எடுத்

துக்காட்டுகிறது. இனிப் பிராமணர் செய்த நூல்கள் எவ்வளவு உயர்வுடையவையா யிருந்தாலும் சரி; தள்ள வேண்டியவையே என்றுங் கூறுகின்றனர். யார் செய்த நூலாயிருந்தாலென்ன? நல்லனவாயிருந்தால் கொள்ள வேண்டுவதும், தீயனவாயிருந்தால் தள்ளவேண்டுவதுமே அறிஞர் கடனாகுமன்றிப் பிராமணர் செய்ததற்காகத் தள்ளுவது; இன்னொருவர் செய்ததற்காகத் தள்ளுவது என்றகொள்கை அறிஞர்க்கு உடன்பாடாகாதாம். சைவ வைணவர்கள் தங்கட்குச் சமணர்கள் பகைவர்களா யிருந்தும் அவர்கள் நூல்களைப்பயின்று போற்றிப் புகழு கின்றனர். மகமதியர் இராமாயணத்தையும், பாரதத்தை யும், திருக்குறளையும் இவைபோன்ற பிற நூல்களையும் கற் கின்றனர். கிறிஸ்தவரும், ஆங்கிலேயரும் இப்படியே நம் முடைய நூல்களைக்கற்பதும், நாம் அவர்களின் நூல்களைக் கற்பதும் எதனைக்காட்டுகின்றன? ஆட்பகை நூலின் கட் கிடையாது; அதன்கண் நல்லன விருந்தால் கொள்ள வேண்டுவதே என்பதனையன்றோ? இப்படியே பார்ப்பன ரென்றால் உத்தியோகங் கொடுக்கக் கூடாது என்றும் சொல்லுகின்றனர். எந்தக் கொள்கைக்கும் சுயமரியாதை யினர் காரணம் கண்டுபிடிக்காது போதல்தான் நமக்குப் பெருவியப்பைத் தருகின்றது. பிராமணருக்கு உத்தியோ கங் கொடுப்பதற்குக் காரணமென்ன? கல்வியுடைமையே யன்றோ? நம்மக்களுக்குக் கொடுக்காதிருத்தற்குக் காரணம் அஃதின்மையேயன்றோ? இஃதுண்மையாயின் தமிழர் நன்மை நாடுவோர் என்ன செய்தல்வேண்டும்? தமிழர்கள் கல்வித்தேர்ச்சி யுடையவர்களாக முயற்சி யெடுத்துக் கொள்ளவேண்டும். கல்வியுடையவர்களாகத் தமிழர்வருங் காலத்து உத்தியோகங்களைக் கல்விக்காகக் கொடுப்பவர் கள் அப்பொழுது அவர்க்குக் கொடுத்துவிடுவர். அதனை

விடுத்துப் பிராமணர்க்கு உத்தியோகம் கொடுக்கக் கூடா தெனக் கூறுதற்குப் பொருளென்ன? பிராமணரை எவ்வழி யிலும் கெடுக்கவேண்டும் என்பதுதானே! சைவர்கள் குறு கிய நோக்கமுடையவர்கள்; மற்றவர்கள் குறுகிய நோக்க முடையவர்கள்; நாங்கள் மட்டும் பரந்த நோக்க முடை யேம் என்று கூறுகின்ற சுயமரியாதைக் குழுவினர் மக்க ளுள் ஒருபிரிவாராய பார்ப்பனரைக் கெடுக்கவேண்டுமென நினைப்பது, சாலச்சிறந்த பகுத்தறிவுக் கேற்ற பரந்த கொள்கைபோலும்! சைவர்களாவது திருநீறும், உருத்தி ராக்கமு மணிந்து உமையொருபாகத்தவனைக் கடவுளாகக் கொள்ளுவோர் யாவரே யென்னினும் அவர்கள் சைவர் களே என்னும் பரந்த நோக்கைக் கொண்டுள்ளார். இவர் கள் எந்தப்பரந்த நோக்கமுடையார்? பிராமணர் எந்நல முடையவராயினுஞ் சரியே, அவர் தள்ளத்தக்கவரே; தமி ழரினும் இக்கொள்கையை ஆதரிப்பவரே எம்முடன் சேர்ந்தார்; அவரல்லாதாரும் தள்ளத்தக்கவரே என்று கூறுகின்ற பரந்த நோக்கத்தைத்தான் கொண்டுள்ளார். விந்தை! இதுவும் ஒரு பரந்த நோக்கந்தானோ? இனித் தீண்டாமைவிலக்கு வேண்டுவதே. அதனை மறுப்பவன் மனிதனன்று; மாவினத்திற் சேர்ந்தவனே என்பதுதான் நமது கொள்கை. ஆனால், எவ்வழியில் தீண்டாமையை யொழிப்பது என்பதுதான் நமது கேள்வி. தீண்டாதார் நால்வரை உடனழைத்துக்கொண்டு ஆலயப்பிரவேசம் பண்ணுவதன் மூலமாகவா? அவருடன் இருந்து உண்ணு வதன் மூலமாகவா? காரணம் பற்றி அவர்களைத்தீண்டத் தகாதாரென விலக்குபவரை வாயில் வந்தபடி திட்டுவதன் மூலமாகவா? தீண்டாமை ஒழிய வேண்டும்; தீண்டாமை ஒழியவேண்டும் என்று பிரசங்கமேடையில் ஏறிநின்று கொண்டு பேசுவதன் மூலமாகவா? இவைகளனைத்தும்

தீண்டாமையை நம் நாட்டினின்றும் துரத்திவிடுவனவா? இல்லை; இல்லை. மேலும் மேலும் நாட்டில் கலகத்தை ஏற்படுத்துவனவேயாகும். பின்னர் எவ்வழி தீண்டாமையை ஒருவித சச்சரவு மின்றி நாட்டைவிட்டோட்ட வல்லது? என்றால், அவர்களிடத்துத் தீண்டாமைக்குக் காரணமா யிருக்கின்ற ஒழுக்கக்குறைகளை அறவே ஒழிக்கச் செய்து மேலான நல்ல முறையில் வாழ்க்கையை நடத்தும்படி அவர்களைக்கொண்டு வருகின்ற ஒருவழியே தீண்டாமையை ஒழிக்கும்; தீண்டாமையை ஒழிக்கும். அதிவீரராம பாண்டியர் ஒரு சீர்திருத்தக்காரர்; அவர் என்ன சொல்லுகின்றார்.

"நாற்பாற் குலத்தில் மேற்பா லொருவன்
கற்றிலனாயின் கீழிருப்பவனே"

என்று கூறுகின்றார். இதோடு விட்டு விட்டாரில்லை.

"எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருக வென்பார்"

என்றும் கூறுகின்றார். அவர்கருத்து என்ன? செய்கையினால் கீழோர் மேலோராகலாம்; மேலோர் கீழோராகலாம். ஆதலால் இரண்டிற்கும் காரணமாக நிற்பது செய்கை என்பதேயன்றோ?

செய்கை தான் சிறப்புக்கும், சிறப்பின்மைக்கும் காரண மென்பதனை,

"பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்."

என்று திருக்குறள் கூறுகின்றது. இக்குறள்வெண்பாவிற்கு 'ஒருவன் சிறப்பினை யடைதற்கும், பிறிதொருவன் தாழ்வினையடைதற்கும் அவனவனின் செய்கையே காரண'மென்பதே பொருளாகும். இதனால், தீண்டத்தகா

தவர்களை உயர்த்தவேண்டுமென எண்ணுகின்றவர்க்கு வழி, அவர்களைத் தீய செயல்களினின்றும் பிரித்து நற் செய்ல்களில் திருப்புவதே என்பது நமது கொள்கைமட்டு மன்று; நமது தொல்லாசிரியர் கொள்கையு மிதுவே யென்பதனை அனைவரும் தெளிவாகத் தெரிந்துகொள்ள லாம். தமிழகப்பெரியீர்! கூர்ந்து நோக்குமின்!! மக்கள் வாழ்க்கையைச் சீரியமுறையில் நடத்துதற்குத் தமிழர் போன்று சட்டம்வகுத்தா ரொருவருமிலர். அவ்வளவு சீரியசட்டங்கள் வகுத்தவர்கள் நந்தமிழர்.

எந்நாட்டினுமில்லாத 'தீண்டாமை' என்னும் ஒரு சட்டத்தை அவர்கள் ஆக்கிவைத்திருப்பதி லிருந்தே அவ் வுண்மை தெளிவாகத் தெரியவரும். தீண்டாமை நமது நாட்டிலிருப்பது தீமை எனத்தான் காந்தியடிகள் முதலா னோரும் கூறுகின்றார்கள். நாமும் அவ்வாறுதான் கூறு கின்றோம். தீண்டாமை நமது நாட்டிலிருக்கக் கூடாதெனக் காந்தியடிகள் கூறுவதற்கும், நாம் கூறுவதற்கும் பொரு ளென்னை? மக்களுள் ஒருசாரார் மக்களாலேயே விலக் கப்பட்டுத் தாழ்வடைந்திருத்தல் வருந்தத்தக்கதாகும். ஆதலால், தாழ்வடைந் திருக்கின்ற மக்கள் தீண்டா மைக்குக் காரணங்களாகிய தீயவொழுக்கங்களை விடுத்து மேலே வாருங்கள்! அங்ஙனமாக அவர்கள் வருகின்ற காலத்தில் தடைசெய்யாது மேலோராகிய நீங்கள் உங்க ளினமாகக்கருதி ஒக்கச்சேர்த்துக் கொள்ளுங்கள்!! என் பனவேயாகும். ஆதலினால் காந்தியடிகளுடைய கருத்து தீண்டாமைச்சட்டம் இருத்தல் தவறென்பதன்று; அத் தீண்டாமைக்குக் காரணங்களாகிய தீவினைகள் நாட்டி லிருக்கக் கூடாவென்பதே யாகுமென்பதையும், அதுவே நமது கருத்து என்பதையும் நீங்கள் அறியலாம். தீண்டா மைச்சட்டத்தை எவரும் தீயதென்று சொல்லுதல் முடி

யாது. அங்ஙனம் சொல்லுவாருளரேல் அவர்சொல் அறிஞரால் ஏற்றுக்கொள்ளப்படாத சொல்லேயாகும். திருடுகின்றவனுக்குச் சிறைவிதிப்பது குற்றமானல், கொலை செய்தவனுக்குத் தூக்கிடுதல் குற்றமானல், பொய்கூறுகின்றவனை இகழ்வது குற்றமானல், பிறர்மனையை நச்சும் பேயனைக் குற்றமுடையவன் என்றுகூறுவது குற்றமானல், பிறர்பொருளை வஞ்சித்துக் கொள்பவனை மோசக்காரனென்பது குற்றமானல் கொலைசெய்தல், புலையுண்ணல், கட்குடித்தல் முதலிய குற்றங்களைப் புரிவோரைத் தீண்டத்தகாதாரென விலக்கிவைத்தல் குற்றமாகும். ஒருவன், அந்தோ! நம்மக்களுள் ஒரு சாராரை இவ்வரசாங்கத்தார் சிறையி லிடுவித்தனரே; அவர் செக்கிழுக்கின்றனரே; பிற கீழான வேலைகளைச் செய்கின்றனரே. என்னே! அநியாயம்! அநியாயம்!! என்றுரைப்பானுனல் அவனுரை மிக சிலமுடையதுபோலும். உடனே அரசாங்கத்தினர் அவனுரைக்காக சிறையிலிருக்கின்றவரை வெளியிலும் விட்டு விடுவரோ? அதுபோல, மக்களுள் ஒரு சாராரைத் தீண்டத்தகாதாரென விலக்கி வைத்திருக்கின்றனரே; விலக்கி வைத்திருக்கின்றனரே; என்று அவர்களின் உதவிகிடைக்குமென்று நீலிக்கண்ணீர் விடுகின்றவர் தீண்டத்தகாதவரின் நன்மையை நாடுபவரன்று. அவர்க்குத்தீமையைச் செய்பவரேயாவர். சிறைச்சாலையில் மக்கள் துன்புறுவதைக்கண்டு சகியாத ஒருவன் என்செய்தல் வேண்டும்; மக்கள் திருடுதல் முதலிய தீத்தொழில்களில் செல்லாதவாறு தடுக்கமுயற்சிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவனுக்கு மகிழ்ச்சி யுண்டாகும்படி சிறைச்சாலைக்கு மக்கள் பொவாதிருப்பர். அங்ஙனமின்றி மக்கள் திருடுவர்; ஆனல் அவர்களைச் சிறையிடுதல் தவறெனக் கூறுதல் அவற்கு மேலும் மேலும் தோல்வியையும், மனவருத்தத்

மையுமே தருவதாகும். ஒரு வேளை அரசாங்கத்தார் இவன் பேச்சைக் கேட்டு திருடுபவர்க்கும், தீய தொழில் புரியும் பிறர்க்கும் சிறைத்தண்டனையும் பிறதண்டனைகளும் கிடையாவென்று சொல்லுகின்றார்களென்று வைத்துக் கொள்வோம். நாடு எங்கிலை யடையும் என்பதைப் பெரியோர் நோக்கவேண்டும். அம்மாதிரித்தான் கொலை செய்தல், புலை யுண்ணுதல், கட்குடித்தல் முதலிய தீமைகளைச் செய்தார்க்குத் தண்டனை கிடையாது என்றால் நாட்டில் தீமை இப்பொழுதிருப்பதைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகரிக்கும். உண்ணமலிருப்பவரும், குடியாமலிருப்பவரும உண்ணவும், குடிக்கவும் முந்துவரன்றோ? அப்பொழுதுதான் நாடு நங்கிலை யடையுமோ? கேடான நிலைமையையே நாடு அடையும்; அடையுமென்பது திண்ணம். சிறைச்சாலையிலிருப்போர் திருடியது முதலான குற்றங்களைப் புரிந்தனர். ஆதலால் அவர்க்குச் சிறை விதிப்பது நியாயமே யாகும். தீண்டத்தகாதவரெனக் கூறப்படுவோர் எக்குற்றம் புரிந்தனர்? என்று வினவுவார்க்கு அத் தீண்டத் தகாதவர் குற்றங்கள் பலவென்று கூறுவோம். புலை யுண்ணுகின்றனர்; கட்குடிக்கின்றனர்; குளித்தல் முதலிய ஆசாரங்களை விடுத்து அநாசாரங்களில் உழலுகின்றனர். இக் குற்றங்களைப் புரிந்ததற்காகவே அக்காலத்து மக்களால் அவர்கள் விலக்கப்பட்டனர். இப்பொழுது நம்மவரில் பலரும் மாமிசத்தை யுண்ணுகின்றனர்; கட்குடிக்கின்றனர்; என்றால், ஆம். அவர்களும் தீண்டத்தகாதவரே. பிராமணருள் சிலர் இவ்விரண்டையும் செய்கின்றனரென்னின், அவர்களும் தீண்டத் தகாதாரினும் குறைந்தவரென்றே கூறுவோம். இனித் தீண்டாதாரென விலக்கி வைத்திருத்தல் கூடாதென்பார் ஜீவகாருண்யப் பிரசங்க மியற்றுவதற்குப்

பொருளென்ன ? சிவகாருண்ய மிகுதியினாலன்றோ நம் பண்டை மக்கள் உயிர் வருக்கங்களைக் கொன்று தின்று உழல்பவரைத் தம்மினத்தாரென்றும் பாராது விலக்கித் தள்ளினர். ஒரு புறம் சிவகாருண்யப் பிரசங்கம் ; மற்றொரு புறம் உயிர் வருக்கங்களைக் கொலை செய்தலால், தின்பதால் குற்றமில்லை என்பதனை யொப்பத் தீண்டாமை ஒழித்தல் பிரசங்கம். மிக நன்று ; மிக நன்று. சிவகாருண்யப் பிரசங்கங்கள் ஒவ்வொரு ஊர்தோறும் சென்று செய்யப்புகுங் காலத்து, அதனை மக்கள் மேற்கொள்ளுங் காலத்து நாட்டில் தீண்டாமையும் நிலவுமோ? பொருளின்றி எந்த வியக்கத்தவரும் தீண்டாமையை ஒழித்தல் நமது முக்கிய நோக்கம் என்று கூறிக்கொள்ளுதல், தீண்டத் தகாதவர்களின் உதவியைப் பெறவேண்டியே யென்பதனை நாமறிவோம். சுயமரியாதை இயக்கத்தினர் தீண்டாமையை ஒழித்தலே எங்கள் சிறந்த நோக்கமென்று கூறு விட்டால், சுவாமி சகஜானந்தர் ஒவ்வொரு ஊர்க்கும் சென்று 'இராமசாமி நாயக்கர் கலியுக அவதார மூர்த்தியாவர் ; அவரது இயக்கம் நம்மையெல்லாம் வாழ்விக்க வந்த இயக்கம்' என்றெல்லாம் கூறிக்கொண்டு திரியமாட்டார். இன்னும் அத்தீண்டத் தகாதாருள் பலர் இராமசாமியார்க்கும், அவர்களின் சிஷ்யவருக்கங்களுக்கும் உதவி செய்ய முன்வரார்.

பெரியோர்களே! பொருளின்றித் தீண்டாமை ஒழிதல்வேண்டும்; தீண்டாமை ஒழிதல்வேண்டும் என்று சொல்லிக்கொண்டு மேலும் மேலும் நாட்டில் கலகத்தை உண்டு பண்ணுவதில் பயனொன்றுமில்லை. தீண்டாமையை ஒழிக்க வேண்டுமா? அந்நோக்கத்தை உண்மையாக மேற்கொண்டுள்ளீரா ? உடனே தீண்டத்தகாதாரிருக்கு மிடங்கட்குச் செல்லுங்கள்; அவர்களினிடையில் ஜீவகாருண்யப் பிரசங்

கங்கள் பல செய்யுங்கள்; சுகாதார உபந்யாசங்கள் செய்யுங்கள்; அவர்கள் குளித்தற்குக் குளங்கள் வெட்டுங்கள்; வணங்குதற்குக் கோயில்கள் பல கட்டுங்கள்; எவ்வெவ்வழியில் அவர்களை மேனிலைக்குக் கொண்டுவரமுடியுமோ அவ்வவ்வழிகளை யெல்லாம் மேற்கொள்ளுங்கள். பள்ளிக்கூடங்கள் பல அமையுங்கள்; அவைகளில் அவர்களைப் பயிலுமாறு தூண்டுங்கள்; மற்றவர்களிடத்தில் அவர்கள் நன்மைநாடிச் செய்கின்ற காரியங்கட்கு வேண்டும்பொருளைப் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொருளை அவர்களில்லத்தைத் திருத்தியமைக்கச் செலவிடுங்கள்; அவர்களுணவை மாற்றிக்கொள்ளச் செலவிடுங்கள்; அவர்களுணர்வை மாற்றிக்கொள்ளச் செலவிடுங்கள். பின்னர் அவர்களைத் தீண்டத்தகாதவரென எவரேனும் கூற முன்வருவார்களானால் அவர்களைத் தீண்டத்தகாதாரென ஒதுக்கிவிடுவோம். அப்பொழுது தீண்டாமை ஒழித்தல் பிரசங்கம் மேடைகள்மீது செய்தல் ஒழுங்குடையது; பத்திரிகையில் எழுதுவதும், பிராமணரைத் தூஷிப்பதும் சாலச்சிறந்தவைகளேயாகும். அங்ஙனமின்றி தீண்டாமைவிலக்கினைச்சுயமரியாதையினர் செய்துகொண்டிருப்பது தீண்டத்தகாதாரின் நன்மையை நாடியல்ல; பிராமணரைக் கெடுக்கவேண்டுமென்னும் தீமையைநாடியே என்றுதான் நாம்கூறுவோம். இந்நிலையில் தீண்டாமை விலக்கைப்பற்றிப் பிராமணர்பால் குறைகூறல் பொருத்தமற்றதென்பதை அனைவரும் அறியலாகும். தீண்டாமையை ஒழித்தல்; தீண்டாமையை ஒழித்தல் என நாடுமுழுதும் முழங்கிக்கொண் டிருக்குங்காலத்தில், அம்முழக்கம் தவறுடையதென நாம்கூறுவது எவர்க்கும் ஐயத்தையேவிளைவிக்கும். ஆனால், அவர் சிறிதுநேரம் அமர்ந்திருந்து சிந்திப்பாரானால் ஐயம் தானே அவர்க்கு விளங்கிவிடும். தீண்டாமை நாட்டில் இருக்கவேண்டாத

ஒன்று என்பது நம்முடைய நோக்கமட்டுமன்று; நம்மைப் படைத்த இறைவனுடைய நோக்கமும் ஆகும். ஆனால் அந்நோக்கத்தின் உட்பொருள் தீண்டாமைக்குக் காரணங் களாயிருக்கின்ற தீமைகள் ஒழிதல் வேண்டுமென்பதே யாகுமன்றித் தீமைகள் நிலவுகின்ற காலத்திலும் தீண்டாமை ஒழியவேண்டு மென்ப தன்றென்பதைமட்டும் அன்பர்கள் அறிதல்வேண்டும். ஆகவே, இவ்வகையிலும் பார்ப்பனரைப் பிரித்துத் தள்ளுதலோ, குறைகூறுதலோ பெரிதுந்தவறுடையதாகு மென்பதும் பெறப்படுகின்றது. பெறவே, சுயமரியாதையினர் பிராமணர் தள்ளத்தக்கவர், பிராமணரல்லாதவர் கொள்ளத்தக்கவர் என்று கூறுவது பெரிதும் முட்டாள்தனமான, பகுத்தறிவற்ற ஒன்றேயாகு மென்பது திண்ணமாகும்.

# பகுத்தறிவு.

பகுத்தறிவு ஒன்றே சிறந்தது; பிறவெல்லாம் சிறந்தனவன்று என்று கூறுகின்றனர் சுயமரியாதையினர். பகுத்தறிவு என்பதென்ன? அது எவ்வித ஆற்றலையுடையது? அது பிறிதொன்றின் உதவியை நாடுவதா? தனித்தியங்கவல்லதா? என்பனவற்றைச் சிந்திக்கவேண்டும். எண்ணிறந்த உயிர் வருக்கங்கள் நிறைந்திருக்கின்ற இவ்வுலகில் மக்கட் பிறப்பு உயர்ந்ததெனக் கூறுதற்குக் காரணம் பகுத்தறிவுடைமையே என ஆன்றோர் கூறுகின்றனர். ஆகவே, இப் பகுத்தறிவு ஏனைய உயிர்வருக்கங்கட்கு இல்லையென்பது பெறப்படுகின்றது. பகுத்தறிவுடைமைக்காக மக்கள் உயர்ந்தவரெனக் கூறுவது எதற்காகவெனின், தக்கதின்னது தகாததின்னது என்று வகுத்துணர்த்தும் பேராற்றலைப் பகுத்தறிவுடைமையால் அதனைக் கொண்டிருக்கின்ற மனிதரை உயர்ந்தாரெனக் கூறுகின்றனர். அம்மாதிரியான ஒரு பகுத்தறிவினை உடைமையினால் தான் ஏனைய உயிர்வருக்கங்கள் போலல்லாமல் உணவு சம்பாதித்து, உடை சம்பாதித்து, உறையுள் சம்பாதித்து, அவைகளை உண்டும், உடுத்தும், உறைவதற்கிடமாகக் கொண்டும் இன்ப வாழ்க்கையாக மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த முடிகின்றது. பகுத்தறிவுடைமையினாற்றான் ஆண்டவனொருவனுளன்; அவன் அடிமைகள் நாமெல்லோரும் என்பதை மக்கள் உணர்ந்தனர். அவனியலை வகுத்தனர்; மக்களியலை வகுத்தனர்; அவனுக்கும் நமக்கு மிருக்கின்ற தொடர்பை வகுத்தனர்; பிறவற்றையும் வகுத்தனர். வள்ளுவர் திருக்குறள் செய்தது பகுத்தறிவு கொண்டுதான்; கம்பர் இராமாயணம் செய்த

தும், இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் செய்ததும், பிற நூலாசிரியர்கள் பிற நூல்களைச் செய்ததும் பகுத்தறிவு கொண்டே. நால்வர் தேவார திருவாசகங்களைத் திருவாய் மலர்ந்ததுகூட பகுத்தறிவுகொண்டுதான். மருத்துவம், சோதிடம் முதலிய நூல்களையும் பகுத்தறிவு கொண்டேதான் செய்தனர். இன்ப வீட்டுத் தொழில் முதல் வீட்டுத் தொழில்வரை யுள்ள எல்லாத் தொழில்களும் பகுத்தறிவு கொண்டுதான் செய்யப்பெற்றன. பசிநோய்வந்த காலத்து உணவுகொள்ள வேண்டும்; அதுவும் இன்னின்னமாதிரிக் கொள்ளவேண்டும்; நெற்பயிரில் விளைகின்ற நெல்லினைக் கொண்டுவந்து பக்குவப்படுத்தி அரிசியாக்கி அதனை நீரோடு சேர்த்துத் தீயின் உதவிகொண்டு சோறுக்குதல் வேண்டும்; மிளகாய்ச் செடியில் விளைகின்ற மிளகாயினையும், கடல் நீரால் ஆக்கப்படும் உப்பினையும், கொத்தமல்லியினையும், புளியினையும், மஞ்சளையும், கடுகு, சீரகம், உளுத்தம்பருப்பு முதலியவைகளையும் கொண்டு பக்குவப்படுத்திக் குழம்பாக்கிச் சோற்றோடு கலந்துண்ணல் வேண்டும் என்றின்னோரன்ன பலவகை உணவு வகைகளைக் கண்டுபிடித்ததும், பருத்திப்பஞ்சினைக் கொணர்ந்து பக்குவப்படுத்தி உடை முதலியன செய்யக் கண்டு பிடித்ததும் பகுத்தறிவு கொண்டே. கும்பகோணத்தில் இருக்கும் ஒரு கோயிலில் சித்திரைத் திங்களில் மூன்று நாட்கள் மட்டும் சூரியனது ஒளி சிவலிங்கத்தில் படுகின்றது. இது பகுத்தறிவு கொண்டு செய்த செயல் தான் என்பதும் மறுக்கமுடியாதது. தஞ்சாவூரிலுள்ள பெரிய கோயிலின் கோபுரம் நிழல் தோன்றுவண்ணம் கட்டப்பெற்றிருப்பதும், அக்கோயிலுள்ள ஒரு பெரிய நந்தியினை ஒரே கல்லினால் செதுக்கப் பெற்றிருப்பதும் பகுத்தறிவு கொண்டே. இவை யெல்லாம் அந்நாட்

செய்திகள். இந்நாளில் மேலைநாட்டவரெனும் ஆங்கிலேயர் பகுத்தறிவு கொண்டே பல அற்புதங்கள் செய்கின்றனர். ஆகாயத்தில் பறக்கின்ற கப்பலைச் செய்துள்ளார்; நீர்மேற்செல்லும் கப்பலினையும் கண்டுபிடித்துள்ளார். மனிதர் முயற்சியின்றித் தாமே இயங்கும், புகைவண்டிகளும், இயந்திர வண்டிகளும், இயந்திரங்களும் பிறவும் கண்டுபிடித்துள்ளார். ஒரு ஊர்ச் செய்தியை மற்றொரு ஊருக்குத் தந்திக்கம்பி மூலமாகத் தெரிவிப்பதைக் கண்டுள்ளார். கம்பியில்லாமலும் தெரிவிக்க இதுபொழுது கண்டுபிடித்துள்ளார். மின்சார விளக்கு முதலிய அற்புதமான பல்வகைகளையும் கண்டுபிடித்துள்ளார். இவைகளெல்லாம் பகுத்தறிவின் செய்கைகள் தாமே. அங்ஙனமாயின், பகுத்தறிவுடைய ஒரு மனிதனால் ஏன் இக் காரியங்களைச் செய்ய இயலவில்லை? திருவள்ளுவர் செய்த திருக்குறள் போன்று ஒரு பகுத்தறிவுடையவன் இன்று ஒரு குறள் செய்ய முடியுமா? முடிவதிருக்கட்டும். பகுத்தறிவுமட்டும் கொண்டு அவர் குறளுக்கு உரைகூற முடியுமா? கம்பராமாயணத்தைப் போல் ஒரு நூலாக்க முடியுமா? ஒரு செய்யுளாக்க முடியுமா? சுயமரியாதைக்காரர்கள் செய்து முடிப்பரா? தேவாரத்தில் உள்ள பண்போல ஓசை விழுப்பமும் பொருள் விழுப்பமுமுடைய ஒரு பண்பகுத்தறிவு கொண்டு ஆக்க முடியுமா? சிலப்பதிகாரம் போன்ற சீரிய நூலொன்று யாக்க முடியுமா?

இந்நாள் பகுத்தறிவுமட்டுமுடைய ஒருவனை அழைத்து, அன்பனே! திருவள்ளுவரும் பகுத்தறிவு கொண்டுதான் திருக்குறளைச்செய்தனர்; அப்பகுத்தறிவு உனக்குமிருக்கிறது. ஆதலால், அத்திருக்குறள் நல்லதா கெட்டதா? அதனுள் கூறப்பட்டிருப்பவை என்ன? என்று வினவுவோமானால் அவன் என்சொல்வான். எனக்குப்படிப்புத்

தெரியாது; அதனால் திருக்குறளைப்பற்றி ஒன்றும் சொல்ல இயலாது என்று சொல்லுவானன்றோ? இப்பொழுது பகுத்தறிவு உயர்ந்ததா? என்றுபார்ப்பீர்களானால் அதனை உயர்ந்ததாகக்கூற உங்கள் உள்ளம் ஒருப்படாது. கல்வி தான் சிறப்பென்று உங்கட்குக்கருத்துத் தோன்றும். பகுத்தறிவுஒன்றே சிறந்ததென்னும்போது கல்விஎதற்கு? பிற ஒன்றுதான் எதற்கு? உலகில்உள்ள எல்லாச்செயல் களை அறியவும் செய்யவும் பகுத்தறிவு உதவிசெய்ய வேண்டுமன்றோ? இல்லையே. திருக்குறளைப் படிக்கவேண் டிய காலத்துக் கல்வியன்றோ வேண்டி யிருக்கின்றது; அதற்குமேலன்றோ பகுத்தறிவு வேண்டியிருக்கின்றது. இதுபோலவே, சிற்பியினது திறமாகிய சிற்பத்தை ஒரு வன் நல்லது கெட்டது எனத் தீர்மானிக்கவேண்டின் அச் சிற்பக்கல்வியும், மருத்துவனின் மருந்தினை அறியவேண்டிய காலத்தில் மருத்துவக்கல்வியும், சோதிடத்தை அறிய வேண்டியகாலத்து சோதிடக்கல்வியும் வேண்டியவையா யிருக்கின்றன. இதனால் நாம் அறிவது என்ன? பகுத் தறிவு ஒன்றுமட்டும் சிறந்ததல்ல; அதனோடு கல்வியும் சேருதல்வேண்டும் என்பதேயன்றோ? இனிப் பகுத்தறிவும் கல்வியும் இரண்டும் ஒருங்குசேர்ந்தவிடத்தும் ஒருகாரியத் தைச்செயயமுடியவில்லையே; அறியமுடியவில்லையே? அது என்? அதை நாம் கவனித்தல்வேண்டாமோ? ஒரு பெரியார் கல்வித்துறையிலும் கைபோயவரா யிருக்கின்றார்; அவ ரையழைத்து, ஐய! நீங்கள் கல்வியும் பகுத்தறிவும் இரண் டும் உடையீர்! ஆதலால், இவ்விரண்டுமுடையாராய திரு வள்ளுவர் செய்த திருக்குறளைப் போன்று ஒரு திருக்குற ளைச் செய்யுங்கள்; கம்ப இராமாயணத்தைப் போன்ற ஒரு காவியமியற்றுங்கள்; சிலப்பதிகாரம்போல ஒருசிரிய நூலைச் செய்யுங்கள்; தேவார திருவாசகங்கள் போல் தோத்திர

நூல்களைத் தொகுத்துக் கொடுங்கள் என்றுசொன்னால் அவரால் அக்காரியங்களைச் செய்யமுடியாமற்போகிறதே? திருக்குறள்போன்று ஒருதிருக்குறள் ஆக்குபவர் தமிழ் நாட்டிலுளரோ? இல்லையாயின், இந்நாள் பகுத்தறிவும் கல்வியும் ஒருங்கமையப் பெற்ற ஒருவரிடத்துள்ள ஆற்றல்களுள்ளும் இல்லாத ஒரு தனி ஆற்றல் திருவள்ளுவரிடத்திலும்,கம்பரிடத்திலும், பிறதொல்லாசிரியர்களிடத்தும் இருந்ததாகத் தானே நாம் அநுமானிக்கவேண்டும்; முடிவு கட்டவேண்டும். அவ்வாற்றல் எது? உலகில் பிறந்திருந்து இறந்துபோகின்ற மக்களனைவரும் பகுத்தறிவுடையவர்தாமே. அங்ஙனமாயின், இதுவரை ஒருசிலர் மட்டும் தேச சரித்திரங்களில் ஏன் பேசப்படுகின்றனர். மற்றையோர் பேசப்படாததற்குக் காரணமென்ன? இந்நாள் இந்தியாவிலுள்ள மக்கள் எண்ணற்றவர். ஆனால் மகாத்மாகாந்தியடிகள் ஒருவரே சிறந்தவரெனப் பேசப்படுகின்றார். காரணமென்ன? பகுத்தறிவுடைமையா? பகுத்தறிவுடைமை யென்னின் மற்றையோ ரெல்லாம் பகுத்தறிவற்றவர்களா? இல்லையே; எல்லோரும் பகுத்தறிவுடையவர்தாமே. தமிழகத்திலுள்ள அளவிறந்த மக்களுள் நல்லதைச் செய்கின்றாரோ; அன்றிக் கெட்டதைச் செய்கின்றாரோ எங்ஙனமாயினும் இராமசாமி நாய்க்கர் மட்டும் அவதாரமூர்த்தி எனச் சிலரால் அரற்றப்படுவதற்குத்தான் காரணமென்ன? அவரிடத்து ஏதோ ஒருவித ஆற்றலிருப்பதாகத்தானே! அவ்வாற்றல் பகுத்தறிவுக்கு உட்பட்டதா? அன்றி வெளிப்பட்டதா? பகுத்தறிவுக் குட்பட்டதாயின் பகுத்தறிவுடைய ஏனைய மக்களில் அவரும் ஒருவர்தானே. ஒருவரென்றால் அவர்க்குப் பெரியார் பட்டம் எதற்கு? பிறபட்டங்கள்தாம் எதற்கு?

அவர்க்குத் தலைமைப்பதவி எற்றுக்கு? உற்றுநோக்குங் கள். இதிலிருந்தும் நமக்குப் பகுத்தறிவுக்கும் கல்விக்கும் அப்பாற்பட்ட ஒன்று இருப்பதாகத் தெரிகிறதன்றோ? இல்லை; இல்லை. பகுத்தறிவு எல்லோர்க்கும் இருக்கின்ற தெனினும், அதனைப் பயன்படுத்தாது போகின்றனர் பலர்; அவர்க்குச் சிறப்பும் பிறவும் இல்லாது போகின்றன. பயன்படுத்துகின்றனர் சிலர்; அதனால் அவர்கட்குச் சீரும் சிறப்பும் உண்டாகின்றனவென்று கூறுவார் அச் சுயமரி யாதையினர். உண்மைதான். அப்படியாகப் பலர் பயன் படுத்தாதுபோதற்கும், சிலர் பயன் படுத்துதற்கும் காரண மென்ன? பகுத்தறிவு எக்காலத்தும் ஒரு தன்மைத்தாக விருக்கும் இயல்புவாய்ந்ததா? ஒவ்வொரு காலத்து ஒவ் வொருமாதிரி மாறும் இயல்புடையதா? என்றின்னோ ரன்ன பல வினாக்களை எழுப்புவோம். முதலாவதாக பலர் பயன்படுத்தாது போதற்கும், சிலர் பயன்படுத்துதற்குங் காரணத்தை விசாரிப்போம். நம் நாட்டுப் பழம் பைத்தி யங்கள் என்று சுயமரியாதையினர் கூறுகின்ற பைத்தியங் களுள் ஒரு பைத்தியம், "ஊட்டுவிப்பானும் உறங்குவிப் பானும் இங் கொன்றோ டொன்றை, மூட்டுவிப்பானு முயங்குவிப்பானும் முயன்றவினைக், காட்டுவிப்பானும் இருவினைப் பாசக்கயிற்றின் வழி, ஆட்டுவிப்பானும் ஒருவ னுண்டே தில்லையம்பலத்தே" என்று கூறுகின்றது; இன் னொரு பைத்தியம், "ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே அடக்குவித்தா லாரொருவர் அடங்காதாரே, ஓட்டு வித்தா லாரொருவர் ஓடாதாரே, ஒடுக்குவித்தா லாரொரு வர் ஒடுங்காதாரே, பாட்டுவித்தா லாரொருவர் பாடா தாரே பணிவித்தா லாரொருவர் பணியாதாரே, காட்டு வித்தா லாரொருவர் காணாதாரே காண்பாரார் கண்ணுத

லாய்க் காட்டாக் காலே" என்று கூறுகின்றது. "சிவனவ னென்சிந்தையுள் நின்றவதனால், அவனருளாலே அவன் றாள்வணங்கி" என இக்கருத்தினையே மற்றொரு பைத்திய மும் கூறுகின்றது. இப்பழம் பைத்தியங்கள் சொல்வழிப் பார்ப்போமாயின் பலர் பயன்படுத்தாது போதற்கும், சிலர் பயன்படுத்துதற்கும் காரணமாக நிற்பது ஒரு சக்தி என்று தான் கொள்ளவேண்டி யிருக்கின்றது. புதுப் பைத்தியங்களான இந்நாள் பைத்தியங்கள் பலவும் இம் மாதிரித்தான் கூறுகின்றன. தமிழகத்தவர் மட்டுமல்ல; இந்திய நாட்டார் மட்டுமல்ல; ஆங்கிலேயர் மட்டுமல்ல; எல்லா நாட்டவரும் இம்மாதிரித்தான் உளறி வழிகின்ற னர். நமது அன்பர் இராமசாமி நாய்க்கர் மட்டும் அதெல் லாம் ஒன்றும் கிடையாது; பகுத்தறிவுக்கு மிஞ்சி வேறொன்று முளது என்னுங் கொள்கை முட்டாள்தன மானது; முட்டாள்தனமானது என முரணுகின்றார். முரணுகின்ற அவர் தமது முரண்பாட்டுக்குக் காரணங் கூறினாரில்லை; கூறாத நாயக்கர் பேச்சைக் கேட்டு நாம் எப் படிப் பிறரைப் பைத்தியங்கள் என்று கூறுவது.

தமது பகுத்தறிவுக்கு அப்படி ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை யென்றுமட்டுங் கூறுகின்றார்; நாயக்கர் கூறுவதை நாம் ஒத்துக்கொள்ளலாம். ஆனால் உலகி லுள்ள அனைத்தையும் தமது பகுத்தறிவால் அவர் அறிந்து கொள்ளும் ஆற்றலுடையவரா யிருப்பாரானால் அவர் பகுத் தறிவுக் கெட்டாத இவ்வொன்றினை நாம் தள்ளிவிடலாம். அவரால் உலகிலுள்ள ஒரு பொருளையாவது அறிந்து கொள்ள முடியவில்லையே. நாயக்க ரவர்களிடத்து நண்ப ரொருவர் சென்று, அன்பரே! அமெரிக்காவில் இப் பொழுது மனிதர் இறந்துபோனபின் அவர் தம் ஆவியை அழைத்துப் பேசுகின்றனராம் என்று கூறினர். உடனே

நண்பர் நாயக்கர், உம்மை ஒரு சிறந்த அறிவாளியென் றன்றோ இதுவரை எண்ணியிருந்தேன். இவ்வளவு பகுத் தறிவு இல்லாதவராக விருக்கின்றீரே. ஆவியாவது, அதனை யழைத்துப் பேசுவதாவது; நம் நாட்டில் இருக் கின்றார்களே சில முட்டாள்கள் அவர்களைப்போல சில சில முட்டாள்கள் அங்கு மிருக்கின்றார்கள். அவர்களே இம்மாதிரி யெல்லாம் கதை கட்டிக்கொண்டு வயிறு பிழைக்கின்றனர்' என்று கூறினாராம். அமெரிக்காவில் அம்மாதிரி நடக்கிறதெனக் கூறினவர் பகுத்தறிவில் லாமற்றான் கூறினர். நாயக்கர் இல்லை; அது புரட்டு வித்தை என்பதைப் பகுத்தறிவு கொண்டுதான் சொல்லினா ரென்றால் நாமும் பலநாளாக அதைப்பற்றிய ஆராய்ச்சி யைப் பகுத்தறிவுக்குக் கொடுத்துத் தான் வருகிறோம். இன்னும் அமெரிக்காவில் நடப்பது உண்மை; அல்லது பொய்மை என்பதை நமக்கு அது புலப்படுத்தவில்லை. இதனாலும் இராமசாமியார் பகுத்தறிவிற்கு ஒருவிதத் தனியாற்ற லிருப்பதாகத் தெரிகின்றதன்றோ? வேடிக்கை. ஆகாயத்தில் பறக்குங் கப்பலொன்று ஆங்கிலேயர்கள் கண்டுபிடித் துள்ளார்கள் என்று நகரமே இன்னதென அறியாத, கல்வியறிவில்லாத ஒரு பாமரனாகிய நாட்டுப் புறத்தவனிடத்து ஒருவன் கூறினால், அவன் தனது பகுத் தறிவுக்கு எவ்வளவு வேலை கொடுத்தாலும் ஆகாயக் கப்பு லென்று ஒன்றிருக்கும் என்பதை அதுகொண்டு தெரிந்து கொள்ளுவானா? ஆகாயக் கப்பலிருக்கட்டும்; துவிச்சக்கர வண்டி (சைகில்) யொன்று முன்னே ஒரு சக்கரமும், பின்னே ஒருசக்கரமு முள்ளதா யிருக்கின்றதென அவ் வறியாதவனிடத்துக் கூறினால் அவன் என்னே, அறியா மை! முன்னேயும் பின்னேயும் சக்கரமிருந்து பக்கங்க ளில் ஒன்றுமில்லாதுபோயின் அது எவ்வாறு ஓடும்;

ஒருக்காலும் ஓடாது. சாய்ந்துபோகும் என்று அன்ரோ? கூறுவன். கூறிய அவனும் பகுத்தறிவுடையவனே; பகுத்தறிவு மட்டுமென்று; அதற்குமேலாவதோர் தனியாற்றலுமுடையவனே யன்ரோ? ஆதலினால் இராமசாமி நாயக்கர் பகுத்தறிவுக்கு மேற்பட்டதாக ஒன்று இல்லையென்பதற்குத் தமது பகுத்தறிவுக்கு அது எட்டாததே என்பது சரியான காரணமாகக் காணப்படவில்லை. ஆகவே, பகுத்தறிவுக்கு மேம்பட்ட தொன்றுளது, அது எவ்வழி நடத்துகின்றதோ அவ்வழிதான் நமது அறிவு நடந்து கொள்கின்றது என நமது பழம் பைத்தியங்கள் சொல்வதுதான் பொருத்த முடையதென நமக்குத் தோன்றுகின்றது. பிறகு, பகுத்தறிவு என்றும் ஒரு நிலைமையுடையதா? என்பதைப் பார்ப்போம். மக்கள் பருவங்களுள் பாலப்பருவத்தில் அப் பகுத்தறிவு ஒரு மாதிரித் தன்மையுடையதாகத் தெரிகிறது. வாலப்பருவத்தில் ஒருமாதிரியாக மாறுகிறது; கல்வி பயிலுதற்குமுன் ஒருமாதிரியிருக்கின்றது; பயின்றபின் ஒருமாதிரி மாறுகின்றது; தொழிலுக்குப் போவதற்கு முன் ஒரு வண்ண மிருக்குமது போனதன்பின் ஒரு வண்ணமாக மாறுகின்றது. நல்லோர் சேர்க்கை சேராதமுன் ஒருவிதமாக விருக்கின்றது; சேர்ந்தபின் வேறுவிதமாக மாறிவிடுகின்றது. ஜஸ்டிஸ் கட்சியைச் சேராதகாலத்து ஒருமாதிரி யிருக்கின்றது; சேர்ந்தபின் ஒருமாதிரி மாறுகின்றது. தேசியக் கட்சியைச் சேராதகாலத்து ஒருமாதிரியாக விருக்கின்றது. சேர்ந்தபின் ஒருமாதிரியாக மாறுகின்றது. இருபதாம் ஆண்டில் ஒருமாதிரியிருந்த அது இருபத்தைந்தாம் ஆண்டில் வேறுமாதிரி மாறுகின்றது. இவைகட்கென்னகாரணம். நண்பர் நாயக்கரையே வினவவேண்டும். ஏன்? பாலப்பருவத்தில் அவரது பகுத்தறிவு இருந்த

விதம் வேறு; வாலப்பருவத்தில் அது இருந்தவிதம் வேறு; நல்லோர் சேர்க்கையில்லாது நாயக்கர் இருந்த காலத்தும், சேர்க்கையோடிருந்த காலத்தும் அவர் பகுத்தறிவு வெவ்வேறு மாதிரியாகத்தான் இருந்திருக்கின்றது. ஜஸ்டிஸ் கட்சியை நாயக்கர் சேராதபோதும், சேர்ந்த இப்போதும் அவரது பகுத்தறிவு ஒருநிலையி லிருப்பதாகக் கூறமுடியாது. அப்படியே தேசிய சபையைச் சேராதபோதும், சேர்ந்தபோதும், சேர்ந்துவிலகிய இதுபோதும் அவரது பகுத்தறிவு ஒரு நிலைத்தாக விருக்கிறதெனச் சொல்லமுடியாது. அப்பொழுதிருந்த பகுத்தறிவிற்கும், சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்து நடத்துகின்ற இப்பொழுதிருக்கும் பகுத்தறிவுக்கும் பேதமுண்டென்பதை அவரே அறிவர். ஆதலால் அநுபவ மிக்க அப்பெரியாரே இதற்குப் பதில் கூறவேண்டியவராக விருக்கின்றார். அவர் கூறுவதிருக்கட்டும், நாம்தான் கூறுவோமே.

இவ்விதமெல்லாம் மாறினதற்குக் காரணம் பகுத்தறிவுக்கு மேல் ஒன்றில்லையென்று எண்ணியதுதான். இதனை நண்பர் நாயக்கர் மறுக்கமுடியாது. பகுத்தறிவுக்குமேல் ஒன்றிருக்கிறதெனக் கூறிய பெரியாரெல்லாம் பிறந்ததுமுதல் இறந்ததுவரை ஒருமாதிரியாகவே இருந்து சென்றதே இதற்குச் சரியாகும். சங்கரர், இராமாநுஜர், மத்வர் முதலிய நம்முடைய சமயஸ்தாபகர்களையும், சமய குரவர்களையும், பிறபெரியார்களையும் எடுத்துக்கொள்வோம். அவர்கள் அனைவரும் எந்தக்கொள்கையை முதல் முதலாக நிலைநாட்ட முன்வந்தார்களோ அதே கொள்கையைத்தான் இறுதிபரியந்தம் நடத்திச் சென்றனர். காந்தியடிகளென்ன? அவரன்ன பெரியோரென்ன அனைவரும் எந்நலத்தை மேற்கொண்டனரோ, எடுத்துரைத்தனரோ அதனைத்தான் இறுதி பரியந்தம் மேற்கொண் டிருக்கின்ற

னர். எடுத்துரைத்தும் போந்தனர். பகுத்தறிவுக்கு மேம்பட்டது ஒன்று இல்லையென்று கூறுகின்ற நண்பர் நாயக்கரோ, அவரின் சீடவருக்கங்களோ அனைவரும், ஒருநாழிகைக்கென்று சொல்லமுடியாது; ஒரு விநாடிக்கொரு மாதிரியாக மாறுகின்றனர். இவ்விரண்டையும் நோக்கும்போது நமக்கு என்ன தோன்றுகிறது. பகுத்தறிவைப் பயன்படுத்தச் செய்வதும், பயன்படுத்தாமலிருக்கச் செய்வதும், ஒருநிலை யுடையதாகச் செய்வதும், பலநிலை யுடையதாகச் செய்வதும் பகுத்தறிவைக் கடந்து நிற்கும் ஒரு சக்தி யென்பதுதான் தோன்றுகின்றது. இல்லையாயின், எல்லோரையும் பகுத்தறிவைப் பயன் படுத்துகின்றவர்கள் என்று சொல்லவேண்டும்; என்றும் பகுத்தறிவு ஒரு நிலையதாகத்தான் இருக்கிறதென்றும் சொல்லவேண்டும். அங்ஙனமாகச் சொல்லுதற்கு இடமில்லையே. எல்லோரும் பகுத்தறிவைப் பயன்படுத்து கின்றவர்களா யிருப்பின் இப்பொழுது இராமசாமி நாயக்கர் எதற்காக? அவரது சுயமரியாதை இயக்கந்தான் எதற்காக? அவ்வியக்கத்தை வலுப்படுத்துவதற்கென ஒரு மகாநாடு எதற்காக? அம்மகாநாட்டுத் தலைவருக்கு ஆறு யானைகள் கட்டிய ரதந்தான் எதற்கு? ஒன்றும் வேண்டுவதில்லை யன்றோ? வேண்டுமெனச் சுயமரியாதை இயக்கத்தை நாயக்கர் நடத்துவதனாலேயே ஏதோ சில மக்கள் பகுத்தறிவைப் பயன்படுத்தா திருக்கின்றனர்; அவரைப் பயன்படுத்தச் செய்யவேண்டு மென்பது முடிவாகின்றதன்றோ? இனி, என்றும் பகுத்தறிவு ஒருநிலைத்தாக விருக்கின்றதென்னின், நாயக்கர் பாலப்பருவத்திலிருந்து வாலப்பருவம் வந்து அதுவும் முடிந்து இப்பொழுது வந்துள்ள காலப்பருவம்வரை அவருடைய சரித்திரத்தை எழுதிக்காட்டச் சொல்லுவோம். அதிலிருந்து அவர் பகுத்தறிவு என்றும்

ஒரு நிலைத்தாக விருந்திருக்கின்றதா? அன்றி பலநிலையாக மாறியிருக்கின்றதா? என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். பலநிலையினவாக மாறியிருக்குமேல் அப்படியாக அவர் பகுத்தறிவு மாறவேண்டுவானேன்? மாறியதற்குக் காரணம் பகுத்தறிவிற்குமேல் வேறொன்று இல்லையென அவர்நினைத்ததே என நாம் சொன்னது இங்கு வலியுறுத்தப்பெறுகிறது. பகுத்தறிவிற்குமேல் இன்னொன்று இருக்கின்றது என்ற எண்ணத்தை மேற்கொண்டால் மட்டும் இம்மாறுதல்களெல்லாம் ஏற்படாவோ வென்னின், ஏற்படா. ஒரு ஊருக்குச் செல்ல வேண்டிய ஒருவன் வாகனமாகிய சாதனமேயன்றி, வழியும் வேண்டும் என்பதனை முதற்கணே தெரிந்துகொண்டு அவ்வழியில் தனது சாதனத்தை நடத்திச் செல்லுவானானால் எப்படிச் சுலபமாகக் குறிப்பிட்ட ஊரைப்போய்ச் சேருவனோ அதேபோலவும், வழி வேண்டுவதில்லை; சாதனம் ஒன்றுமே அமையும் என வழி தெரியாது செல்லுபவன் எங்ஙனம் குறிப்பிட்ட ஊருக்குச் சிரமப்பட்டும் செல்ல இயலாதொழிவனோ? அதேபோலவும், பகுத்தறிவு என்பது ஒரு சாதனம்போல்வது; அதனைச் செலுத்துதற்குரிய வழியொன்று வேண்டுமென ஆராய்ந்து அவ்வழியைத்தெரிந்துகொண்டு அவ்வழியில் தனது சாதனமாகிய பகுத்தறிவினை ஒருவன் செலுத்துவானேல் அவன் குறிப்பிட்ட காரியத்தையும் அறிந்துகொள்வான்; அதனைச் செய்தலும் அவனால் கூடும். அதன் பயனையும் பெறுவான். அங்ஙனமின்றிப் பகுத்தறிவாகிய சாதன மொன்றே அமையுமெனக்கருதி அதைச் செலுத்துதற்குரிய வழிதெரியாது குறிப்பிட்ட ஒன்றை அடையமுயலுபவன் அல்லற்படுவதோடு பலவழிகளிலும் இதுதான் சரி இதுதான் சரியென உழன்று இறுதியில் குறிப்பிட்ட ஒன்றையும் அடையப்பெறாது, அறியப்பெறாது அவல

1493 (7750)



முறுவானென்பதும் திண்ணம். இதுவரைக் கூறிவந்ததில் நமக்குப்புலப்படுவதென்ன? பகுத்தறிவு ஒரு சாதனமே. அது பிறிதொன்றின் உதவியைக்கொண்டு நடப்பதே என்பதாகும். திருக்குறளைத் திருவள்ளுவர் பகுத்தறிவு மட்டுங் கொண்டு செய்திருப்பரேல் பகுத்தறிவுடைய நம்மாலும் அம்மாதிரி ஒரு நூல் ஆக்குதற்கு முடியவேண்டும். முடியாதுபோகின்றதாதலினாற்றான் அப்பெரியோர் பகுத்தறிவைக்கடந்த ஒரு தனியாற்றலின் உதவிகொண்டே அந்நூலைச் செய்துள்ளார் என நாம் அநுமானிக்க வேண்டியிருக்கிறது. இங்ஙனமே தான் பிற நூலாசிரியர்களும் செய்துள்ளார்கள். அவ்வாற்றல் எது? அதுதான் ‘திருவருள்’ ‘திருவருள்’ எனத் திருமிக்க பெரியார்களால் செப்பப்படுவதாகும். அத்திருவருளைப் பலர் பல பெயரிட்டழைப்பர். பெயர் வேறுபாட்டைப்பற்றிச் சிந்திக்கவோ, ஐயமுறவோ வேண்டுவதில்லை. அவரவர் கூறுகின்ற அனைத்தும் ஒரே இலக்கணமுடையதாக இருப்பதே நமக்கு வேண்டியது. ‘இத்திருவருள் ஒன்று இருக்கின்றதெனும் உணர்வுடைமையினாற்றான் நம் முன்னோர்களெல்லாம் நம்மால் செயற்கரிய பல சிறப்புச் செயல்களைப் புரிந்தனர். அஃதொன்று இல்லையெனும் ஒரு எண்ணமுடையாராக நண்பர் இராமசாமி நாயக்கர் இருப்பதனால்தான் அம்மாதிரியான காரியங்களைச் செய்வதிருக்கட்டும்; அறியவே இயலாது அல்லற்பட்டு, அது எனது பகுத்தறிவிற்கு எட்டவில்லை; இது எனது பகுத்தறிவிற்கு எட்டவில்லை; என்று அவலமாகக் கூறித்திரிவாராகின்றார். சுந்தரர் முதலைவாய்ப்போன பிள்ளையை மீண்டும் உயிர்பெற்றெழுமாறு செய்தார், தம்முடைய ஆற்றல்கொண்டு செய்தாரில்லை. திருவருளாற்றல் கொண்டே செய்தார். அங்ஙனம் அவர் செய்திருப்பரா? என்பதை ஆராய்வதானால் நாம் எங்கிலையராக

விருத்தல் வேண்டும். திருவருட் செல்வர்களாக விருத்தல் வேண்டும். திருவருட் செல்வர்களாக விருந்தாற்றான் திருவருட்செல்வத்தால் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை அறிய முடியும். அங்ஙனமின்றிப் பகுத்தறிவு மட்டுங்கொண்டு அளந்து விடுகிறேன்; அறிந்து விடுகிறேன் என ஒருவர் முந்து வரேல் அவர் முயற்சி வீண்முயற்சியே யாகுமென்பது நமது கருத்து. மின்சார இயந்திர மொன்றை அறிந்து அதனை நடத்தவேண்டிய ஒருவன் அம்மின்சாரக் கல்வியினைக் கற்றிருத்தல் வேண்டாமா? திருவருட்செல்வம் பெற்ற பல பெரியார்கள் என் சொல்லுகின்றனர் என்று பார்ப்போமானால், அவர்களனைவரும் ஒருமித்துச் சுந்தரர் முதலைவாய்ப் பிள்ளையை மீட்டிருப்பர்; மீட்டிருப்பர் என்று தான் கூறுகின்றார்கள். இராமசாமி நாயக்கர் ஒரு பெரியார்; அவதார மூர்த்தி என்பதில் நமக்குத் தடை கிடையாது. ஆனால், அவதாரச் செல்வங்களாக, அருளுடைப் பெரியோர்களாக 'தாமின் புறுவது உலகின் புறக் கண்டு' என்னும் பெருங்கொள்கை யுடையவர்களாகத் திகழ்ந்த நம் முன்னைப் பெரியோர்களைக் காட்டிலும் இவர் பெரியார் என்று எவரேனும் வாதம்பற்றிச் சொல்ல முன் வருவரானால் அவருரையைப் பெரிதுங் கண்டிக்கக் கடமைப்பட்டுள்ளோம். ஒருவகையில்தான் நண்பர் நாயக்கர் அவர்களைக் காட்டிலும் பெரியவர். அது எவ்வகை என்பதை நாம் கூறவேண்டியதில்லை. ஆசிரியர் வள்ளுவனார்,

> "செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
> செயற்கரிய செய்கலா தார்."

என்று கூறுகிறார். இதினின்றும் நம்போல்வார் செய்தற்கரிய காரியங்களைச் செய்கின்றவரே பெரியரென்பது தெரிகின்றதன்றோ?

இத்திருவாக்கானும் நாம் அறிவதென்னை? மக்கட்குப் பகுத்தறிவு உண்டென்பதிற் றடையில்லை. அது கொண்டு தக்கதின்னது, தகாததின்னது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம் என்பதிலும் தடைகிடையாது. ஆனால், எப்பொழுது அப்படி அறிந்து கொள்ள முடியுமென்றால், திருவருளோடு பகுத்தறிவு ஒன்று பட்ட பொழுதிற்றான் முடியு மென்பதை மட்டும் உணரல் வேண்டும் என்பதேயாகும். ஆகவே, பகுத்தறிவு தனித்தியங்க வல்லதுமன்று; என்றும் ஒரு நிலையாக விருப்பதுமன்று; திருவருளென்னும் ஒரு துணையை நாடிநிற்பதே; அது ஒரு கருவிபோல்வது; அதனைப் பயன்படுத்துபவனைப் போல்வது திருவருள் என்பன முடிவாகின்றன. இந்நிலைகளை யறிந்து கொள்ள முடியாது, தமக்குப் படிப்பில்லை யென்றால், அதற்காக நூல்கள் வேண்டுவதில்லை; அவைகளைக் கற்கவேண்டு மென்பது அவசியமில்லை என்றெல்லாம் கூறிப்போகும் நாயக்கர் செயல் கண்டிக்கத்தக்கதாகும். இவ்வாறு கூறுகின்ற நாயக்கர், பிறிதொரு இடத்தில், கோயில்களை யெல்லாம் கலாசாலைகளாக வைக்கவேண்டு மென்றும் கூறுகின்றார். எல்லாம் விந்தையே! படிப்பும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம்; பகுத்தறிவு ஒன்று மட்டும் போதுமென்று கூறுகின்ற ஒருவர் கலாசாலை வைக்கவேண்டு மென்பதற்குப் பொருளென்ன? பகுத்தறிவே சிறந்ததாக விருக்கும்பொழுது கல்வி எதற்கு? ஒன்றும் வேண்டுவதில்லை யன்றோ? நூல்கள் வேண்டாம். கலாசாலைகள் எதற்கு? என்று நாயக்கர் கூறுதற்குக் காரணம் பலருக்குக் தெரியாது. திருக்குறள்,

"அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்"

என்று கூறுகின்றது. அதைப்படித்தால், படிக்கச் சொன்னால், தாமும் புலையுணவு கொள்ளமுடியாது; தம்மைச் சேர்ந்தாரும் கொள்ள முடியாது. கொள்ள முடியா விட்டால் தமக்கும், தம்மைச் சார்ந்தார்க்கும் உணவும்கொள்ள முடியாது. இஸ்லாமியா ஓட்டலில் மாமிச உணவு வாங்கிப் புசிக்கின்ற பெரியார்களும் நாட்டைச் சீர்திருத்த முன்வந்தனரே, அதுதான் தமிழ்நாடு செய்த அருந்தவக்குறை. புத்தமதமே தலைசிறந்த மதமெனக் கூறுகின்றார் புலையுணவைப் புசிக்கும் நாயக்கர். இதுதான் விந்தையினும் விந்தை. அவர் என்ன செய்வார் பாவம்! வாய்ப் பேச்சு வீரர்கட்குச் சிறப்புக்கொடுக்க நாடு முன்வந்தது. இராமசாமி நாயக்கர் இம்மாதிரியெல்லாம் வாய்ப்பறையடிக்க முன்வந்தார். புத்தமதஞ் சிறந்தது என்று கூறித்திரியும் பெரியாரிற் பெரியார் வயிறு, ஆடு, கோழி, மீன் முதலிய நாட்டு உயிர்களுக்கும், புறா முதலிய காட்டு உயிர்களுக்கும் இடுகாடாக இருத்தல் தான் சிறப்புடையது; சிறப்புடையது. இது கிடக்க, தமக்குப் படிப்புத் தெரியாததற்காகவும், தமது பழக்க வழக்கங்கட்கும், தமது பசப்பு வார்த்தைகட்கும் ஆதரவளிக்க வில்லையெனவும் நூல்களை விலக்கித்தள்ளுதல் அறியாமை; அறியாமை. இங்கு ஒரு கதை நமது நினைவிற்கு வருகிறது. ஒரு ஊரில், மூக்கரையன் அதாவது மூக்கிலாதவனொருவன் இருந்தான். அவனை ஊரிலிருக்கின்றவர்கள் அனைவரும் மூக்கின்மைக்காக எள்ளனஞ் செய்வார். நாள் தோறும் எள்ளனஞ் செய்யப் பெறுவதைப் பொறாத அம்மூக்கரையன் ஒரு தந்திரஞ் செய்வானாயினன். ஒரு பரந்த வெளியில்போய் நாள் தோறும் நின்று கொண்டு ஆகாயத்தைப் பார்ப்பதும், இடையிடையே ஏதோ ஆனந்தப் படுவதுமாக விருந்தான். இதை ஒருவன் சில நாளாகப் பார்த்துக் கொண்டிருந்

தான். அவனுக்கு இவனுடைய செயலில் பெரிதும் ஐயம் தோன்றியது. ஆதலால், அவன் அம்மூக்கறையனை நெருங்கி, அன்பா! நீ இவ்வாறு புரிவதற்குக் காரண மென்னையென, யான் கடவுளைக் காண்பதற்கும், அவ ரோடு பேசுவதற்கும் இவ்வாறு செய்கின்றேன் என விடையளித்தான். ஓ! நீ நாள்தோறும் கடவுளைக் காண் கின்றனையா? அவரோடு பேசுகின்றனையா? அப்படியா னால் எனக்குங்கொஞ்சம் அக்கடவுளைக்காட்டு என்றனன். காட்டுவேன்; ஆனால் நீ இம்மாதிரி இருக்கின்றனையே என்றான் மூக்கறையன். பின் எம்மாதிரி ஆகவேண்டுமென் றான் மற்றவன். என்போல மூக்கிலாது நீயும் ஆவாயானால் தான் உனக்குக் கடவுளை நான் நிச்சயமாய்க்காட்டுவேன் என்றான். இசைந்தான் மற்றவன். மூக்கறையன் தான் எதற்காக இச்சூழ்ச்சி செய்தானோ அது கிட்டியது கண்டு மகிழ்ந்தவனாய், உடனே கத்திகொண்டு மற்றவனுடைய மூக்கினையும் அறுத்துவிட்டான். பிறகு அவ்வூரில் எவரே னும் மூக்கறையன் என்று தன்னை அழைத்தால், நான் மட்டு மல்ல என்று அவன் கூறிக்கொண்டு செல்வானாம். இக் கதைக்கும், தமக்குப் படிப்பில்லாததற்காகப், பிறரையும் படிக்கவேண்டாமெனக் கூறுகின்ற நாயக்கர் கதைக்கும் பேதமெங்கிருக்கின்றது. மேலே, திருவருள் ஒன்றுதானே வேண்டுமென்று கூறினீர். பின்னர் நூல்களைக் கற்க வேண்டிய அவசியமென்ன? என்றும் கூறுதும். திருவருளை எவ்வாறு அடைவது என்பதைத் திருவருட் செல்வர்கள் திருவாய் மலர்ந்துள்ள நூல்களே தெரிவிக்கின்றன வாத லால் அந் நூல்களைக் கற்க வேண்டுமென்று சொல்லுகின் றோம். தேவார திருவாசகங்கள் என்ன கூறுகின்றன? ஆண்டவன் இங்கிலையன்; அவன் திருவருள் இங்கிலையது; நாம் இங் கிலையுடையவர்கள்; நாம் ஆண்டவனை யறிந்து

அவன் திருவருளை அடையவேண்டிய நிலை இன்னது என்பனவற்றையே கூறுகின்றன. சைவ சாத்திரங்களும் பிறவும் இவைகளைத்தாம் கூறுகின்றன. ஆதலால் 'பகுத்தறிவு' ஒன்றே சிறந்ததெனக் கூறுவது தவறுடையதாகும். அதனோடு திருவருளும், திருவருள்வழி வந்த பெரியோர்களின் அநுபவ நூல்களும், அநுபவமும் சேர்ந்தகாலத்திற்றான் அது சிறந்ததாகும்; இன்றேல் அது பயனற்றதாகும் என்பது விளக்கமாகின்றது.

# சமய குரவர்.

நமது தெய்வச்சமயமாகிய சைவசமயந் தொன்மையுடையது; எனினும் இடைக்காலத்தில் இப்பொழுது நாட்டிடைத் தோன்றியுள்ள நாத்திக இயக்கம்போல சில இயக்கங்கள் தோன்றித் தெய்விகச் சமயத்தைச் சிறிது குன்றச்செய்தன. அக்காலத்துத் திருவருள்வலத்தால் தோன்றிப் பல அற்புதங்களைச் செய்து சமயத்தின் உண்மை ஆற்றலை உலகினர்க்கு எடுத்துக்காட்டிச் சமயத்தை ஓங்கிவளரச் செய்தவர்கள் நால்வர். அவர்கள் மாணிக்கவாசகர், சம்பந்தர், 'அப்பர், சுந்தரர் என்னும் திருப்பெயருடையவர்களாவார்கள். அந்நால்வரும் நமது சமயத்தை வாழ்விக்க வந்தவர்களும், வாழ்வித்தவர்களும் ஆவார்கள். ஆதலினால் ஆன்றோர்கள் அப்பெரியாரிற் பெரியார்களைச் 'சமய குரவர்' என்னும் பெயரால் அழைத்தனர். அம்முறையிலேயே நாமும் அந்நால்வரைச் சமயகுரவர் என்று அழைத்துவருகிறோம். ஆனால், சுயமரியாதையினர்மட்டும் அம்முறையை விடுத்து, அந்நால்வரும் புரட்டர்கள் என்றும், வயிற்றுப் பிழைப்பாளர்கள் என்றும் இன்னும் பலவாறான இழிச்சொற்களுக் கிலக்கானவர்கள் என்றும் கூறித்திரிகின்றனர். இவர்கள் சமயகுரவர்களை இழித்துக் கூறுவதோடமையாது அவர்களையும், அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய தேவார திருவாசகங்களையும் போற்றித் துதித்த, துதிக்கின்ற நம்முன்னோரையும், நம்மையும் முட்டாள்களெனவும் கூறுகின்றனர். கூறுவதற்குக் காரணங்கள் சில கூறுகின்றனர். அவர்கள் கூறுகின்றவற்றை ஆராய்வதற்கு முன்னர் நாம் சமயகுரவர்கள் எத்தகையோர்? அவர்கள் திருவாய்மலர்ந்த தேவாரதிருவாசகங்கள் எத்

தன்மையன? என்பனவற்றை ஆராய்ந்து தெளிந்து கொள்ளவேண்டுவ தவசியமாகும். முதலாவதாக மாணிக்க வாசகரைப்பற்றிப் பார்ப்போம்.

### மாணிக்கவாசகர்.

நமது மணிவாசகர் மதுரையம்பதிக் கணித்தாகவுள்ள திருவாதவூர் என்னும் திருப்பதியில் ஆமாத்திக நற்குலத் தில் தோன்றியவர்கள். தோன்றியபெருமானுர் பலவகைப் பட்ட கல்விகேள்வித் துறைகளில் தேர்ச்சியடைந்ததோடு, பெறற்கரிய மானுடப்பிறவி யெடுத்தார்பால் அமைய வேண்டிய பலநல்லொழுக்கங்களிலும் உலகினர்கொண்டா டத்தக்கநிலையில் சிறந்து விளங்கினுர்கள். இங்ஙனமாக எல்லா நலன்களையும் தம்மகத்தேயுடைய நமது மணிவாச கப்பெருமானுரின் சிறப்பினைப் பிறர்பால் அறிந்த அக்கா லத்துப் பாண்டியமன்னன் அடிகளை அழைத்துத் தனது அரசியலுக்கு முதன்மையான அமைச்ச பீடத்தையும் 'தென்னவன் பிரமராயன்' என்ற உயரிய பட்டத்தை யும் சூட்டியருளினுன். மணிவாசகனுர் அமைச்சராக அமைந்தது தான் செய்த புண்ணியத்தினுலென்றே அம் மன்னன் உள்ளத்துக் கருதியிருந்தான். அமைச்சியற்றலை மைபூண்ட நமது பெருமானுரோ, அவ்வரசியலையும் ஒழுங் குபெற நடத்திக்கொண்டு, தாம் பெற்ற பிறவியினைப் பேறுடையதாக்க ஒரு ஞானுசிரியனை யடையவேண்டும்; அவனது திருவருளால் தமக்கு உய்வுண்டாகும் என்னும் ஒரு பேரெண்ணத்தையே மனத்துடையராய் வாழ்ந்து வருவாராயினர். மெய்யன்பர் திருவுள்ளக்கருத்து நிறை வேறுகின்ற காலம் நெருங்கியது. பாண்டியமன்னனின் குதிரைப்படை குன்றிவிட்டதெனக் குதிரைத்துறைக்கா வலாளர் அரசரிடத்துக் குறையிரந்து கொண்டனர். அர

சர்பெருமானர் உடனே தனது அமைச்சியற்றலைவராகிய மணிவாசகப் பெருமானரை யழைத்து, குதிரைத்துறைக் காவலாளர் நமது குதிரைப்படை குறைந்துவிட்டதெனக் கூறுகின்றாராதலால், நம் பெருநிதியிலுள்ள பொருள்களை யெடுத்துக் கொண்டுபோய் வேண்டிய குதிரைத்திரள்களைக்கொணருங்கள் என்று கட்டளையிட்டனன். அடிகளும் அரசனதாணையின்படிப் பொருட்குவியலோடும், காவலாளரோடும் குறிப்பிட்ட நன்னாளில் குதிரைத்திரள் கொணரப் புறப்படுவார், மதுரையம்பதியிலுள்ள அம்மையப்பனை வணங்கிச் சென்றார். சென்ற பெருமானர் திருப்பெருந்துறை யென்னும் திருத்தலத்திற்கு அணித்தாகச் செல்லுங்காலத்து அளவிலா மகிழ்ச்சியும் பிற நற்சகுணங்களும் தோன்றித் தம்மைமறந்தவராய்க் காந்தத்தினை நெருங்கும் இரும்பென விரைந்து சென்று அப்பதியை யடைந்தார்.

அத்திருப்பதியிலுள்ள ஒரு மலர்ச்சோலையி னிடத்து இறைவன் ஞானசிரியனாகவும், பூதகணங்கள் மாணவவருக்கங்களாக அவரைப்புடைசூழ்ந்தும் குருந்தமரத்தடியினில் இருந்து ஞானநூலாராய்ச்சி செய்துகொண்டிருக்கக் கண்டார் நமது பெருமானர். உடனே, தம்மைமறந்து அவ் ஞானசிரியனுடைய திருவடிகளில் வீழ்ந்து தம்மை உய்விக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க, அதற்கிணங்கி அவ் ஞானசிரியன் நம்பெருமானர்க்கு ஞானேபதேசஞ் செய்தருளினர். ஞானேபதேசம் பெற்ற அடிகள், தாம் அமைச்ச ரென்பதையும், அம்முறையில் குதிரைத்திரள் கொணரவந்திருக்கின்றேமென்பதையும் அறவே மறந்தவராய்ப் பேரானந்தப் பெருங்கடலுள் திளைத்திருப்ப, உடன் வந்த காவலாளர், பெருமானர் நிலையைக்கண்டு அந்நிலையை அரசற்குத்தெரிவிக்கத் திரும்பிச்சென்றனர். குதிரைத்

திரள் கொணரக் கொண்டுவந்த பொருள்களை யெல்லாம் இறைவனின் திருவுளக்கருத்தின்படி ஆலயங்கள் கட்டுவதிலும், பிற நற்றருமங்கள் செய்வதிலும் செலவழிப்பாராயினர் அடிகள். இஃதிவ்வாறிருப்ப, அடிகளின் நிலையைக் காவலாளர் மூலம் கேட்ட அரசன் ஐயமுடையவனாய்த் தூதர்மூலம் ஓலைவிடுத்தனன் அடிகளார்க்கு. ஓலையைக்கண்ணுற்ற அடிகள் இறைவனை வேண்ட அவனது ஆணையின்படி ஆவணிமூலநாள் குதிரைத்திரள்வந்து சேருமென மறு ஓலை கொடுத்தனுப்பினர். பின்னர் அத்திருப்பெருந்துறையை விடுத்து அரசனை அண்மி, அவனிடத்துப்பரிசுகள் பெற்றுக்கொண்டு தம் திருப்பதியாகிய திருவாதவூரில் தங்கியிருந்தார். ஆவணிமூலநாள் வந்தது. குதிரைத்திரள் வந்துசேரவில்லை. அடிகள்பால் பொறாமை கொண்டிருந்த அமைச்சராலும் பிறராலும் பலவகையாகக் கேள்விப்பட்ட அரசன் அடிகளாற்குப் பல தண்டனைகளை ஏவலாளரால் செய்வித்தான். அடிகள் சிறையிலிருந்து கொண்டு ஆண்டவனைவேண்ட அப்பெருமானாரே ஒருதலைமைக் கர்த்தனாக, பூதகணங்களெல்லாம் குதிரைச் சேவகர்களாக பெருங்குதிரைத்திரள்களைக் கொண்டுவந்து சேர்த்தனர். அப்பொழுது அரசன் அடிகளார்க்குத் தண்டனை விதித்ததைப்பற்றி வருந்தி அடிகளைவரவழைத்து அவற்கும், குதிரைச்சேவகராகவந்த பெருமாற்கும் வேண்டுவன நல்கிவிடைகொடுத்து மகிழ்ந்திருப்பானாயினன். அடிகளும் திருவாதவூர் சென்றார்கள். மறுநாட்காலையிலோ குதிரைத் துறைக்காவலாளர் அரசரிடத்து, அரசரேறே! இதுபொழுது வந்தபரியினங்கள் இரவு நரியினங்களாக மாறி இருந்த பரியினங்களையும் கொன்று வீழ்த்திச்சென்றன என்று முறையிட்டார். கேட்ட அரசற்கு எல்லையில்லா சினம் வந்தெய்த அடிகளாற்குக் கொடுந்தண்டங்கள் பல செய்ய ஏவலாளரைத்

தூண்டினன். அவ்வாறே அவர்கள் அடிகளைத் துன்புறுத்தினர். அடியவர் துன்புறுதலைக்கண்டு சகியாத இறைவன் வைகை யாற்றில் பெருவெள்ளம் வரும்படியாகச் செய்தனன். அவ்வெள்ளத்தை யடைக்கும்படியாகத் தனது குடிமக்களை ஏவினன் அரசன். அக்குடிமக்களுள் ஒருவளாய வந்தியென்னும் ஒரு முதியாளின் வேலையாளனாக மண்வெட்டி உடைப்பினை அடைக்கவந்தான் அனைத்துயிருங் காக்குமப்பன். வந்தபெருமான் தானும் வேலை செய்யாது பிறரையும் வேலை செய்ய வொட்டாது ஆடல் பாடல்கள் முதலிய விளையாட்டுகள் பலபுரிவானாயினன். அதனைக் கண்ட ஏவலாளர் அரசனிடத்துச் சென்று கூற, அவன் சினமிக்குடையவனாய் நதிக்கரைக்குவந்து வந்தியாளென நின்றபெருமானைப்பிஞ்ஞகனைப் பிரம்புகொண்டடித்தான். அடிகொண்ட பெருமானார் உடைப்பையடைக்க ஒரு கூடை மண்ணையும் கொட்டிவிட்டு மறைந்தருளினார். அடி அங்கிருந்த அனைவர் மேலும்பட்டது. அதுகண்ட அரசன் அடி யுண்டவன் நம்மையாளும் ஆண்டவனே யென்பதையும், இவ்வளவு நிகழ்ச்சிகளுக்கும் காரணராயிருந்த மணிவாசகப் பெருமானார் அவனுடைய மெய்யன்பரே யென்பதையும் உணர்ந்தவனாகி, அடிகளைத் தண்டத்தினின்றும் விலக்கி அவரைத்தாழ்ந்து தான் அறியாது செய்த தீமைகளைப் பொறுத்தருளி அரசியலை நடத்துமாறு வேண்டினன். அடிகளார் அரசற்கு வாழ்த்துக் கூறி, அரசியலை நடத்தமுடியாதென்பதை அவர்க்கு அறிவித்து விட்டுத் தாம் அம்மதுரை யம்பதியை விட்டுத் தம்மையாட்கொண்ட திருப்பெருந்துறை மேவி இறைவனை வணங்கி, அங்கிருந்து பலதலங்கட்குச் சென்று இறைவனை வணங்கியும், தம்மோடு வாதத்திற்கு வந்த புத்தரை வென்றும், ஊமைப்பெண்ணைப் பேசவைத்தும் பல அற்புதங்களைச்

செய்து இறைவன் பணித்தவண்ணம் தில்லையம்பதிக்குச் சென்று சிவத்தொடு இரண்டறக் கலந்தருளினர் என்பது நம் மணிமொழிப்பிரானுடைய சுருக்கமாகிய சரிதம்.

## சம்பந்தர்.

சோழநாட்டிலேயுள்ள சீர்காழியென்னும் திருப்பதியில் கவுணியர் குலத்தில் சிவபாத விருதயர் என்னும் ஒரு சீரியார்க்கும் பகவதியம்மையார்க்கும் புதல்வராகப் பிறந்த பெருமானுர் நம் திருஞானசம்பந்தர். அங்ஙனமாகப் பிறந்தருளிய பெருமாற்கு மூன்றுமாண்டு முற்றிய காலத்தில், ஒரு நாள் தந்தையாரோடு நீராடக் குளத்திற்குச் சென்றவர் நீரிலே மூழ்கியிருக்கும் தந்தையாரைக்காணுது 'அம்மையே யப்பா' என மும்முறையழுதாரென்பார் ஆசிரியர் சேக்கிழார். அழுத பிள்ளையார்க்கு உலகங்களை யெல்லாம் ஈன்று காத்தழிக்கும் அம்மையும் அப்பனும் எழுந்தருளி வந்து பொற் கிண்ணத்தில் ஞானப்பாலைக் குழைத் தூட்டி அழுகையை நிறுத்திச் சென்றனர். நீரிலிருந்து வெளிப்பட்ட தந்தையார், பிள்ளையார் பாலுண்ட வாயராய்த் திகழ்வதைக் கண்டு மனம் வருந்தியவராய்க் கோல் கொண்டு வினவ, நமது பிள்ளையார் ஆகாய வீதியில் எழுந்தருளியிருக்கும் அம்மையப்பனை இவர் தாம் எற்குப் பாலூட்டியவர் என்று சுட்டிக்காட்ட, தந்தையார் ஆண்டவனை வணங்கியதோடு தமது திருக்குழந்தையார் அருட்பாலுண்டு தோத்திரமாகிய தேவாரத் திருவருட்பாவினைப் பாடுதலைக் கண்டு அகமிக மகிழ்ந்தவராய்த் தோளின் மேற் பிள்ளையாரை ஏற்றிக்கொண்டு ஆலயங்கட்கெல்லாம் சென்று ஆண்டவனை வணங்குவாராயினர். பின்னர் நம் பிள்ளையார்க்கு இறைவனுல் முத்துப்பல்லக்கு, முத்துப் பந்தர், பொற்றுளம் முதலிய கொடுக்கப்பெற்றன. அவை

களைப் பெற்று அகமகிழ்வோடு அடியார் பதினறுயிரவர் தம்மைப் புடைசூழ்ந்துவர, ஆண்டவனுல் அளிக்கப்பெற்ற முத்துப்பல்லக்கில் எழுந்தருளி இறைவன் வீற்றிருந்தருளும் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு, அக்காலத் திருந்த திருநாவுக்கரசரோடும் வேதாரண்யமென்னும் திருமறைக் காட்டுக்குச் சென்று இறைவனை வணங்கிக் கொண்டு, அந்நாளில் பாண்டியநாட்டு அரசனுயிருந்த கூன்பாண்டிய மன்னன் மனைவியாராகிய மங்கையர்க் கரசியார், மந்திரியாகிய குலச்சிறையார் ஆகிய இருவரின் அழைப்புக் கிணங்கி மதுரையம்பதிக்கு அடியார் குழாத் தொடு நாவுக்கரசரை நிறுத்தி வந்தருளினர். அவ்வூரின் கணுள்ள சமணர்கள் பிள்ளையார் எழுந்தருளியிருந்த மடத் தில் நள்ளிருளில் திவைத்தது தெரிந்த பிள்ளையார் அத் தீயினைப் பாண்டியனது உடலில் மெல்லச்சென்று பற்று மாறு திருவருள் வலத்தால் ஏவினர். அத்தீயானது கூன் பாண்டியனின் உடலில் வெப்புநோயாகத்தோன்றி அவனை அளவிலாத் துன்பத்திற்கு ஆளாக்கியது. அந்நோயைத் தீர்க்க சமண்சமயத்தினர் வேண்டியமுறைகளைக் கையாண் டும் பயனிலாதுபோக, அரசியாரும், குலச்சிறையாரும் திருஞானசம்பந்தராகிய பிள்ளையாரை அழைக்க அரச னிடத்து விடைபெற்றுக்கொண்டு நகரையலங்கரித்துப் பிள்ளையாரை விருப்புடனழைத்துச் சென்று அரசனுக் கிருந்த அந்நோயை இருமுறையில் தீர்க்கச்செய்தனர். அரசன் உளமகிழ்ந்தான். ஆனல் அவனைச் சூழ்ந்திருந்த சமணர்களெல்லாம் மனம்புழுங்கினவராய்ப் பிள்ளையாரை வாதத்திற்கழைத்தனர். அரசன் வாதத்திற்கு நடுநிலையாள னுகவிருப்ப, நம்பிள்ளையார் அவர்கள் கருத்துப்படியே தீயிலிட்ட ஏடு பச்சையாகவும், நீரிலிட்ட ஏடு எதிர்த்து வரவும் திருவருள் வலத்தால்செய்து வாதத்தில் வென்ற

னர். நடுநிலையாளனுகவிருந்த அரசன் அச்சமணர்களைக் கழுவேற்றினன். பின்னர் அரசனையும் பிறரையும் வாழ்த்திப் பலநாளாக அடைபட்டுக்கிடந்த ஆலவாய்த் திருத்தலத்தையும் திறந்து ஆண்டவனை வணங்கிச் சைவ சமயத்தைத் தம்மையழைத்த மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் மனங்களிசிறப்பப் பரப்பி மீண்டும் பல தலங்களுக்குச்சென்று இறைவனைவணங்கிச் செல்லுவார், எலும்பைப் பெண்ணுரு வாக்கியது முதலான பல அற்புதங்களைச் செய்து பதினுருவது ஆண்டில் தமது திருமணம் நடந்தபொழுது ஆங்கு வந்திருந்த அனைவரோடும் அருளொளியிற் கலந்தனர்.

## திருநாவுக்கரசர்.

திருவாமூர் என்னும் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள ஒரு திருத்தலத்தில் வேளாண்மரபு விளங்க, புகழனுர் என்னும் ஒரு புனிதர்க்கும், மாதினியார் என்னும் மாண்பு மிக்காருக்கும் மகவாகப் பிறந்தவர். இவரது பிள்ளைத் திருநாமம் மருணீக்கியார். இவருக்கு முன் பிறந்தாரொருவர். அவர் திலகவதியாரென்னும் திருவுடைச் செல்வியாராவர். அடிகளுடைய அன்னையும் அத்தனும் விண்ணுலகடைய அடிகளின் தமக்கையாராகிய திலகவதியாரும் தமக்கென நிச்சயிக்கப்பெற்ற கலிப்பகையாரென்பார் அரசனின் ஏவலால் போர் மேற்சென்று பகைவரால் கொல்லப்பட்ட செய்தியை யறிந்து அவர் நீங்கித்தான் இருப்பது சரியன்று என அவரும் உயிர் நீங்கத்துணிந்த பொழுது, நம் பெருமானுர் தமக்கையாரை வணங்கி, அன்னையையு மத்தனையும் ஒருங்கே பிரிந்து தவிக்கின்ற ஏழையேற்கு நினது பிரிவு ஆற்றுவதோ? ஆதலால், யானும் உம்மோடு உயிர் துறப்பேன் என்று உரைத்தார். கேட்ட திலகவதியார் தம்பியார் உயிர் காத்தற் பொருட்டும், தமது தவக்

குறையை நிறைவேற்றுதற் பொருட்டும் உயிர் சுமந்தார். ஆனல், இவ்வண்ணம் விண்ணப்பித்துக் கொண்ட பெருமானர் சின்னாட்களுள் தமக்கையாரை விடுத்து சமண் சமயம் புகுந்தார். சைவசமய சாத்திரங்களையும் பிற அறிவு நூல்களையும் ஐயந்திரிபறக்கற்ற பெரியார் அங்கும் சமண் மத நூல்களையும் அவ்வாறே கற்றுத் 'தருமசேனர்' என்னும் ஒரு பட்டமும் பெற்றுத் திலகமெனத் திகழ்ந்தார். தம்பியார் சமண்சமயஞ் சென்றதால் மனமிகவருந்திய நம் திலகவதியார், தாம் வழிபட்டுவரும் வீரட்டானேச்சுரனிடத்துத் தம்பியை எவ்வழியிலேனும் மீள ஆட்கொள்ள வேண்டுமென வேண்ட, அதற்கிசைந்த பெருமானர், அப்ப மூர்த்திகட்குச் சூலைநோயை உண்டுபண்ணுவித்தார். அச்சூலை நோயானது சமண்மதத்தவரது மணி மந்திரங்களால் தீராதிருத்தலை யுணர்ந்து அடிகள் தமக்கையாரிடத்துத் தாமே வந்து திருவடிகளிற்பணிந்துவேண்ட, அவ்வம்மையார் ஆண்டவனுடைய திருமுன்னர்க்கொண்டு போய்த் தம்பியைவிட, அவர்களும் 'கூற்றாயினவாறு' என்னும் திருப்பாசுரத்தை இறைவனின் திருவுள்ளம் இரங்கும்படிப்பாட, இறைவனும் திருவுளமிரங்கி அச்சூலைநோயைத் தீர்த்து 'நாவுக்கரசர்' என்னும் ஓர் சிறப்புப்பெயர் கொண்டழைத்து, "அன்பனே, நீ நமக்கு மகிழ்வைக்கொடுக்கும் தேவாரத் திருப்பாசுரங்களைத் திருவாய் மலர்ந்து கொண்டிருப்பாயாக" என்று அசரீரியின்மூலமாக அருள் புரிந்தான். அடிகள் இவ்வாறு இங்கிருந்து கொண்டிருத்தலைப் பொறாதவர்களாகிய சமணர்களின் தூண்டுதலால் பல்லவனாகிய சமணமன்னன் சில ஏவலாளர்களையழைத்து நாவுக்கரசரைத் தன்னிடத்துக் கொண்டுவர ஆணையிட்டான். அங்ஙனம் வந்து தம்மை அழைத்த காவலாளரிடம் நம் அடிகள் 'நாமார்க்குங் குடியல்லோம்' என்னும் தாண்

டக மொன்றைக் கூறி வர மறுத்துவிட்டார். பல்லவ அரசன் சினமுடையவனாகி நீற்றறையி லிடுவித்தான்; விடங் கலந்த பாலடிசில் ஊட்டச்செய்தான்; மதங்கொண்ட மால்களிற்றை அடிகள் மேல் விடச்செய்தான்; இத்தனைக்கும் நாவுக்கரசர் பெருமானார் திருவருள் வலங்கொடு தப்பித்துக்கொள்ள, அரசன் சினமிக்குடையனாகி அடிகளைக் கல்லோடு சேர்த்துக் கட்டிக் கருங்கடலுள் போடச் செய்தனன். அதற்கும் அடிகள் நமச்சிவாயப் பதிகத்தை யோதித்தப்பிக் கரையேறிப் பல திருத்தலங்களையும் வணங்கிக்கொண்டும், அத்திருத் தலங்களில் வீற்றிருந்தருளும் பெருமானார்க்குத் திருப்பாசுரங்கள் பாடிக்கொண்டும் வருவார், திங்களூரிலுள்ள அப்பூதியடிகளென்னும் ஆண்டவனடியார் தவப்புதல்வன் பாம்புகடித்து இறந்துபோனவனைத் திருவருள்வலத்தால் உயிர்ப்பித்து, அவரை விட்டு நீங்கிப் பல தலங்கட்கும் சென்று வணங்கிக்கொண்டும், பல அற்புதங்களைச் செய்துகொண்டும் இறைவனிடத்து இடையறாத அன்புடையவராக விருந்துப் பூம்புகலூர் என்னும் திவ்யத்திருத்தலத்தில் சிவபெருமான் திருவடிக் கீழ் சிவானந்தபதவியைப் பெற்றுய்ந்தார். இப்பெருமானார் கைலயங்கிரியைக் காணவேண்டு மென்னும் பெருவிருப்போடு நடந்து கால்களெல்லாந்தேய, கைகளால் நடந்து அவைகளுந்தேய, அங்கத்தால் உருண்டு செல்லுகின்ற காலத்தும் முயற்சியைவிடாது அன்போடு வருதலைக்கண்ட சிவபெருமானார், கைலாயச் சிறப்பினை திருவையாறு என்னும் திருத்தலத்தில் காட்டியருளினார் என்பதும் போற்றத்தக்கதாகும்.

### சுந்தரர்.

இனிச், சுந்தரரோ, திருநாவலூரிலுள்ள சைவ அந்தணர் குல திலகமாகிய சடையனார்க்கு, இசைஞானியார்

என்னும் அம்மையார் மணிவயிற்றிற் பிறந்தவ ராவார். பிறந்தவர், அரசராகிய நரசிங்க முனையரையர் விருப்பிற் கிணங்க அவரில்லத்தில் வளர்ந்தார். பின்னர் மணமானது அவர்க்கு நிச்சயமாக்கப் பெற்று நடக்கும்போது, எல்லா உலகங்கட்கும் உயிர்கட்கும் இறைவனாகிய பெருமான் ஒரு அந்தணர் உருக்கொடுவந்து சுந்தரன் எனக் கடிமை யாவான்; ஆதலால் என்னுடைய அநுமதியின்றி இம் மணம் நடத்தல் கூடாதென மறுக்க, அங்கிருந்தாரெல்லாம் அந்தணர்க் கந்தணர் அடிமையாதல் முறையில்லா முறையா யிருக்கின்றதென, சுந்தரர் சினமுடையராகி அந்தணனாக வந்திருக்கும் ஆண்டவனை நோக்கி, 'பித்தன்' போலும் இவ்வந்தணன் என்று இழித்துக் கூறியதோடு, அவர் கையில் வைத்திருந்த அடிமையோலையையும் பறித்துக் கிழித்து விட்டார். அவ்வந்தணர் அச்செயலைக் கண்டு அஞ்சினார்போல நடித்து, அவையினரை நோக்கி இவ்வாறு இவன் செய்தது நேரிதேயோ? இவ்வோலை கிழித்ததனால் இவன் அடிமையாகாது போதல் முடியாது. இது நகலே. மூலவோலை எனது திருவெண்ணெய் நல்லூரில் மனையகத்தி லிருக்கின்றதெனக் கூற, அவ்வவையினரும், ஆலால சுந்தரரும் அங்கு சென்றே இவ்வழக்கினைத் தீர்த்துக் கொள்வோமென அந்தணரையும் அழைத்துக் கொண்டு அவ்வூரையடைந்து அங்குள்ளார் முன்னிலையில் அந்தணரைக்கொண்டு மூலவோலையைக் கொணர்வித்துப் பார்த்துக் கையெழுத்து முதலான எல்லா அடையாளங்களாலும் ஆலாலசுந்தரர் அந்தணர்க்கு அடிமையாகவேண்டுமென அவையினரும் பிறரும் முடிவு செய்த பின்னர், அவையினர் வேண்டுதலுக்கென தனதில்லத்தைக் காண்பிப்பதாகத் திருவெண்ணெய் நல்லூருள் இருக்கும் திருக்கோயிலினுள் அந்தணர்புக, அவரொடு ஆலால சுந்தரரும்

புகுந்தார். சென்ற வந்தணர் திடீரென மறைந்தது கண்டு சுந்தரர் வியப்பினை யடைகின்ற தருணம் அந்தணனாக வந்து அடிமை கொண்ட பெருமானுர் ஆகாயவீதியில் அம்மையோடு ஏறூர்தியனுய் எழுந்தருளி, 'அன்பனே! உலக வாழ்க்கையி லீடுபட்டு இருவினை வயப்பட்டுழலாது உன்னை நாம் வலியவந்து ஆட்கொண்டனம்; இனி, நமக்கு இன்பத்தை விளைவிக்கத்தக்க திருப்பாசுரங்களைப் பாடித் துதிப்பாயாக' வென்று கூற, சுந்தரர் ஆண்டவனே தம்மை வந்தாட்கொண்டமையைத் தெரிந்தானந்த மிக்கா ராகித் தம்மையாட்கொண்ட அடியார்க்கெளிய அம்பல வாணனை நோக்கி, 'ஐயனே, ஏதுமறியாத ஏழையேன் நின்னை என்சொல்லிப் பாடுகேன்' என இரந்து நிற்ப, ஆண்டவன் 'அன்பனே! நீ முன்னர் நம்மைப் பித்த னென்று கூறினுயாதலாலே இப்பொழுதும் அவ்வாறே பாடுவாயாக' என்று கூறினுன். சுந்தரரும் 'பித்தா பிறை சூடி' என்னும் ஒரு பாசுரத்தை அவ்விடத்திற் பாடியருளி னுர். இறைவன மறைந்துபோனபின் பிற தலங்களையும் போய வணங்கிகொண்டு ஆங்காங்கு திருப்பாசுரங்களைப் பாடிக்கொண்டு வருவார், திருவாரூரில் பரவையாரை யும், திருவொற்றியம்பதியில் சங்கிலியாரையும் பெருமா னருளினுல் மனைவியர்களாகப்பெற்றுர். முதலைவாய்ப் பிள் ளையை யழைத்தது முதலாக பல அற்புதங்களையும் அவ னருள்கொடு செய்தருளினுர். இறுதியில் துணைவரான சேரமான் பெருமாணயனுரோடு திருக் கைலாயத்திற் கெழுந்தருளிப் பரசிவத்திற்கு அணுக்கராம் பதவியில் நின் றுர். இவர் சரித்திரத்திலுள்ள அற்புத நிகழ்ச்சிகள் பல. அவைகளுள் ஒன்று, ஆண்டவனைத் தம்முடைய பரவை யாரின் ஊடல் தீர்ப்பதன் பொருட்டுத் தூது கொண்ட தாகும். இதுகாறுங் கூறிய வாற்றுல் நாற்பெருங் குரவர்க

1493(7750)



ளாகிய மாணிக்கவாசகர், சம்பந்தர், அப்பர், சுந்தரர் முத லானோரின் பெருமையை நாமறிந்தோம். இனி, அப்பெரு மான்கள் திருவாய்மலர்ந்தருளிய திருவருட்பாக்களாகிய தேவாரதிருவாசகங்களின் மாட்சியைப் பற்றித் தெரிந்து கொள்ள முனைவாம். அந்நூல்கள் தெய்வமணத்தை வீசு வனவென்பது அவைகளைக் கற்றாரே யல்லாது கேட்டோ ரும் அறிவர்.

ஏனைய நூல்களைப் படித்தடைகின்ற இன்பத்தைக் காட்டினும் தேவார திருவாசகங்களைப் படித்தவர் அநுப விக்கின்ற இன்பம் சிறப்புடையது என்பது துணிபு. அத் தகைய நூல்களுட் கூறியிருக்கின்றன, ஆண்டவனியல், மக்களியல், அவ்விறைவனுக்கும் மக்களுக்கு மிருக்குந் தொடர்பு, மக்கள் அவனையடைய வேண்டியதற்குரியவழி என்பவைகளே. இவைகளை அந்நூல்களிலுள்ள சிற்சில பாசுரங்களைக் கொண்டு விளக்குவாம்.

"தோடுடைய செவியன் விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்"

எனவும்,

"பொன்திரண் டன்ன புரிசடை புரளப் பொருகடற்
பவளமோ டழனிறம் புரையக்
குன்றிரண் டன்ன தோளுடையகலங்கு லாயவெண்
ணூலொடு கொழும்பொடி யணிபவர்
மின்திரண் டன்ன நுண்ணிடை யரிவை
மெல்லிய லாளையோர் பாகமாப் பேணி
யன்றிரண் டுருவமாய வெம்மடிக ளச்சிறு பாக்கம
தாட்சிகொண் டாரே"

எனவும்,

"கங்கையைச் சடையுள் வைத்தார் கதிர்பொறி
யரவும் வைத்தார்
திங்களைத்திகழ வைத்தார் திசை திசை
தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார் மான் மறி
மழுவும் வைத்தார்
அங்கையு ளனலும் வைத்தார்
ஐயனையா றனாரே"

எனவும்,

"வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமே லிளமதியந் தோன்றும் தோன்றுங்
கடியேறுகமழ் கொன்றைக் கண்ணிதோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற் றுரிவைப் போர்வை தோன்றும்
எழிறிகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே"

எனவும்,

"பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக் கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே"

எனவும்,

"நீறுதாங்கிய திருநுதலானை நெற்றிக் கண்ணனை
நிரைவளை மடந்தை
கூறுதாங்கிய கொள்கையினானைக் குற்றமில்லாயைக்
கற்றையஞ் சடைமே
லாறு தாங்கிய வழகனை யமரர்க்கரிய
சோதியை வரிவரா லுகளுஞ்
சேறுதாங்கிய திருத்தினை நகருட் சிவக்கொழுந்தினைச்
சென்றடை மனனே"

எனவும்,

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்த மேவிய சீர்
ஆதியே யடியே னாதரித் தழைத்தால்
அதெந்து வேயென் றருளாயே"

எனவும், இறைவனின் அருளுருவத்தைக் கூறுகின்றன. அவ்விறைவனின் தன்மையை,

"பொன்னு மெய்ப் பொருளுந் தருவானை
போகமுந் திருவும் புணர்ப் பானைப்
பின்னையென் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
யின்ன தன்மைய னென்றறி வொண்ணா
வெம்மானை யெளிவந்த பிரானை
யன்னம் வைகும் வயற்பழனத்
தணியா ரூரானை மறக்கலு மாமே."

எனவும்,

"சிந்திப்பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பனமொய்த் திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்பு சுற்றி
அந்திப்பிறை யணிந்தாடு மையாற னடித்தலமே."

எனவும்,

"தம்மையே புகழ்ந்திச்சை பேசினும் சார்விலும்
தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்

இம்மையே தரும் சோறுங் கூறையு மேத்தலா
மிடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள் வதற் கியாது
மையுற வில்லையே.''

எனவும்,

''நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
யாளாய வன்புசெய்வோ மடநெஞ்சே யரனுமங்
கேளாய்நங் கிளைகிளைக்துங் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே.''

எனவும்,

''பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
வூனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
யுலப்பிலா வானந்தமாய
தேனினைச் சொரிந்து
புறம்புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.''

எனவும், பிறவாற்றானும் விளக்குகின்றன.

''எத்தாய ரெத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடா மேவர் நல்லார்
செத்தால்வந் துதவுவா ரொருவரில்லை
சிறுவிரகாற்றீமூட்டிச் செல்லா நிற்பர்.''

எனவும்,

''வாழ்வாவது மாயம் மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
றாழாதறஞ் செய்மின்றடங் கண்ணான் மலரோனுங்
கீழ்மேலுற நின்றான் றிருக்கேதார மெனீரே.''

எனவும்,

''மத்தயானை யேறிமன்னர் சூழவருவீர்காள்
செத்தபோதி லாருமில்லைச் சிந்தையுள் வைம்மின்கள்.''

எனவும்,

"தந்தையார் போயினுர் தாயரும் போயினுர்
தாமும் போவா
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்ருர்
கொண்டு போவார்."

எனவும், பிறவாற்ருனும் யாக்கை நிலையாமையையும், சுற்ற முதலிய தொடர்பின் நிலையாமையையும் விளக்க மாக எடுத்துக் கூறுகின்றன.

இனி, இறைவனை நாம் வணங்கவேண்டிய நெறியினை யும், அதுவே நமக்குப் பிறவி கிடைத்ததன் முக்கிய நோக்கமென்பதனையும்,

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே."

எனவும்,

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சய போற்றிபோற்றியென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலரு நில்லே."

எனவும்,

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையே னெடுங் காலமே."

எனவும்,

"ஆடுகின்றிலை கூத்துடையான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறலறிலை செய்வதொன் றறியேனே.

எனவும் பிறவகையானும், விளக்கமாக எடுத்துக் கூறு கின்றன.

அவைகள் இறைவனை நாம் தோத்திர மூலமாகவணங் குதற்கு உதவுவன. அன்றியும் மக்கட்கு வேண்டிய நீதி யையும் எடுத்துப் புகட்டுகின்றன. இன்னும் அந்நூல் களின் சிறப்பு அளவிடற்கரியது. ஆயினும் நாம் இம்மட் டோடு நிறுத்திக்கொண்டு சமயகுரவர்களைப் பற்றியும், அவர்கள் திருவாய்மலர்ந்த இத்தேவார திருவாசகங்களைப் பற்றியும் இழித்துக் கூறுவதற்கு அவர்கள் எடுத்துக் காட்டுகின்ற காரணங்களை ஆராய்வாம்.

"மாணிக்கவாசகர் பாண்டியனின் பொருளைக் குதி ரைத்திரள் கொணரக் கொண்டு போனவர் அதைவிடுத்து வேறுவழியில் செலவிட்டார்; ஆதலால் அவர் ஒரு திருடர்" என்று அக்குழுவினர் கூறுகின்றனர். சம்பந்தர் "வேதவேள்வி நிந்தனை செய்துழல், ஆதமில்லி" எனவும், "பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட்டேரியோம்புஞ் சிறப் பர் வாழ்தில்லை" எனவும் வேள்வியினைச் சிறப்பித்துக் கூறுவதோடு, "பல்லாயிரக் கணக்கான சமண்சமயத்தின ரைக் கழுவிலேற்றினர். ஆதலால் அவர் ஒரு கொலைபாத கரே" எனவும், சுந்தரன் "பரவையார் சங்கிலியார் என்னும் இரண்டு பெண்களை இழுத்துக்கொண்டலைந்தவர். அவர் ஒரு ஆசார்யரன்று; மனிதவர்க்கத்தி விழிந்த கீழ் மகனே யெனவும் கூறுவர் சுயமரியாதையினர். திருநாவுக் கரையரைச் சமணமதத் துரோகி எனவும் பிறவகையி

ளுலும் இழித்துக் கூறுகின்றனர். இவ்வாதமானது இருவகையாகப் பிரிவுபடவேண்டும். ஏனென்ருல், அக் கூட்டத்தார் இங்ஙனஞ் சொல்லுவதோ டமையாது இப் பெரியார்களின் சரித்திரங்களைப் பொய்யென்றும் கூறுகின்றனர் ஆதலால். சரித்திரம் பொய்யா ? மெய்யா? என்பது ஒரு வாதம்; அதற்குமேலாக அந்நால்வர்களும் உயர்ந்தவர்களா? தாழ்ந்தவர்களா? என்பது இரண்டாவது வாதம். சரித்திரம் பொய்யானுல், மாணிக்கவாசகர் பாண்டிய மன்னன் பொருளை எடுத்துக் கொண்டு குதிரைத்திரள் கொணரச் சென்றது முதலாகவுள்ள கதையும், சம்பந்தர் முதலிய மூவர்பேரில் சாற்றப்படும் குற்றங்களுக்குரிய கதைகளும் பொய்யாகத் தாமே போய்விடும். சரித்திரம் மெய்யென்று நம்புகின்றவருக் கல்லாது மற்றவர்க்குக் கதையை ஆராய்வதற்கு உரிமை கிடையாதன்ருே ? கதையே கிடையாது; பொய்யெனக் கூறுவார் இவ்வாறெல்லாம் கூறித்திரிதல் இழுக்குடையதேயாகும். இல்லையானுல் இவைகளெல்லாம் வேறு எவ்வகையினுலாவது கிடைக்கப் பெற்றனவா ? கல்வெட்டுக்கள் மூலமாகக் கண்டுள்ளார்களா? ஓலைச்சுவடிகள் மூலமாக அறிந்தார்களா?இல்லையே. நாம் போற்றுகின்ற சரித்திரங்களி லிருந்துதானே கூறுகின்றனர். அப்பொழுது அது எவ்வாறு பொருந்தும் ? பொருந்தாதன்ருே ? மேலே, அச்சரித்திரங்களிலுள்ள இக்குறிப்புக்கள் உண்மையானவை யென்று கொண்டு குறைகூற அவர்கள் வந்தமையால்அச்சரித்திரங்கள் அனைத்தும் உண்மையென்பது நிச்சயிக்கப் பெறுகிறது. பெறவே, உண்மைச் சரித்திரத்தைப் பொய்யெனக் கூறிய அச் சுயமரியாதையினர் கூற்று செத்துவிட்டதாகும். இரண்டாவதாகவுள்ள அவர்கள் சமயகுரவர்கள் மேல் கூறுகின்ற குற்றங்கள் சரியானவை தாமா ? என்பதை ஆராய்வாம்.

மாணிக்கவாசகர் பாண்டியனின் பொருளையெல்லாம் திருடிக்கொண்டார். ஆம், அவர் என்செய்தார் அப்பொருளையெல்லாம்? ஆலயங்க ளமைத்தார்; அடியவர்கட் கன்னமளித்தார்; பிற நற்றருமங்கட்காக அப்பொருளைச் செலவிட்டார் என்றுதான் சரித்திரங் கூறுகின்றது. முதலாவது பொருளைக் குதிரைத்திரள் கொணர அரசன் அநுமதியின் பேரிலேயே எடுத்துப் போந்தார். ஆதலால் அங்கு அவர் பொருளைத் திருடவில்லை; திருப்பெருந்துறைக்குச் சென்ற பின்னர் அவர் திருட்டு எண்ணத்தால் பொருளை ஏதாவது தம்வசப்படுத்தினரோ என்று பார்ப்போமானால் அங்ஙனமுமில்லை. நல்லெண்ணத்தோடுதான் அப்பொருளில் ஒரு சிறிது கூடத் தமக்குப் பயன் படுத்திக்கொள்ளாது அனைத்தையும் பிறர் நலத்திற்கே செலவழித்தார். திருடுகின்ற எண்ண முடையவராக அவரிருப்பரேல், திருடிய பொருளை இவ்வாறு செய்திருப்பரோ? தமக்குச் சேமநிதியாகவன்றோ அதனைத் திரட்டிவைத்திருப்பர். அங்ஙனமாகச் சேமித்து வைத்துக் கொள்ளாதபடிப் பலர்க்கும் பயன் படுத்தப் பொருளை உதவியதிலிருந்தே திருட்டு எண்ணமுடையவரல்லரவர் என்பதை நாம் தெரிந்து கொள்ளலா மன்றோ? அன்றி அப்படிச் செய்தாலும் அப்பொருளுக்குரிய அரசனின் உத்தரவின்றிச் செய்தது திருட்டுத்தனமே யென்றால்; உண்மையே. மாணிக்கவாசகர் அரசனின் அரசியலை மட்டும் வாழ்விக்க அமைச்சரானவரன்று; அரசனையும் வாழ்விக்கவே அப்பெருந் தொழிலை மேற்கொண்டவர் என்பது சரித்திர முழுதும் படித்துணர்ந்தார்க்குத் தெரிந்ததாம். குதிரைத்திரள் கொணரச் சொல்லிய அரசனுடைய நோக்கம் குணமுடையதன்று; குற்றமுடையதே. வேற்றரசர்மேல் படையெடுத்துச் செல்லவேண்டிய காரணமே குதிரைத்திரள்

கொணர அவசியமாக விருந்திருக்கின்றது. இது கூடாது என்பது மணிவாசகனார் கருத்து. அதற்கென அவர் அவ்வழிப் பொருளைச் செலவழியாது நல்வழியில் அதனைச் செலவிட்டார். மற்றொன்று. மாணிக்கவாசகர்க்கு இறைவனே எழுந்தருளி ஞானோபதேசஞ் செய்தருளினான். அவ்விறைவனுடைய ஆணை, பொருளை நல்லாற்றில் செலவழிக்க வேண்டுமென்பது. உலகிலுள்ள செல்வம் யாருக்குச் சொந்தமானது? இது வேதாந்தமன்று. அநுபவத்திற் காணுவது. இன்று வறிஞனாகவிருக்கும் ஒருவன் நாளை பெருநிதியாளனாக மாறுகின்றான். இன்று பெருநிதியாளனாகவிருக்கும் ஒருவன் நாளை வீடுதோரிரக்கும் வெற்றனாகின்றான். பின்னர் எவ்வாறு செல்வம் ஒருவர்க்குரியது என்று சொல்வது.. ஆனால் இறைவனொருவனே அச்செல்வத்திற்குரியவன்; பாண்டியமன்னற்குப் பொருளீந்தவனுமவனே யன்றோ? அப்பெருமான் இப்பொருளை எது கருதி உன் அரசற்கு யாம் உதவினேமோ அதனை அவன் உணராது அவலநெறிகளிற் செலவிட்டு அவலனாகின்றான்; ஆதலால் அன்ப! நீ இவ்வாறுசெய்து அவற்கும் உனக்கும் நற்பேறு வருவித்துக்கொள்வாயாக என்று கூறினான். பாண்டியன் பொருள்தான். அவனுக்குப் பொருள் எப்படி வந்தது. ஆண்டவன் அருள்வழியன்றோ? பொருள் கொடுத்தவனெவனோ அவனே அப்பொருளை வேறுவழிகளிற் செலுத்தக் கூறுங்காலத்து இரண்டாமவனாகிய பாண்டியனின் அநுமதி எதற்கு? வேண்டுவதில்லையே யன்றோ? இப்பொழுதாவது அவர் திருடரல்லர் என்பதை எல்லோரும் தெரிந்துகொள்ளலாம். இவ்வளவு நாகரீக முதிர்ந்த இக்காலத்திலும் நிகழுகின்ற ஒரு செயலைக் கூறுவோம். சிறைசெல்லுதல் குறைவுடைமையே யன்றோ? அங்ஙனமாயின் ஏன் ஒத்துழையாமையின்

பொருட்டுச் சிறைசென்று வந்தார்க்குச் சிறப்பு நடக்கின்றது. கூர்ந்து நோக்குங்கள். அவர்கள் தேசநன்மைக்காகச் சிறை சென்று வந்தனர் என்றுதானே. இல்லை; இல்லை. எது கருதிச்சென்றாலும் சரி; சிறை சென்றாரல்லவா? அவர் இழிவுடையாரே; அவர் ஒரு திருடரே என்றெல்லாம் கூறுவாருளரோ? உளராயின் முதலாவதாக இரண்டு மூன்று முறை சிறைவாசஞ்சென்ற இராமசாமி நாயக்கரைத்தான் திருடரென்றோ குறைந்தவரென்றோ நாம் விலக்கித் தள்ளிவைத்தல் வேண்டும். "கொற்றவனோடு எதிர்மாற்றம் பேசவேண்டாம்" என்று சொல்லியிருக்கின்றபோது அதனைவிடுத்து அரசரோடு எதிர்த்து நின்று போராடுவார் அனைவரும் அயோக்கியர்களே என்று கூறுதல் முடியுமா? அரசனின் அநுமதி பெறாது ஒரு காரியத்தைச் செய்தல் குற்றமுடையது தானே? நண்பர் நாயக்கர் அரசனின் அநுமதியின்றி அவர் வெறுக்கத்தக்க செயல்களைப் புரிந்துள்ளார். இவர் என் அம்மாதிரிச் செய்தார். நாட்டின் நலன் கருதி அம்மாதிரிச் செய்தார். இந்த எட்டைத்தான் மாணிக்கவாசகரைப் பற்றிப் பார்க்கும்போதும் படித்துக்கொள்ள வேண்டும். அவரும் பிற நன்மக்களுடைய நன்மையின் பொருட்டே பாண்டியனின் பொருளை அவன் அநுமதியில்லாத ஒரு வகையில் செலவழித்தார். ஆதலால் அவர் குற்றமுடையவரல்லர். எச்சரித்திரம் அவர் அரசனின் அநுமதியில்லா ஒரு வகையில் அவனுடைய பொருளைச் செலவழித்தார் என்று கூறுகின்றதோ அச்சரித்திரம் முடிவில் அவ்வரசனால் மாணிக்கவாசகர் பெரிதும் மதிக்கப்பெற்றார் என்று கூறுகின்றதே. அதனை நாம் நோக்கவேண்டாமோ? இவர் செய்தது திருட்டானால் எப்படி அரசன் பின்னர் போற்றியிருப்பான். நன்மையைச் செய்தார் என்பதை அவன்

பின்னர் உணர்ந்ததனாற்றான் அடிகளைப் போற்றியிருக்கின்றான் என்பதை நம்மால் மறுக்கமுடியுமா? முடியாது. ஆதலால், சுயமரியாதையினர் கூறுவதுபோல மாணிக்கவாசகர் திருடரல்ல; திருவருள் மிக்காரே என்பது இதனால் துணிபாகிறதன்றோ? இனி, அவர் குருந்தை மரத்தின்கீழ் குரு உபதேசம் பெற்றது முதலான அற்புதங்கள் உண்மையுடையன வல்லவென மறுக்கும் அவர்கள் கூற்றைப் பற்றி ஆராய்வோம். மாணிக்கவாசகர் சரித்திரத்தைக் கூறுகின்ற புராணங்கள் மூன்று. அவை, திருவாதவூரர் புராணம், திருவிளையாடற் புராணம், திருவாலவாயுடையார் புராண மென்பன. அவைகளெல்லாம் ஒரு முகமாக இவ்வற்புதங்கள் நிகழ்ந்தனவே என்றுதான் கூறுகின்றன. அவைகளும் ஏதாமொரு பயன்கருதித் தவறாகப் பொய் நிகழ்ச்சிகளைக் கூறியிருக்கும் என்று தள்ளிவிட்டாலும், தமிழகத்தவரால், சைவ உலகத்தவரால் பெரியாரெனக் கொண்டாடப்பெறும் பின்வந்த திருவருட் செல்வர்களும் இவ்வற்புதங்கள் உண்மையாக நிகழ்ந்தவை யென்றுதான் கூறுகின்றனர். அவர்கள் கூற்றையும் மறுத்துவிடலாம். போகட்டும். அவைகளைப்பற்றிக் கவலையில்லை. அற்புதங்களை நிகழ்த்தியவர் எவரோ அவரே தாம்பாடிய திருப்பாசுரங்களிலே இவ்வற்புதங்களை யெல்லாம் எடுத்தோதுகின்றனரே; அவ்வகச்சான்றுகளை நாம் மறுக்கலாமா? மறுக்கக்கூடாதன்றே. அவைகள் என்ன கூறுகின்றன வென்பதைப் பார்ப்போம். திருவாசகத்திலுள்ள சிவபுராணத் திருவகவலில்,

"நிலந்தன் மேல்வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவானதத் துவனே"

என்று, இறைவன் நிலமிசைவந்து நாயினுங் கடையாக

விருந்த தமக்குத் தாயிற் சிறந்த தயவுடையவனாக அருள் புரிந்தானெனக் கூறுகின்றார். இது சாதாரணமாகக் கூறுகின்ற ஒன்றேயன்றித் திருப்பெருந்துறையில் இறைவன் வந்து ஆண்டான் என்பதற்குச் சான்றாக மாட்டாது என்னின்,

"........பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட"

எனவும்,

"அரியானே யாவர்க்கு மம்பரவா வம்பலத்தெம்
பெரியானே சிறியேனை யாட்கொண்ட பெய்கழற் கீழ்"

எனவும்,

"........ஊனெலா நின்றுருகப் புகுந்தாண்டா னின்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே"

எனவும்,

"........பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர் நிற்க வென்னை யாண்டாய்"

எனவும்,

"........வண்ணந்தா னதுகாட்டி வடிவுகாட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற் றேனை"

எனவும்,

"........யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குக் குடியல்லோம் யாது மஞ்சோம்"

எனவும்,

"........தொண்ட னேற்குற்ற வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலே னென்னகண் மாயமே"

எனவும்,

"மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை யாட்கொண்ட கூத்தனே'

எனவும்,

"......எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வகை மனத்தேன் பட்ட கட்டமே."

எனவும்,

"......நீச னேனை யாண்டாய்க்கு
நினைக்க மாட்டேன் கண்டாயே."

எனவும்,

"காணு மாறு காணே னுன்னை
யந்நாட் கண்டேனும்......"

எனவும்,

"......தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி யெண்ணரிய வின்னருளால்
ஒளிவந்தென் னுள்ளத்தி னுள்ளே யொளிதிகழ
அளிவந்த வந்தணனைப் பாடுதுங்கா ணம்மானாய்."

எனவும்,

"செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
யந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்."

எனவும்,

"......யாரொடு நோகே னார்க்கெடுத் துரைக்கே
னாண்டநீ யருளிலை யானால்."

எனவும், பிறவாற்றானும் அடிகள் திருப்பெருந்துறையில் இறைவன் அந்தணனாக வந்து தம்மை ஆண்டுகொண்டதை வியந்து பல்லாற்றானும் துதிக்கின்ற பொழுது, மாணிக்க வாசகனார்க்கு ஆண்டவன் அருளுபதேசஞ் செய்து ஆண்டான் என்பது வயிற்றுப்பிழைப் பாளரின் புனைந்துரை யெனச் சுயமரியாதையினர் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? இனி, அங்ஙனமாக வந்து தம்மை ஆண்ட இறைவன் மறைந்ததுகண்டு தாம் வருந்திநின்ற காலத்து அவ்விறை

வன் அசரீரி மூலமாக, 'அன்ப! நீ தில்லைக்குப் போதுவா யாக' என்று கூறி மறைந்ததை அடிகள்,

"அந்தணனாகி யாண்டுகொண் டருளி
யிந்திர ஞாலங் காட்டிய வியல்பும்"

எனவும், அவ்வண்ணம் மறைந்தபின் தம்மைத் தில்லைக்கு வரப் பணித்ததை

"நாயினேனை நலமலி தில்லையுட்
கோலமார்தரு பொதுவினில் வருகென."

எனவும்,

"கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய்க் கோத்தும்பீ."

எனவும், கூறுவனவாற் றெளியலாம்.

பின்னர் இறைவன், குதிரைத்திரளைக் கொணர்ந்து தம்மை ஆட்கொண்டதை அடிகள்,

"குதிரையைக் கொண்டு குடநாட தன் மிசைச்
சதுர்ப்படச் சாத்தாய் தானெழுந் தருளியும்."

எனவும்,

"மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்."

எனவும்,

"அரியொடு பிரமற் களவறி யாதவன்
பரிமாவின் மிசைப் பயின்ற வண்ணமும்"

எனவும்,

"பந்தம் பறியப் பரிமேற் கொண்டான் றந்த
அந்தமிலா வானந்தம் பாடுதுங் காணம்மானாய்."

எனவும்,

'பெற்றி பிறர்க் கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்''
எனவும், பிறவாற்ருனும் கூறியிருத்தலையுணர்க.

இறைவன் கொணர்ந்த பரித்திரள் நரித்திரளே யென்பதை,

"அரியொடு பிரமற் களவரி யொண்ணுன்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்.''
எனக் கூறியிருத்தல் காண்க.

பரிகளெல்லாம் நரிகளாய்ப் போனது கண்டு சினமடைந்த அரசன் அடிகளைத் துன்புறுத்த, அது பொருத இறைவன் வைகையாற்றில் பெருவெள்ளம் வருமாறு திருவருள் புரிந்தனன். அவ்வெள்ள மிகுதியினை அடைக்கும்படி நகரினரை ஏவினன் அரசன். அதுபொழுது ஆண்டவனிடத்து மூண்ட அன்புடையளாய வந்தி என்னும் ஒரு முதியாள் தனக்களந்து கொடுத்த கரையை யடைத்தற்கு ஆள்கிடையாம லரற்ற, அவள் துயரத்தையும், அடிகளார்துயரத்தையும் நீக்குவான் வேண்டி இறைவன் மண் சுமக்கும் மள்ளனக வந்து திருவிளையாடல் புரிந்து கொண்டிருப்பதைக் கேள்வியுற்ற அரசன் நேரே கரை யடைப்புத் தலத்திற்கு வந்து, திருவருள் விளையாட்டயரும் இறைவனைப் பிரம்பு கொண்டடித்தான். அதனல் பெருமாற்குப் புண்ணுண்டாயது என்பதனை,

"ஆங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்''
எனவும்,

"மண்சுமந்து கூலிகோண் டக்கோவான் மோத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானய்''
எனவும் அடிகள் மிக அழகாக எடுத்துக் கூறுகின்றர்கள்.

இவ்வளவில் மாணிக்கவாசகரைப் பற்றிக் கூறிய சுயமரியாதையினர் கூற்றுப் பெரிதும் பிழை படுதலைத் தெளிக. மாணிக்கவாசகரென ஒருவ ரிருந்தாரென்பதும், அப்பெருமாற்கு ஆண்டவன்தானே எழுந்தருளியாண்டு அருளீந்தான் என்பதும், அடிகளுக்காக இறைவன் குதிரைத்திரள் கொணர்ந்தது முதலாகவுள்ள நிகழ்ச்சிகளெல்லாம் உண்மையானவை யென்பதும் உறுதியாகின்றன. இன்னும், மணிவாசகப் பெருமானைப்பற்றியும், அவரது வரலாற்றுண்மைகளைப் பற்றியும், அப்பெருமானாரின் காலத்தைப்பற்றியும் தமிழ்நாடுசெய்த தவ நிறைவாற்றேன்றிய பெருமானாராகிய பல்லாவரம் பொது நிலைக் கழக குரு ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலமென்னும் மறைத் திருவாளர் மறைமலை அடிகளால் விரிவாக எழுதியுள்ள 'மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்' என்னும் மெய்ப் பெரும் நூலினுள் கல்வெட்டுச் சான்றுகளாலும் பிற மெய்ச் சான்றுகளாலும் நிலைநாட்டப் பெறுகின்றன. பெறவே, மாணிக்கவாசகர் சரித்திரம் உண்மைச் சரித்திரமே யென்பதும், அப்பெருமானர் திருடரல்ல; திருவருள் மிக்கவரே என்பதும் உறுதியாக்கப் பெறுகின்றன. இனி,

> "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க
> பூதபரம் பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத"

திருஞானசம்பந்தப் பெருமானாரைப் பற்றி ஆராயத் தொடங்குவாம்.

ஞானசம்பந்தர்மேல் சுயமரியாதையினர் ஏற்றும் குற்றங்கள் இரண்டு. ஒன்று அவர் வேதத்தையும், வேள்வியையும் சிறப்பித்துக் கூறினர் என்பது; மற்றொன்று, தங்கள் முன்னோர்களாகிய சமண் சமயத்தினரைக் கழுவேற்றி

ஞர் என்பது ஆகும். திருஞானசம்பந்தர் வேதத்தைச் சிறப்பித்துச் சொல்லியிருக்கின்றார் என்பதால்,வந்த இழுக் கென்னை? எந்தகுடி கெட்டுப்போயது? ஒன்றுமிலேயே! இருப்பினும் இருக்கட்டும். வேதங்களைச் சொல்லினார் ஞானசம்பந்தர். எந்த வேதத்தை? இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கையும் தான். ஆம். அவை களைத்தான். பின்னர் அவ்வேதங்களில் நிறையக் குடிகாரர் பாட்டுக்கள்போல பலபாட்டுகள் நிறைந்திருக்கின்றனவே. ஆம். நிறைந்திருக்கின்றன. மேலே, உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும், கட்குடியும் அவைகளில் காணுகின்றோமே. ஆம். காணுகின்றோம். பின்னர் எவ்வாறு அவ்வேதங்களை வியந்து கூறினார். அதனால் அவர் ஒழுங்கானவரல்ல. உண்மைதான். திருஞானசம்பந்தர் வேதங்களைச் சொல்லி யுள்ளார் சிறப்பாக வென்றால் வேதங்களைத் தாமே சொல்லியுள்ளார். அவ்வேதங்களெவை? என்பதை முதற் கண் தெரிந்துகொண்டு அவர்மேல் குற்றங்கூறலே பொருத்தமுடையதாகும். வேதமென்றால், பிராமணர் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும், நான்குந் தாம் என்கின்றனர். அவர் சொல்லிப்பயனென்? திரு ஞான சம்பந்தர் சொல்லிய வேதங்கள் இவைகள் தாமென்பதை நிலைநாட்ட ஆதாரங்களெதுவு முண்டோ? உண்டானகாலத்துத் திருஞான சம்பந்தரைக் குறை கூற லாம். அதுவரை வாளா விருப்போம். இல்லை; இவ் வேதங்களைத் தான் சொல்லி யிருப்பரென்றல்எது கருதி? பார்ப்பார் நலன் கருதி. அப்படியானல், அவர் ஏன் சுமார்த்த சமயத்தை நாட்டிடைப் பரப்பாது சைவ சமயத்தைப் பரப்பினார்? சைவ சமயத்தை அவர் பரப் பியதி லிருந்தே சுமார்த்த சமயத்திற்கு அப்பாற்பட்டவ ரென்பது நன்கு புலனுகின்றது. பின்னர் எவ்வாறு திரு

ஞான சம்பந்தர் சுமார்த்த சமயத்தினர் வேதங்களெனக் கொண்டுள்ளவைகளை வேதங்களெனச் சிறப்பித்துக் கூறியிருப்பர். நிற்க, கதையொன்று கூறுவோம். திருவாரூர்க்குச்சென்று கமலாலயத்தில் குளித்துக் கடவுளை வணங்கி வந்த ஒருவன், தன் மகனை நோக்கி, 'அப்பா! நீ திருவாரூர்க்குச் செல்லுவாயானால் அங்குள்ள கமலாலயம் என்னும் பளிங்குபோல நீர் நிறைந்த திருக்குளத்தில் முழுகுவாயாக' என்று கூறினான். நெடுநாட்களுக்குப் பிறகு மகன் திருவாரூர்க்குச்சென்றவன் அக்கமலாலயத்திற்குத் தந்தையின் கட்டளைப்படிக் குளிக்கச் சென்றான். அக்குளம் அப்பொழுது பாதுகாப்பின்மையால் பாசம் படர்ந்தும், புழுக்கள் நெளிந்தும் சாக்கடை நீர்போல நீரையுடையதா யிருந்தது. கண்டான் மகன். என்னே! தந்தையின் அறிவுப்போக்கு? இக்குளத்தில் குளிக்கச் சொன்னானே மடையன்; அம்மடையன் பேச்சைக்கேட்டு நானொருமடையன் குளித்தற்குப் புறப்பட்டேனே. நன்றாயிருக்கின்றது மாதிரி. என்று தன் தந்தையைப் பலவாறாக இழித்துக் கூறினானாம். இக்கதை யாருக்குச் சொந்தம்? சுயமரியாதையினருக்கே யன்றோ? அறிஞர்களே! அன்று திருஞானசம்பந்தர் வேதங்களைச் சிறப்பித்துச்சொன்னார். எவ்வேதங்களையோ அதையும் நாம் அறியோம். இல்லை; இவ்வேதங்களைக் கூறினாரென்று வைத்துக் கொள்வோம். அவர் கூறிய காலத்தில் எந்நிலையனவாக இருந்தனவோ அது நமக்குத் தெரியுமா? அன்று வேதங்கள் இந்நிலையனவாகத்தான் இருந்தனவென்பது நமக்குத் தெரியவருமானால் அப்பொழுது ஞானசம்பந்தரை நாம் தூற்றுவது சரியாகும். அங்ஙனமின்றி இன்றுள்ள வேதங்களை வைத்துக்கொண்டு அவைகளிலுள்ள குற்றங்கட்காக அப்பெருமானாரைக் குறைகூறல் அடாது; அடாது.

"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி அமணொடு தேரரை"

என்று வேதவேள்வியினை நிந்திக்கின்றவரைக் குறை கூறியும்,

"பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய."

என அவ்வேள்வியினைச் செய்கின்றாரைச் சிறப்பித்துங் கூறியுள்ளாரே. ஆம். கூறியுள்ளார். இவ்விருபாடல்களிலும் அவர் என்ன கூறுகின்றார்? சமணர் வேதவேள்வியை நிந்தனை செய்கின்றவர்; அந்தணர் வேத வேள்வியைச் செய்பவர் என்றுந்தான் கூறுகின்றார். இதிலென்ன பிழை? அவரவருடைய கொள்கையை விளக்குகின்றார். அது குற்றமா? அது குற்றமில்லை. சமணர் குறைவுடையாரென்றும், அந்தணர் சிறப்புடையார் என்றும் கூறுகின்றாரே. அது கொண்டு அவர்க்கு வேதவேள்வி உடன்பாடென்பது பெறப்படுகின்றதே; அதிற்றான்குறையிருக்கின்றது. 'பசுவேட்டெரியோம்பும்' என்பதில் உயிர்க்கொலை வேள்வியைத்தானே சொல்லப்பட்டிருக்கின்றது; உயிர்க் கொலை செய்தல் கொடுமையினும் கொடுமையே யன்றோ? உயிர்க்கொலை வேள்வி இவ்வேதங்களிற்றானே கூறப்பட்டுள்ளது. ஆதலால், அவர் இவ்வேதங்களைத் தான் கூறியிருப்பார் என்றால், இங்கே ஒன்றைக் கூர்ந்து கவனித்தல்வேண்டும். உலகிலுள்ள எல்லாமக்களும் ஒரு உயிரைக் கொல்லுதல் மறச்செயலே யென்பதை ஒப்புக்கொள்வர். சைவராயினும் சரியே; வைணவராயினும் சரியே; கிறித்தவராயினும் சரியே; துருக்கராயினும் சரியே; மற்றுமுள்ள சமயத்தவராயினும் சரியே; அவர்கள் கொலை செய்யினும் புலையுண்ணினும் ஒரு உயிரைக்கொன்று உண்

ணுதல் தருமமென்று கூறுவரோ? ஒருக்காலும் கூறார் என்பது திண்ணம். மகம்மதியரும் அவர் போல்வாரும் அது குற்றமுடையதன்று என்று கூறுகின்றனரே யென்னின், அது அவர்கள் தங்கள் சமயத்தின் உண்மையோராது சொல்வதேயாகும். அவர்கள் சமயத்தினை வளர்க்கவந்த பெரியார் என் சொன்னார்கள். 'எல்லா உயிர்களையும் உங்களுக்காகத்தான் ஆண்டவன் படைத்துள்ளான்' என்று கூறினார்கள். இதற்குப் பொருளென்ன? உங்களுடைய நன்மைக்கு உதவி செய்யவே மக்களினமல்லாத மற்றையவற்றை இறைவன் படைத்திருக்கின்றான் என்பதே. உதவிக்காகப் படைத்திருக்கின்றான் என்றால் உயிரைக்கொன்று தின்னவேண்டு மென்பதுதானோ? அங்ஙனமாயின் மனைவிமக்களையும் நமக்காகத்தான் ஆண்டவன் படைத்துள்ளான் என்றால் அவர்களை நாம் என்ன செய்வது? ஒன்றுஞ் செய்யமனம்வராதன்றோ? ஆகலான் அவர்தம் கூற்று அறியாமையின்பாற் பட்டதாகும். இவ்வாறாக எல்லா மக்களும் உயிர்க்கொலையும், புலைப் புசிப்பும் கூடாதனவென்று கூறுகின்ற பொழுது திருஞானசம்பந்தர் அவை நல்லன என்று கூறுவரா? என்பதைத்தான் நாம் நன்கு கவனித்தல் வேண்டும்.

திருஞானசம்பந்தரை இது கொண்டு கருணையற்றவர் எனக் கூறமுடியுமா? என்று பார்ப்போம். அவர் பெருங் கருணையுடையவர் என்பதை அவர் சரித்திரத்தால் நாம் அறியலாம். எலும்பினைப் பெண்ணாக்கியது கருணைகொண்டேயன்றோ? திருமருகல் என்னும் திருத்தலத்தில் ஒரு பெண்ணிற்காக இறந்து பட்ட அவள் கணவனை மீண்டும் திருவருள் கொடு உயிர்ப்பித்துத் தந்தது கருணையினாலன்றோ? ஆதலினால் அவரைக் கருணையிலாதார் என்று கூறுதல் முடியாது. இல்லை அவர் கொலைசெய்தலையும், புலாலை

யுண்ணலையும் கொண்டிருந்தாரெனக் கூறமுடியுமா? முடியாதே. பின்னர் எவ்வாறு திருஞானசம்பந்தர் 'பசுவேட்டெரி' என்று கூறியுள்ளதற்கு உயிர்க்கொலை வேள்வி என்றும் பொருள் கொள்ளமுடியும். முடியாதன்றோ. அதற்கு வேறு பொருள்தான் இருக்கமுடியும். அப்பொருளென்னை? பசுவாகிய மக்களின் ஆணவமலத்தைப்போக்கி வேள்வியினைச் செய்யும் சிறப்பினையுடையோர் தில்லையிலுள்ள அந்தணர் என்றுதான் பொருள்கோடல் வேண்டும். இப்பொருள் பொருந்தாதெனக் கூறுவோர் ஒன்று செய்தல் வேண்டும். திருஞான சம்பந்தரை உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும் உடையாரென்றோ? அல்லது அக்கொள்கைக்கு உடன்பட்டாரென்றோ முதற்கண் நிரூபிக்க வேண்டும். இவ்வொரு பாடல்கொண்டு அதனை அவர்கள் நிரூபிக்க முந்துதல் ஒழுங்கன்று: அதற்குத்தான் வேறு பொருள் எனக் கூறுகின்றோமே? ஆதலால், வேறுபாடல்களைக்கொண்டே அவர்கள் நிரூபித்தல் வேண்டும். நிரூபித்தகாலத்து ஞானசம்பந்தரைத் தள்ளிவிடுவோம். அதுவரை ஞானசம்பந்தரைக் குறைகூறுகின்ற நாவைத் துணித்தல் நல்லோர்கடனும்.

இனி உயிர்ப்பலி வேள்வியை ஞானசம்பந்தர் கூறினாரில்லையென்பதை ஒரு சான்று கொண்டு முடிவுகட்டலாம். திருமுதுகுன்றத்துத் திருப்பாடலில் அப்பெருமானார் தம்மைக் கூறுகின்றகாலத்து,

"தழங்கெரி மூன்றோம்பு தொழிற் றமிழ்ஞான சம்பந்தர்."

என்று கூறுகின்றார். இதிலிருந்து என்ன புலனாகின்றது. சம்பந்தர் முத்தீவேள்வியுடையார் என்பதன்றோ? முத்தீ வேள்வி உயிர்ப்பலி இல்லாத வேள்வியன்றோ? புனிதமாகத் தமிழ் மக்கள் மேற்கொண் டிருந்ததேயன்றோ? ஆகவே,

அவர் 'பசுவேட்டெரி' என்று உயிர்ப்பலி வேள்வியினைச் சொல்லியிருக்கமாட்டார் என்பது துணிவாகிறதன்றோ? இன்னும், திருவீழி மிழலைத் திருப் பாடலில்

"படித்தார் மறை வேள்வி பயின்றார்
பாவத்தை விடுத்தார்......"

என்று வேள்வியைச் செய்து பாவத்தைப் போக்கினர் என்று கூறியுள்ளார். உயிர்க்கொலை வேள்வியினைச் செய்தால் பாவமன்றோ வந்தெய்தும். அங்ஙனமின்றிச் சம்பந்தர் பாவம் தொலைந்து விட்டது என்று சொல்லுவதிலிருந்தே அவர் கூறிய வேள்வி உயிர்ப்பலியிலலாத உறுதியைப் பயக்கத்தக்க முத்தீ வேள்வியே யென்பதும் பெறப்படும்.

"அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று."

இத்திருக்குறளுக்கு ஆசிரியர் பரிமேலழகர் "தீயின் கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும், ஒரு விலங்கினுயிரைப் போக்கி அதுநின்ற ஊனையுண்ணாமை நன்று'' என்று உரைவரைகின்றார். இதனானும் தமிழர் வேள்வி உயிர்ப்பலி வேள்வியன்றென்பதும், அவர் செய்த வேள்வி நெய் முதலிய அவிகளைச் சொரிந்து செய்கின்றதே யென்பதும் பெறப்படுகின்றன வன்றோ? பெறவே, ஞானசம்பந்தர் உயிர்ப்பலியில்லாத இம்மாதிரியான வேள்வியினைத்தான் சிறப்பித்துக் கூறியிருப்பாரெனக் கூறலே பொருத்தமுடைய தெனக் கொள்க. எனவே, திருஞானசம்பந்தர் இப்பொழுதுள்ள வேதங்களைத் தான் சிறப்பித்துக் கூறியுள்ளார் என்று கொண்டு அவர்மீது பழிசுமத்தல் தவறு என்பது துணிவாகின்றது. அங்ஙனமே, அவர்சொன்ன 'வேள்வி'

4493 (77507)


என்பது தமிழர் நடத்திப் பேறுபெற்ற முத்தீவேள்வியே என்பதும், உயிர்க்கொலை வேள்வியல்லவென்பதும் துணியாகின்றது. இனி, சுயமரியாதையினர்க்கு முன்னோராகிய சமண் சமயத்தவரைக் கழுவேற்றியதைப்பற்றி ஆராய்வாம். மதுரையம்பதி எக்காலத்தும் சைவத் திருநாடாகப் பொலிந்தது என்பது நம் பழைய சரித்திரங்களாற் றேரப்படும். அத்தலத்தில் மீனாட்சி சுந்தரன் திருக்கோயில் கொண்டெழுந்தருளி வருவதும் பிறவங்கங்களும் கொண்டு அதைச் சைவப்பதியென நிலைநாட்டலாம். அத்திருப்பதிக்கரசராக ஆட்சி செலுத்துவோர் பாண்டியரென்போராவர். அம்மன்னர்களும் மேற்கொண்டிருந்தது சைவ சமயமே. எக்காலத்தும் அவர்கள் சைவசமயத்தை விடுத்துப் பிறிதொரு சமயம்புகுந்ததாகச் சரித்திரங்களேதுவுமில்லை. அத்தகைய மாண்புமிக்க மன்னருள் ஒருவராகிய கூன்பாண்டிய மன்னரைச் சமணர்கள் இடையில் சூழ்ச்சியினால் தங்கள் மதத்தில் சேரும்படிச்செய்துகொண்டனர். அரசன் சமண் மதத்தவனாக ஆயினன். ஆதலால் அந்நாட்டு மக்களும் அவ்வழிச் சென்றார்கள். சைவசமயம் குன்றியது; சமணமதம் பெருகியது. மீனாட்சிசுந்தரப் பெருமானின் திருக்கோயில் மூடப்பெற்றது. அருகு போய் எவரேனும் சைவப்பற்றுடையார் ஆண்டவனை வணங்குவரேல் அவர்க்குத் தண்டனை; இம்மாதிரி அரசனையும், பிறரையும் சைவசமயத்தினின்றும் நீக்கிச் சமண மதத்தில் சேர்த்து விட்டனர் சுயமரியாதையினரின் முன்னோர். சுயமரியாதை அன்பர்களே! ஒன்று உங்களைக் கேட்கின்றோம். சமணரைக் கழுவேற்றினரே சம்பந்தர்; அங்ஙனம் செய்தற்கு அவர்கள் என்னகுற்றஞ் செய்தனர்; என்னகுற்றஞ் செய்தனர் என்று கரைந்து வழிகின்றீரே. இவைகளெல்லாம் குற்றங்களென்று உங்கள் பகுத்தறிவுக்

கெட்டவில்லையோ? சைவ சமயத்திருந்தாரைச் சமண சமயத்திற் சேர்த்தது குற்றமல்லவோ? யாராவது அதற்கிணங்காவிடின் அவர்க்கு அரசனைக்கொண்டு தண்டிக்கச் செய்வது குற்றமல்லவோ? ஆலவாய்ப் பெருமான் திருக்கோயிலை விளக்குகூட ஏற்றாதபடி முற்றுகையிட்டது குற்றமல்லவோ? உங்கள் பகுத்தறிவு உறங்குகின்றதா என்ன? அதனைத்தட்டி எழுப்புமின்! எழுப்பி அதனைக் கேண்மின்!! கேட்டு விடை பகருமின்!!! இவைமட்டுமோ சமணர் சைவர்க்கிழைத்த இன்னல்கள். இன்னும் பாருங்கள். இவ்வாறு சைவசமயத்திலிருந்து சமணமதம் புகுந்த கூன்பாண்டிய மன்னரின் மனைவியாராகிய மங்கையர்க்கரசி யம்மையாரும், மந்திரியாராகிய குலச்சிறையாரும் சைவப்பற்று மிக்குடையாராதலால் மீண்டும் சைவசமயத்தைப் பரப்புதல்வேண்டும் என்று ஆண்டவனை வேண்டிக் கொண்டிருப்பார் காழிப்பதியில் கவுணியன் பிறந்துளான் என்ற சிறப்புச் செய்தியைக்கேட்ட அளவில், ஞானசம்பந்தனார் அதுபொழுது இறைவனை வணங்கச் சென்றிருந்த திருமறைக்காடு என்னும் வேதாரண்யத்திற்கு ஓலை எழுதியனுப்பி அழைக்க, அவ்வழைப்புக்கிணங்கத் திருஞானசம்பந்தப் பெருந்தகை மதுரையம்பதிக்கு எழுந்தருளி வந்து ஒரு திருமடத்தில் பதினாறாயிரவர் அடியார்களோடு தங்கியிருந்தார். அங்ஙனமாக அவர்கள் தங்கியிருந்த திருமடத்தில் நள்ளிருளில் தீவைத்தனர் சமணர். என்னே கொடுமை! என்னே கொடுமை!! இக்கொடுமையினைச் செய்த சமணரைக் கழுவேற்றியது போதுமோ? போதாதன்றோ? தீ பற்றியிருக்குமாயின் என்னாகும்? பதினாறாயிரவர் அடியார்களும் இறந்துபடுவரன்றோ? இது சீலமுடைய ஜீவகாருண்யச் செயல்தானே. செப்புமின்! சுயமரியாதையினரே செப்புமின்!! கிணற்றுத் தவளைகளாக

விருந்துகொண்டு குப்பையைக் கிளறிக்கொண்டிராதீர். உடனே ஞானசம்பந்தர் அவர்களைக் கழுவேற்றி விட்டாரோ? இல்லையே. அத்தீ, மடத்தில் பிடியாதவண்ணம் செய்வித்து அதனைக் காரணமாகநின்ற அரசன்பாலதாகச் செல்லுக என்றுபணித்தார். அதுவும் விரைவினில்சென்று பற்றி அவனை ஒழித்துவிடு என்று ஏவினரா? 'பையவே சென்று பாண்டியற்காகவே' என்றுதான் பணித்தார். ஞானசம்பந்தரின் கருணையைவிளக்க இதுஒன்றே போதுமானதன்றோ? இதனை, ஆசிரியர் சேக்கிழார் மிக்க அழகாகக் கூறுகின்றார்.

> "பாண்டிமா தேவியார் தமது பொற்பிற் பயிலுநெடு மங்கலநாண் பாது காத்து, மாண்டகையார் குலச் சிறையார் அன்பினுலு மரசன்பா லபருத முறுதலானும், மீண்டுசிவ நெறியடையும் விதியினுனும் வெண்ணீறு வெப்பகலப் புகலிவேந்தர், தீண்டியிடப் பேறுடையா னுகலானும் தீப்பிணியைப் பையவே செல்க வென்ருர்."

என்பதே. சென்றது தீ. பற்றியது பாண்டியனின் உடலை. துடிதுடித்தான் அரசன். பக்கலிலிருந்த சமணராம் சுயமரியாதையினரின் முன்னோர் மணி மந்திரங்களா லெல்லாம் அவ்வெப்பு நோயைத் தீர்க்க முயன்றனர். ஒன்றும் பலிக்காது போயிற்று. பார்த்துக்கொண்டிருந்தனர் மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும். காழிவேந்தரை அழைத்து வந்து பிணியினைத் தீர்த்தற்கு அரசனிடத்து அனுமதிகேட்டுக் கொண்டு அழைத்து வந்து அரசனுக் கருகில் பீடத்திலமர்த்தினர். சமணர்கள் அப்பொழுதும் எரிவு கொண்டு நாங்கள் ஒரு பாதியினைத் தீர்க்கின்றோம். மற்றொரு பாதியினை அவர் தீர்க்கட்டும் என்றனர். அங்ஙனமே ஒருபாதியைத் திருஞானசம்பந்தர் 'மந்திரமாவது

நீறு' என்னும் திருவருட்பாவினை யோதித் தீர்த்தருளினர். தீர்ந்த அந்நோய் மற்றொருபக்கத்தில் போய்ச் சேர்ந்து கொண்டது. பார்த்தான் அரசன். சமணர்கள் பயனற்ற வர்கள் என்பதைத் தெரிந்தவனாகி அவர்களை விலகிச் செல்லச் சினந்து கூறினான். விலகினர். உடனே பிள்ளையார் அப்புறத்திலும் தீர்த்தருளினர். இதுவரை ஞானசம்பந்தர் மேல் ஏதாவது குற்ற மிருக்கின்றதா வென்பதையும், இனி யாவது குற்ற மிருக்கிறதா வென்பதையும் அன்பர் நோக்குதல் வேண்டும். இந்நிலையில் சமணர்கள் வாளாவிருக்கலா மன்றோ? இருந்தாரில்லை. ஞானசம்பந்தரை வாதுக் கழைத்தனர். அழைத்ததற்கு இசைந்தார். முதலில் ஒரு வாதம் நடந்தது. அதிலும் வெற்றி பெற்றார் திருஞானசம்பந்தர்; இரண்டாவதாக ஒரு வாதத்திற்கும் சமணர்கள் அழைத்தனர்; அதற்கும் உடன்பட்டார். அரசனோ நீள வாதஞ் செய்துகொண்டே போனால் முடிவு எப்பொழுது? அது எப்படி என்றான். அக்கேள்விகட்குச் சமணர்களே, இவ் வாதந்தான் முடிவு. இதிற் றோற்றவர்கள் கழுவேறவேண்டியவர்களே என்று கூறினர். (அங்ஙனம் கூறிய ஒரு பெருமானாரே இது பொழுது இராமசாமி நாயக்கராக வந்து பிறந்துள்ளார் என்பது முற்கால நிகழ்ச்சியைக் கூறுகின்ற சோதிடக்கூற்று). வாதம் நடந்தது. தோற்றனர் சுயமரியாதையினரின் சொந்தக்காரர். வெற்றி பெற்றனர் எங்கள் பெருந்தகை. அரசன் சும்மாவிடுவனோ? தோற்றவர்கள் கழுவிலேறவேண்டும் என்றனன். நாங்களே ஏறுகின்றோம்; நீங்கள் சொல்ல வேண்டியதில்லை யெனக் கழுவிற் போய் ஏறினர் சமணர்கள். அதற்குயார் என்ன செய்வது? வாய்க்கொழுப்பினால் வந்தது கேடு. யார் இவர்களை வாதத்திற் கழைத்தது? வாதத்திற்கு வரினும், அதிற் றோற்றால் கழுவேறுகிறது என்று வஞ்சினமுரைக்கச்

சொன்னவர் யாவர்? வாதத்திற்கு வருவது; தோற்பது; கழுவில் தாங்களே ஏறுவது. இதற்குப் பிணைபோவார் சைவர்களா? சைவர்கள் தலைவனாகிய ஞானசம்பந்தனுமா? வெகுநன்று. இன்னொரு விஷயம். இப்பொழுது சுயமரியாதையினருள் பட்டத்திற்கெனவும் பிறவற்றிற்கெனவும் போலியாகவேடங்கொண்டு திரிவாரிருக்கின்றனரே, இவர் போல அந்நாளிலும் அச்சமணருள் சிலரிருந்தனர். அவரனைவரும் உயிர் விடச் சம்மதியாது ஞானசம்பந்தர் பக்கலில் வந்து திரு நீற்றைப் பூசிக்கொண்டு சைவராயினர். அவர்களைப் பிடித்துத் தள்ளினரோ எங்கள் பெருமானார். இல்லையே யன்றோ? சமணரைக் கொன்றாரா? இல்லையே, சைவரைத்தான் கழுவேற்றினர் ஞானசம்பந்தர். எப்படியெனின், அப்பொழுது கழு வேறினவர்களனைவரும்முன்னர்ச்சைவராயிருந்தவரேயன்றோ? சைவராயிருந்து தானே சமணராயினர். அப்பொழுது சைவரைத்தான் கழுவேற்றினர் சம்பந்தர். ஏன் ஏற்றினரென்றால், இப்பொழுது நாத்திகத்தை உலகிடைப் பரப்பி வருகின்ற சுயமரியாதைப் பேய்பிடித்தவர்களைப் போல் அவர்களும் ஒரு பேயினால் பீடிக்கப் பெற்றிருந்தனர். அப்பேய் உடலோடு தான் நீங்குமென்பதை அறிந்த பெருமானார் அவர்களைச் சுவர்க்கமடையும்படிச் செய்தார்.

இவ்வரலாற்றானும் குற்றம் ஞானசம்பந்தரிடத்து இல்லை; அவர் ஒன்றும் சமணரைக் கழுவேற்றி விடவில்லை; கழுவேற்றியதற்குக் காரணராகவுமிருக்கவில்லை. அரசனே கழுவேற்றினான்; அதற்குக் காரணர்களாக நின்றவர் சமணரே யென்பதும் விளங்குகின்றன வன்றோ? பின் எங்ஙனம் ஞானசம்பந்தரைக் கொலைபாதகனெனக் கூறுதல் முடியும். முடியாது; முடியாது. கொலைபாதகர் சமணரே; அவர் வழி போற்றுவோரே. சுயமரியாதையினர்

திருஞானசம்பந்தர் பேரில் கூறிய இரண்டு பழிகளையும் மறுத்துக் கூறினோம். இனி அப்பெருமானாரின் சரித்திரத்தைப் பொய்யெனக்கூறும் சுயமரியாதையினர் கூற்றை ஆராய்வாம்.

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் ஆண்டவனருளால் உமாதேவியாரிடத்து அருட்பாலுண்டது முதலாகவுள்ள பல அற்புதங்களைச் சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்துட் கூறுகின்றார். அவர் கூற்றுக்களைப் பொய்யெனக்கூறுகின்றனர் நம் சுயமரியாதையினர். ஆதலால் அப்புராணக் கூற்றுக்களை அறவே தள்ளி விடுவோம். ஞானசம்பந்தரே அவ்வற்புதங்களைத் தமது திருப்பாடல்களினுள்ளேயே கூறுகின்றாரே. அவைகளைக்கொண்டு முடிவுக்குவருவோம். முதலாவதாக அவர் உமாதேவியாரிடத்துப் பாலுண்டாரென்பது.

அதற்குச் சான்று,

"போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்."

என்பதே. இதைவிட ஒரு விளக்கமான சான்று வேண்டுவதின்றாம். மேலே அவர் பிள்ளைப் பிராயத்திலேயே அதாவது மூன்றாவது ஆண்டிலேயே திருவருட்பாக்களைப் பாடத்தொடங்கினார் என்பதை நிலைநாட்டுவாம்.

பாண்டியன் மனைவியாராகிய மங்கையர்க்கரசியார் தம்மைப் பார்த்துப் பால்மண மாறாத பசுங்குழவியென நினைப்பதை உணர்ந்து கூறுவார்,

"மானினேர் விழி மாதராய் வழுதிக்கு
மாபெருந் தேவிகேள்
பாலல்வா யுடைப் பாலனீங்கிவ
னென்றுநீ பரிவெய்திடேல்"

என்று கூறுகின்றார். இது அப்பெருமானார் பிள்ளை

வயதிலேயே பாடத்தொடங்கினர் என்பதை நிலைநாட்டப் போதுமானதாகும். திருமருகல் என்னும் திருத்தலத்திற்கு ஞானசம்பந்தர் இறைவனை வழிபட எழுந்தருளியகாலத்து அடுத்துள்ள ஊரிலிருந்து வணிகப்பெண்ணொருத்தி தன் அம்மானை மணந்துகொள்ளும் விருப்பினளாய் பெற்றோர் தம் ஊரைவிட்டு அவ்வூருக்கு அம்மானோடும் வந்த வள், வந்த இரவு தன் அம்மான் அரவுதீண்டி இறந் ததைக் குறித்து மருகற்பெருமானை நோக்கிப் பெரிதும் போற்றித் துதித்து வருந்தினள். அங்ஙனமாக அவள் அழுதரற்றுகின்ற ஒலியைக்கேட்ட நம்பெருமானர் ஆங்கு எழுந்தருளி அவளுடைய அம்மான் பிரேதத்தை ஆலயத் திற் கெடுப்பித்துத் தாம் ஆண்டவனை வேண்டி மீண்டும் அவ்வணிகன் உயிர் பெற்றுய்யுமாறு செய்து அவர்க்குத் திருமணமும் செய்துவித்தார் என்று பெரியபுராணம் கூறு கின்றது. அக்கூற்றுக்குச், "சடையா யெனுமால் சரணீ யெனுமால்" என்னும் தொடக்கத்தை யுடைய திருமருகல் தேவாரத்தில்,

> "வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனு
> எழுவாள் கனைவாள் இரவும் பகலு
> மழுவாள் உடையாய் மருகற் பெருமான்
> தொழுவாள் இவளைத் துயராக் கினையே."

எனவும், ஏனைய பத்து பாடல்களுள்ளும் இம்மாதிரியே ஞானசம்பந்தர் எடுத்து மொழிகின்ற அருள்மொழிகள் அரண் செய்கின்றன. ஞானசம்பந்தர் மங்கையர்க்கரசியார் அழைப்புக்கிணங்கி மதுரையம்பதிக்கு எழுந்தருளி ஒரு சைவ மடத்தில் தங்கியிருந்தார். அப்பொழுது சமணர்கள் பொறாமையினால் அம்மடத்தில் நள்ளிருளில் தீவைத்து விட்டனர். அத்தீயினை அவர்கள் தலைவனைக் அதுபொழு திருந்த கூன்பாண்டியனையே போய்ப் பற்றும்படிப் பிள்ளை

யார் திருவருள்கொடு செய்தார் என்பதும் ஒரு அற்புதம்.

"செய்யனே திரு வாலவாய் மேவிய
ஐயனே யஞ்சல் என்றருள் செய்யாய்
பொய்யரா மமணர் கொளுவும் சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே"

என்வரும் பாடலானும் அதன் கீழுள்ளபத்துப் பாடல்களானும் அவ்வற்புதத்தினை ஞானசம்பந்தர் எடுத்தோதியிருக்கின்றமை காண்க. இனிப் பாண்டியனைப் போய்ப்பற்றிய அவ்வெப்பு நோயை நீக்கியமை "மந்திரமாவது நீறு" என்னுந் தொடக்கத்தை யுடைய பாடல்களுள் இறுதிப் பாடலில்,

"ஆற்றலடல் விடையேறு மாலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
ஏற்றிந் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயினதீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர்தாமே."

என்று பிள்ளையார் கூறுதல் கொண்டு தெளியலாம். இவ்வாற்றானே அவர்கள் செய்த அற்புதங்கட் கெல்லாம் அளவிறந்த சான்றுகள் தேவாரத்தின்கண்ணேயே விருப்ப, அவைகளை அறிய ஆற்றலிலராய் அலர் மொழி கூறித் திரிகின்றனர் சுயமரியாதையினர். இவ்வளவானே, திருஞானசம்பந்தர் பிள்ளைப்பிராயத்திலேயே திருவருள் பெற்றுத் திருப்பாடல்கள் பாடியது முதலான பல அற்புதங்களைச் செய்தாரென்பதும் பிறவுமாகிய அப்பெருமானரின் சரித்திரம் மெய்ம்மையானது என்பது நிலைநாட்டப் பெற்றது. இனி அச்சுயமரியாதையினர் நாவுக்கரசரெனும் நற்றமிழ் வேந்தரைச் சமணத் துரோகியெனச் சாற்றுவதைப் பற்றிப் பார்ப்போம். அப்பெரியார் சைவ சமயத்திற் பிறந்தவர்; அப்பெருஞ் சமயத்தில் வளர்ந்தவர்;

கல்வி கேள்விகளிற் சிறந்ததும் அச்சமயத்திலேயே. இடைக்காலத்தில் சைவசமயத்தை விடுத்துச் சமண சமயம் புகுந்தார். புகுந்த அங்கும் அம்மதநூல்களை ஐயந் திரிபறக் கற்று வல்லவரானர். அதனல் அவற்குப் பல்லவ அரசன் அமைச்ச பீடத்தையும் தருமசேனர் எனும் பட்டத்தையும் அளித்தான். அங்ஙனமாக அவரிருந்து வரும் நாளில், நாவுக்கரசரின் தமக்கையாரான திலகவதியார் தமது தம்பியார் சமண் சமயம் புகுந்தது கொண்டு வருத்தமுற்றுத் தாம் வழிபட்டுவந்த வீரட்டானேச் சரனிடத்து வேண்டி மீளத் தம்பியைச் சைவசமயம் சாரும்படிச் செய்தார் என்பதை முன்னர் சரித்திரத்திலேயே குறிப்பிட்டுள்ளோம். அங்ஙனமாக அவர்கள் சைவ சமயத்திற்கு வந்தது துரோகமாம். என்னே சுயமரியாதையினரின் போக்கு? சமண மதம் இடையில் வந்தது. ஆதி முதலாக இருந்து வந்தது சைவசமயம். அப்படியிருக்க இடையில் வந்த சமணமதத்தை விட்டுச் சைவசமயத்திற்கு வந்தது எங்ஙனம் துரோகஞ் செய்ததாகும். ஆம்; ஆம். அவர் ஒரு துரோகியே. தேசீயமகாசபையின் பணத்தைப் பலவாருகச் செலவழித்து உண்டு ஏப்பமிட்டதோடு, அதனுல் இராமசாமி நாயக்கர் தமது பெயரைத் தமிழ் நாட்டில் விளம்பரப் படுத்திக் கொண்டதையும் மறந்து அச்சபையை விட்டு விலகியதும், விலகியதோடு நில்லாது அச்சபைக்குச் செய்ய வேண்டிய தீங்குகளை யெல்லாம் செய்து கொண்டுவருவதும் பெருந் துரோகச் செயல்களேயன்ருே? அவர் ஒரு பெருந் துரோகியேயன்ருே? இராமசாமி நாயக்கர் போல வாங்கிய பணத்திற்குக் கணக்குக் கொடுக்காதபடி தெற்கும் வடக்கும் விழிக்க வில்லை எவரும் என்பதை அவரும் அவர் மாணவ வருக்கங்களும் அறிந்துகொள்ள வேண்டும்.

சமணர்கள் நாவுக்கரசருக்குக் கொடுத்த மலைபோன்ற நிதியத்தை அப்பெருமானார் எடுத்துக் கொண்டு வந்து விட்டாரென்பதை அவர்கட்கு வார்சு பாத்தியமுடைய இவ்விராமசாமி நாயக்கர் ஆதாரத்தோடு நிரூபித்தால் நாவுக்கரசருடைய வார்சு பாத்தியதையுடைய நாமும் பிறரும் அதைக் கொடுக்கத் தயாராக விருக்கின்றோம். அங்ஙனமின்றி வீணே உளறி வழிதல் எற்றுக்கு? நாவுக்கரசர் எவ்வகையில் சமணர்கட்குத் துரோகஞ் செய்தார்? சமண் மதம் ஒரு நன்மதமெனக் கருதிச் சென்றார். அம்மதம் மக்களினமல்லாத ஏனைய உயிர் வருக்கங்களினிடத்தில் கருணையோடிருப்பது. மக்களினத்தவரிடத்தில் அவ்விரக்கத்தை ஒரு சிறிதும் காட்டுவதில்லை. மனிதவர்க்கத்தவரிடத்துக் கருணையுடையவரென்னின் அச் சமணர், நாவுக்கரசரை நீற்றறையில் விடுவரோ? விஷத்தைக் கலந்த உணவை உண்ணச் செய்வரோ? யானையை விடுத்து இடரச் செய்வரோ? எல்லாஞ் செய்தாலும், கல்லோடுசேர்த்துக் கடலிற் றள்ளுவரோ? கூறுமின்கள். ஞானசம்பந்தர் சமணரைக் கழுவேற்றினார்; ஆதலால் அவர் ஒரு கொலைபாதகர் என்று அரற்றித் திரிகின்ற சுயமரியாதையினரே! சமணரைக் கழுவேற்றிய சம்பந்தர் கொலைபாதகரே? திருநாவுக்கரையரை நீற்றறையில் விடுத்தும்; விஷங்கலந்த பாலடிசிலை உண்ணச் செய்தும், யானையை விடுத்து அவர் சிரசை இடரச் செய்தும், போதாக்குறைக்குக் கருங்கல்லோடு சேர்த்துக் கடலில் தள்ளியதும் முதலான பல நற்செயல்களைச் செய்த உங்கள் முன்னோர்களாகிய சமணர் கொலைபாதகர்களாகமாட்டார்களோ? அவர்கள் பரம்பரையாகிய நீங்களும் கொலைபாதகர்களாக வேண்டாமோ? சிந்தித்துப் பாருங்கள். 'தான் திருடி அயல் வீட்டவனை நம்பாள்' என்ற பழமொழியை வேதவாக் காக்கினீர்

களோ? உங்கள் முன்னோரும் நீங்களும் கொலை பாதகர்களாயிருப்பதனால் தான் எங்கள் கவுணியர் குலவிளக்கை—கருணையங் கடலை—காழி வேந்தனைக் கொலைபாதகரெனக் கூற முன்வந்தீர்கள். நிற்க,

சமணர் கொல்லாமை அறத்தைச் சிற்றுயிர்கள் மாட்டுச் செலுத்தினரேயன்றிப் பேருயிர்களாகிய மக்களிடத்துச் செலுத்தவில்லையென்பதும், அவர்கொண்ட கொள்கை தவறுடையதென்பதும் தெளிவாகின்றன. ஆகவேதான், நாவுக்கரையர் அம்மதம் ஒரு நன்மதமன்று என்பதை அறிந்து நற்சமயமாம் சைவசமயத்தைச் சார்ந்தனர். இது ஒரு துரோகச் செயலோ?

இனி திருநாவுக்கரையர் திருவருளினால் இந்நிலமிசைத் தோன்றி அற்புதங்கள் பல செய்தவரென்பதையும் பிறவற்றையும் அவர் திருப்பாடல்களிலுள்ள அகச்சான்றுகள் பல கொண்டு நிறுவுவாம். முதலாவதாக அப்பெருமானரைச் சமணமதத்திருந்து சைவசமயத்திற்குக் கொணர இறைவனால் அவர் உடற்கண் சூலைநோயினை உண்டாக்கப்பெற்றது. அந்நோய் அங்கு நீங்கப்பெறாது, வேதனையோடு வந்து அடிதாழ்ந்த அவருக்கிருந்த அச்சூலைநோயை ஆண்டவனே தீர்த்தருளினான் என்பது. இதனை நாவுக்கரசர்,

"முன்னம் மடியே னறியா மையினுன் முனிந்தென்னை
நலிந்து முடக்கியிடப், பின்னை யடியே னுமக்காளும்
பட்டேன் சுடுகின்றது **சூலை தவிர்த்தருளீர்**, தன்னை
யடைந்தார் வினைதீர்ப்ப தன்றோ தலையாயவர் தங்
கட னாவதுதா, னன்ன நடையா ரதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே."

என்று கூறுமாற்றாற்றெளியலாம். சூலைநோயுண்டாகியிரு

க்கலாம். இக்காலத்து அறிவின்மையினுற் பலர் நோய் தீர்ந்துபோகவேண்டுமென ஆண்டவன் சந்நிதியிற்சென்று முறையிட்டுக் கொள்கின்றனரே அம்மாதிரித்தான் அவரும் வேண்டிக்கொண் டிருக்கின்றனர். இதிலென்ன அற்புதமிருக்கின்ற தென்னின், ஆம். வேண்டிக் கொண்ட தோடு நின்றுவிட்டால் அற்புதமில்லை. வேண்டிக்கொண்டாங்கு அந்நோய் அப்பொழுதே தீர்ந்து போயிருந்தால் அற்புதமாகக் கொள்ளலா மன்றே? அதைக் கவனிப்போம். திருவாரூர்ப் பழமொழி என்னும் தலைப்பினை யுடைய பாசுரங்களுள் ஒன்றில்,

"பெருகு வித்தேன் பாவத்தைப் பண்டெலாங் குண்டர்தஞ் சொல்லே கேட்டு. உருகு வித்தேன் னுள்ளத்தி னுள்ளிருந்த கள்ளத்தைத் தள்ளிப் போக்கி, யருகு வித்துப் பிணிகாட்டி யாட்கொண்டு பிணி தீர்த்த வாரூரர்தம், அருகிருக்கும் விதியின்றி யறமிருக்க மறம்விலைக்குக் கொண்ட வாறே."

என, அப்பெருமானுர் கூறியுள்ள பாசுரத்தை நோக்குங் காலத்து, சமணசமயத்தை மேற்கொண்டிருந்த அடிகளை நோயினுல் வருத்திப் பின்னர் அந்நோயினை இறைவன் தீர்த்தருளியது வரை விளக்கமாகின்றது. இன்னும் அடிகள் திருவையாற்றுத் திருவிருத்தங்களாலும் தம்மை இறைவன் சூலைநோய்க் காட்படுத்தி சமண்மதத்தினின்றும் பிரித்துக் கொணர்ந்து அந்நோயினைத் தீர்த்தருளியதைக் கூறுகின்றுர். அவற்றுள் ஒன்றில் மிக அழகாக,

"தாக்கினவா சலமே வினை காட்டியுந் தண்டித்த நோய்
நீக்கினவா நெடுநீரி னின்றேற்றி நினைந்தருளி."

எனக்கூறுதல் காண்க. இப்பாசுரத்திலும், இதனைச்சேர்ந்த இன்னுஞ் சில பாசுரங்களிலும், தம்மைச் சமணர் கடலுள்

தள்ளியதினின்று ஆண்டவன் ஆண்டருளியதனையும் குறிப் பிடுகின்றார்.

ஆகவே, இது ஒரு அற்புதமேயென்பதும், உண்மை யென்பதும் முடிவாகின்றன. நாவுக்கரையர்க்குச் சமணர் கள் விடங்கலந்த பாலடிசில் ஊட்ட, அவ்விஷத்தினை இறைவன் திருவருளால் அமுதமாக உண்டு ஆனந்த மடைந்திருந்தார் என்பதும் ஒரு அற்புதமாகும். அதனை அடிகள், திருநனிபள்ளித் திருநேரிசை யொன்றில்,

"வஞ்சனைப் பாற்சோ றாக்கி வழக்கிலா வமணர் தந்த
நஞ்சமுதாக்கு வித்தார் நனிபள்ளி யடிகளாரே"

எனத்தமக்குப் பாலடிசிலில் சமணர் விடங்கலந்து ஊட்டி யதையும், அதனை இறைவன் அமுதமாக மாற்றினன் என் பதையும் மிக அழகாகக் கூறுகின்றார்கள். பின்னர் நாவுக் கரையரைக் கல்லோடு சேர்த்துக் கடலில் தள்ளினர் சம ணர். தள்ளிய அவ்வாபத்தினின்றும் நமது பெருந்தகை ஆண்டவனின் அஞ்செழுத்தை ஓதித் தப்பினர் என்பது. இதனை,

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே."

என்னும் திருப்பாட்டானுணரலாம். இல்லை; இல்லை. இத்தி ருப்பாட்டில் அக்குறிப்பு ஒன்றுங் காணப்படவில்லை. 'கற் றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்' அப்படி ஒரு காலம் வரினும் நமக்கு நற்றுணையாக நிற்பது நமச்சி வாயவே என்று தான் அவர் கூறுகின்றார் என்று கூறு வாருளரேல், அவர்க்கு ஒன்று கூறுவோம். இப்பாடலைத் தான் இவ்வாறு கூறுகின்றீர் புலவீர்!

"கல்லினோ டெனைப் பூட்டி யமண் கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக்குடி யரன்
நல்ல நாம நவிற்றி யுய்ந்தே னன்றே."

என்று திருநீலக்குடித் தேவாரத்தில் கூறுகின்றார்களே அப்பாட்டிற்கு என்ன கூறுவீர்கள். இதன்கண் தம்மைச் சமண் சமயத்தினர் கல்லோடு பிணைத்துக் கருங்கடலுள் வீழ்த்தியதையும், அப்பொழுது தாம் இறைவனின் நல்ல நாமமாகிய 'நமச்சிவாய' என்னும் நாமத்தைச் சொல்லி உய்ந்து வந்தமையையும் நன்கு விளக்குதலால் இவ்வற்புதமும் நிலைநாட்டப் பெற்றது. இனி, அப்பெருமானார், திருமறைக்காட்டில் இறைவன் திருக்கோயில் திருக்கதவு மூடப்பெற்றிருந்ததைப் பாசுரங்களினால் திறப்பித்தது என்பது. இதனை,

"பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே."

என வரும் திருமறைக் காட்டுத் திருக்குறுந் தொகையா னுணரலாம். இன்னும்,

"திறக்கப் பாடிய வென்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி யடைப்பித்தா ருண்ணின்றார்"

என்று திருவாய்மூர் திருக்குறுந் தொகையின்கண் அடிகள் தாம் திறக்கப் பாடியதும், ஞானசம்பந்தர் அடைக்கப் பாடியதுமான குறிப்புக்களை விளக்குவதானும் உணரலாம். நாவுக்கரசர் திருநல்லூர்க்கு வரும்படியாக ஆண்டவன் பணித்ததைச் சிரமேற்கொண்டு அத்திருத் தலத்திற்குச் சென்று அப்பெருமானை வணங்குகின்ற

காலத்து, இறைவன், அடிகள் முடிமேல் திருவடி வைத்து 'நீ எண்ணியதை முடிப்பேம்' எனக்கூறினர் என்பதனை, அடிகள், திருநல்லூர்த் திருத்தாண்டகங்கள் முழுவதிலும்,

"நனைந் தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானர் நல்லவாறே."

எனவும், பிறவாற்றானும் கூறியிருத்தல் கொண்டுணரலாகும். அப்பூதியடிகள் திருமகனை யெழுப்பியது முதலாக வுள்ள பல அற்புதங்கட்கும் அகச்சான்றுகள் தேவாரத்தின்கண் காணப்படுகின்றன.

அவைகளை யெல்லாம் எடுத்து விளக்கிச் சொல்லுதற்கு இச்சிறுபுத்தகம் இடந்தராமையின் இம்மட்டோடு நிறுத்தி மேலே சுயமரியாதையினர் 'கீழ்மகன்' என்று கூறுகின்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளைப்பற்றிக் கவனிக்கத் தொடங்குவாம். இதுவரைக் கூறிவந்த வாற்றாற் நாவுக்கரையர் நிகழ்த்திய அற்புதங்கள் அனைத்தும் உண்மையே யாமென்பது திண்ணமாகத் தெரியவரும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவையாரையும், சங்கிலியாரையும் மணந்து திரிந்தார்; அவரென்ன மகாபெரியார் என்றெல்லாம் அரற்றித்திரிகின்றனர் சுயமரியாதையினர். சுயமரியாதையினரையும் அவர்கள் கூற்றுக்களையும் நினைக்கும்போது நமக்குப் பெருவியப் புண்டாகிறது. ஏனெனில், ஆசிரியர் பவணந்தியார் மாணவரிலக்கணத்தினை மூன்று வகையாகப் பிரித்து,

"அன்னம் ஆவே, மண்ணொடு கிளியே,
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடை மாணக்கர்"

என அம்முப்பிரிவின் இலக்கணத்தையும் வகுக்கின்றார் அவர் வகுக்கின்ற முறைப்படிப் பார்ப்போமாயின், முதற்

பிரிவுமாணவர் எத்திறத்தவர் என்னின், பாலினின்று நீரைப்பிரித்து உண்ணுகின்ற அன்னத்தையும், உணவாகக் கொண்டவற்றை உறங்கும் போதும் அசைபோட்டு அதுக்கி உண்ணும் ஆவினையும் ஒத்தவரென்றும், இரண்டாம் பிரிவினர், நட்ட வித்தின் முளையைத் தவறாது வெளிக்குக் கிளப்பும் பூமியினையும் சொன்னதைத் தவறாது சொல்லும் கிளியினையும் ஒத்தவரென்றும், மூன்றாம் பிரிவினர், மேலே விடுகின்ற நீரனைத்தையும் கீழே ஒழுகவிட்டுக்கொண்டிருக்கும் ஓட்டைக் குடத்தினையும், மேய்ந்து கொண்டிருக்கும் பசும்புல்லை விடுத்து எதிரே பசுமையாகத் தோன்றும் கட்டாந்தரைக்குச் செல்லுவதும் அங்கிருந்து பிறிதொரு இடத்திற்குச் செல்லுவதுமாக உணவு உண்ணாது திரியும் ஆட்டினையும், பளிங்கு போன்ற நீரை விடுத்து சேற்றில் அமிழ்ந்து கிடத்தலையே மகிழ்வாகக் கொள்ளும் எருமையினையும், நல்லநெய்யினை யெல்லாம் கீழே ஒழுக விட்டு விட்டு அசட்டினை மட்டும் தாங்கிக் கொண்டிருக்கும் பன்னாடையையும் ஒத்தவரென்றும் கூறுகின்றார். இந்நிலையில் நம் சுயமரியாதையினரை நோக்குவோமாயின் அவர்கள் இக்கடையவரின் இலக்கணத்திற் குரியவர்களாக விருத்தலைக் காணலாம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒரு சீர்திருத்தக்காரர் என்பதைப் பலசான்றுகள் கொண்டு நிறுவலாம். அவர் ஒரு அந்தணர். அங்ஙனமிருக்க கணிகையர் குலத்துதித்த பரவையாரையும், வேளாள மரபிலுதித்த சங்கிலியாரையுமே அவர்மணந்துள்ளார். இச்செயல் கொண்டு அவரை நாம் போற்றுதல் கூடாதா? இன்று தமது மனைவி இருக்கும் போது எங்கேயோ உள்ள ஒரு கைம்பெண்ணை மணந்தவர்க்கெல்லாம் எத்துணைச் சிறப்பு நடக்கின்றது. அத்தகையாரை யார் இகழுகின்றார்? அவர்கள் தாம் பெரிய சுயமரி

யாதை வீரர்கள். ஆனால் தம்மையல்லாது வேறெவரையும் கனவிலுங் கருதாது தம்மையே மணந்து கொள்ள வேண்டுமெனத் தவங்கிடந்த இரு பெண்தெய்வங்களை மணந்து கொண்ட சுந்தரர் மட்டுங் கீழ்மகனும்? என்னே! விந்தை!! அவர்கள் என் செய்வார்கள். தட்டிப் பேசுவாரில்லை யென்றால் தம்பி சண்டப் பிரசண்டனன்றோ? ஒருவரும் அவர்கள் வாய்க்குச் சூடிடாதவரை இம்மாதிரித்தான் கூறித்திரிவார்கள். இங்ஙனங் கூறுகின்ற இராமசாமியார் எத்தகையார் என்று பார்ப்போமாயின் ஒருவர் இருவரல்ல அவரின் அபிமானப் பெண்கள். பலரினும் பலரே. இவர்க்கு இச்சட்டம் பாதிக்காது. ஏன்? வைக்கம் வீரர், 'பெரியார்' 'அவதாரம்' அல்லவா? அதனாலே. தஞ்செயலற்று எல்லாம் இறைவனின் திருவருட் செயல்களே என்றிருந்த சுந்தரர் இரண்டு மனைவியரை மணந்து கொண்டனர் என்பது பொருந்தாதோ? இறைவன் திருவருள் எவ்வெவ்வண்ணம் பணிக்கின்றதோ அவ்வவ்வண்ணம் நடப்பதே சுந்தரர் போன்ற தஞ் செயலற்ற தவநிறையாளர் தங்கடனாகுமென்பதை இராமசாமியாரும் அவரின் சீடவருக்கங்களும் உணர வேண்டும். மணஞ்செய்து கொள்ளவிருந்த பெண்ணை விடுத்து வேறு இரண்டு பெண்களை மணந்து கொள்ளுதல் குற்றமென்னில், முதற் பெண்ணை விடுத்தது யார்? மற்ற இருபெண் தெய்வங்களைத் தொடுத்தது யார்? இறைவனேயன்றோ? இறைவன் செயல் பல காரணங்களைக் கொண்டு நிகழும். அதுபற்றிக் குறை கூற எவரால் முடியும்? தேசிய இயக்கமே சிறந்தது; தேசிய இயக்கமே சிறந்தது என்று கூவித்திரிந்து கொண்டிருந்த நாயக்கர் இன்று அவ்வியக்கம் தாழ்வுடையது, பிற்போக்குடையது என்றெல்லாம் அரற்றித் திரிவதேனென்றால், அவரும் அவரின் சீடவருக்கமும் அதற்குப்

பல காரணங்களுள வென்று கூறுரோ? அதுபோல முதற் பெண்ணை மணந்து கொள்ளாததற்கும், பின்னரிருவரை மணந்து கொண்டதற்கும், காரணங்கள் பல உளவாயிருக்கும். அவையிற்றை உணராது அவலமாக அரற்றித்திரிவது அவதாரத்திற்கோ அன்றி அவதாரத்தைப் பின்பற்றியவே பவர்க்கோ கண்ணியத்தை விளைவிப்பதா ? ஆதலால் இரு பெண்களை மணந்து கொண்டார்; அதனுல் சுந்தரர் கீழ் மகன் என்று கூறுதல் பொருந்தா ஒன்ரும். மேலே அவருடைய அற்புதங்களைக் குறை கூறுகின்றனர். இவைகளைப் பற்றி இராமசாமியார் ஐயப்படுவதெல்லாம் அவரறிவுக் கெட்டாததனுற்ருன் என்று அவர் கூறுகின்ருரென்பதையும், அங்ஙனமாக அவர் கூறுவது பொருந்தா உரையென்பதையும் முன்னரே விளக்கியிருக்கின்ருே மாதலால் அதை விளக்குவதை விடுத்து அவ்வற்புதங்களை அகச் சான்றுகள் கொண்டு நிலைநாட்டும் துறையில் இறங்குவோம். முதன் முதலாக திருமணத்தின்போது இறைவன் தானே ஒரு அந்தணனுக எழுந்தருளி ஒலை காட்டிச் சுந்தரரை ஆட்கொண்டது.

இதனை,

> "கோவல னுன்முகன் வானவர் கோனுங் குற்றேவல் செய்ய, மேவலர் முப்புரந் தீயெழு வித்தவ னேரம் பினு, லேவரனுர் வெண்ணெய் நல்லூரில் வைத் தென்னை யாளுங் கொண்ட, நாவல னுர்க்கிட மாவது நந்திரு நாவலூரே."

எனவும்,

> "தன்மையினு லடியேனைத் தாமாட் கொண்டநாட் சபைமுன்; வன்மைகள் பேசிட வன்றொண்ட னென் பதோர் வாழ்வு தந்தார்."

எனவும்,

"உம்பரார் கோனைத் திண்டோள் முரித்தா ரூரித் தார் களிற்றை, செம்பொனார் தீவண்ணர் தூவண்ண நீற்றரோ ராவணத்தால் எம்பிரானார் வெண்ணெய் நல்லூரில் வைத்தென்னை யாளுங் கொண்ட நம்பிரானார்க்கிட மாவதுநந் திருநாவலூரே."

எனவும்,

"அன்று வந்தெனை யகலிடத் தவர்முன் னாளதாகவென் றாவணங் காட்டி, நின்று வெண்ணெய் நல்லூர் மிசை யொளித்த நித்திலத் திரட் டொத்தினை……"

எனவும்,

"கற்பகத்தினைக் கனகமால் வரையைக் காமகோப னைக் கண்ணுத லானைச், சொற்பதப் பொருளறுத் தருளுந் தூயசோதியை வெண்ணெய் நல்லூரி லற் புதப் பழவாவணங்காட்டி யடியனாவென்னை யாளது கொண்ட, நற்பதத்தை நள்ளாறனை யமுதை நாயி னேன் மறந் தென்னினைக் கேனே."

எனவும்,

"நம்பனே யன்று வெண்ணெய் நல்லூரி னாயினேன் தன்னையாட் கொண்ட, சம்புவே யும்பரார் தொழு தேத்துந் தடங்கட னஞ்சுண்ட கண்ட……"

எனவும், விளக்கமாகக் கூறுகின்றார் நம் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இப்பாக்கள், ஆண்டவன் அந்தணனாக வந்ததும், வந்த அந்தணன் ஓலைகாட்டி அடிமையாக வேண்டுமெனச் செப்பியதும், செப்பியவ ரெதிர் நின்று தாம் வன்மைகள் பலபேசி இறைவனால் வன்றொண்டர் எனும் பெயர் பெற்றதும், திருவெண்ணெய் நல்லூரில் பழவோலையை இறைவன் காட்டி வழக்கினில் வென்று மறைந்தாட்கொண்டதும் முதலான எல்லா நிகழ்ச்சிகட்கும் ஆதாரமாக நிற்

கின்றன. இனி, மணத்தின்போது தடுத்தாட்கொண்ட இறைவனின் திருவருள் வழியேதான் பரவையார்க்கும் சுந்தரர்க்கும் மணம் நடந்தேறியது என்பது. சுந்தரர் புராணத்தைக் கூறுகின்ற ஆசிரியர் சேக்கிழார் மிக நன்ருக இதனை விளக்கியுள்ளார். சுந்தரர் திருவாரூர்க் கோயிலிற்கு வந்த பரவையாரைச் சந்திக்கின்ருர். சந்தித்த அவர்,

"கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ, பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து, விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ, அற்புதமோ சிவனருளோ வறியேனென் றதிசயித்தார்."

எனவும்,

"பாச மாம்வினைப் பற்றறுப் பான்மிகும்
ஆசை மேலுமொ ராசை யளிப்பதோர்
தேசின் மன்னியென் சிந்தை மயக்கிய
ஈச னாரு ளெந்நெறிச் சென்றதே."

எனவும் பிறவாற்ருனும் பரவையாரைத்திருவருள் என்றே குறித்தார் சுந்தரர் என அவர் கூறுகின்ருர். சேக்கிழார் செப்புகின்ருர். அது ஒரு சான்ருகுமோ வென்னின், சுந்தரரே திருவருளெனச் சொல்லுவதைக் காட்டுவாம்.

"எழிசையா யிசைப் பயனா யின்னமுதா யென்னுடைய தோழனுமா யான் செய்யுந் துரிசுகளுக் குடனுகி மாழையொண்கண் பரவையைத் தந்தாண்டானை மதியிலா ஏழையேன் பிரிந்திருக்கே னென்னாரூ ரிறைவனையே"

எனக்கூறுகின்ருர் சுந்தரர். இறைவன் பரவையைத் தந்தருளினன் என்று கூறுவதனாலேயே பரவையார் திருவருள் வழிவந்தவரென்பதும், அவ்விறைவனாலேயே சுந்தரர்க்கு மனைவியாக்கப் பெற்ருரென்பதும் புலனாகும். இங்ஙன

மாகப் பரவையைத் தந்தாண்டபெருமானே திருவொற்றி யூரில் வேளாண்மரபு விளங்கவந்த சங்கிலியாரையுங் கொடுத்தருளினான் என்பதையுங் கூறுகின்றார் நம்பெருமானார் சுந்தரர்.

> "மான்றிகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்க ளெல்லாந்
> தோன்ற வருள் செய் தளித்தாய்........"

என்பதே.

மேலே, பரவையாரை விடுத்துத் திருவொற்றியூரையடுத்து அங்கு இறைவனருளால் பெற்ற சங்கிலியார்க்குப் பிரியேனெனச் சூளுரைத்துச் சில ஆண்டுகள் தக்கியிருந்த பெருமானார் திருவாரூர்த் தேசிகனைக் கண்ணுறும் அவாவின் பெருக்கினால் அதனை மறந்தாராய்த் திருவொற்றியூர் எல்லையைக் கடந்த பொழுது கண்களிரண்டும் மறைந்து பட்டன வென்பது. அதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

> "மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய் மைந்தனே மணியே மணவாளா, அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னா லழையேற் போகுருடாவெனத் தரியேன், முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன் முக்கணா முறையோ மறையோதீ, யுகைக்குந் தண்கட லோதம்வந் துலவு மொற்றி யூரெனு மூருறைவானே"

என்று கூறுமாற்றாற் றெளியலாம். பின்னர் ஊன்றுகோல் பெற்றதையும் ஒருகண் முதலிலும் மற்றொருகண் பின்னரும் பெற்றது முதலிய அடிகள் பிறவிடங்களில் எடுத்துக் கூறுகின்றவாற்றாற் றெளியலாம். அங்ஙனமாக ஒற்றியை விடுத்துத்திருவாரூர்க்குத் திரும்பி வந்த பெருமானைப் பரவையார் பிணக்கு கொண்டு சேர்த்துக்கொள்ளாமைக்காக இறைவன் தூதுசென்றான் என்பதும் ஒரு அற்புதமாகும்.

இறைவன் தானே தமக்குத் தூதனாயினான் என்பதைச் சுந்தரர்,

"மாதினுக் குடம்பிடங் கொடுத்தானை மணியினைபணி வார்வினைகெடுக்கும், வேதனைவேதவேள்வியர்வணங் கும்விமலனை யடியேற் கெளிவந்த, தூதனைத்தன்னைத் தோழமை யருளித் தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும், நாதனை நள்ளாறனை யமுதை நாயினேன் மறந் தென்னினைக் கேனே."

எனவும்,

"தூதனை யென்றனை யாட்கொளனை நாயகனைத் தாழ் மகரக் குழையுந் தோடு மணிந்ததிருக், காதனை நாயடி யே னெய்துவ தென்று கொலோ கார்வயல்சூழ் கானப்பேருறை காளையையே."

எனவும் கூறிப் போதல்காண்க. இவ்வாற்றானே அப்பெரு மானார் திருவருள்வலங்கொண்டு செய்த அற்புதங்கள் பலப்பல. பரவைநாச்சியார் பொருட்டு ஆண்டவனிடத்து நெல் வேண்டிப் பெற்றதும், அந்நெல்லினைக்குண்டையூரி லிருந்து திருவாரூர்க்குக் கொணரக் கூலியாள் கிடையாது ஆண்டவனிடத்திலேயே ஆட்களை வேண்டியதும் கீழ்வரும் தேவாரங்களாலே நாம் உணரலாகும்.

"குரவமருங் குழலா ளுமை நங்கையோர் பங்குடை யாய், பாவை பசிவருத்த மதுநீயு மறிதி யன்றே, குர வமரும் பொழில்சூழ் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றே, னரவ மசைத்தவனே யவை யட்டித்தாப் பணியே."

எனவும்,

"அரக்கன் முடிகரங்க ளடர்த்திட்ட வெம்மாதி பிரான், பரக்கு மரவல்குலாள் பரவையவள் வாடுகின்

ருள், குரக்கினங்கள் குதிகொள் குண்டையூர்ச்சில
நெல்லுப் பெற்றேன், இரக்கம தாயடி யேற் கவை
யிட்டுத் தரப்பணியே."

எனவும் கூறுகின்றார்கள். பரவையார் பொருட்டுப் பொன்வேண்டி முதுகுன்றப் பெருமானிடத்துப் பெற்று அதனை மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்த்திருக்குளத்திலெடுத்தார் என்பதும் ஒன்று. அதனை,

"உம்பரும் வானவரு முடனே நிற்க வேயெனக்குச்
செம்பொனைத் தந்தருளித் திகழும் முதுகுன் றமர்ந்தீர்
வம்பமருங் குழலாள் பரவையிவள் வாடுகின்றா
ளெம்பெருமா னருளீரடியே யிட்டளங் கெடவே"

எனக்கூறுகின்றார். இவ்வண்ணமாகச் சுந்தரர் செய்த அற்புதங்கள் பலவற்றிற்கும் அகச்சான்றுகள் பல தேவாரங்களிலேயே யிருக்குங் காலத்து அவர் ஒரு அடியாரல்ல; ஆசார்யரல்ல; இழிதகவுடையாரே என்றெல்லாங் கூறுதல் பெரிதும் இழுக்குடையதாமென்க.

எனவே, உலகு தொடங்கிய காலந்தொடங்கித் தம் மக்களாலும், பிறராலும் போற்றப்பட்டு வருவதாகிய மாபெருஞ் சமயமாம் சைவ நற்சமயத்தை வாழ்விக்க வந்த பெரியார்கள் திருவருள் வழிவந்தவர்களென்பதும், அவர்கள் செய்த அற்புதங்கள் பலவென்பதும், அவ்வற்புதங்களை நிலைநாட்டற்குப் போதியசான்றுகள் அவர்கள் திருவாய் மலர்ந்த நூல்களிலேயே உளவென்பதும் இவ்வளவில் நிறுவப்பெற்றன. இங்ஙன மிருப்ப அரிச்சுவடியே இன்னதென அறியாத—அறிவு எங்கிலையது என்பதை அறியாத—அறவினை யறியாத ஒரு இராமசாமி நாயக்கரும் அவரனைய—அவரிலுங் கீழான அவரின் வால்களும் அது பொய்; இது பொய்; அவர் திருடர்; இவர் கொலைபாதகர்

என்றெல்லாம் மக்கள் மதிக்கா பல மடமையுரைகளைப் புலம்பித் திரிதல் அவர்களின் புன்மையைக் காட்டுகின்ற தன்றோ? இராமசாமியார்க்குத் தேவாரமென்றால் என்ன வென்பது தெரியுமா? திருவாசகம் தெரியுமா? பெரியபுராணமோ பிறவோ தெரியவருமா? வீணே ஒன்றுமறியாது உளறிவழிதல் உன்மத்தரின் செய்கையேயன்றோ? இராமலிங்க அடிகளென்ன; தாயுமானவர் என்ன; பட்டினத்தார் என்ன; இவர்களன்ன இன்னுமுள்ள பெரியார்களென்ன ;இக்காலத்துள்ள காந்தியடிகளென்ன; அவரன்ன பெரியார்களென்ன அவர்கட்கெல்லாம் தெரியாத ஒன்றினைத் தாம் தெரிந்துகொண்டதாகப் பறைசாற்றுகின்றாரே இராமசாமி நாயக்கர். இவரென்ன அப்பெரியார்களின் அடித்துகளுக்காவது இலக்காவரா? இல்லையேல் அவர்கள் சென்ற செந்நெறிகளில் ஏதாமொரு செந்நெறியில் செல்லுவ திருக்கட்டும்; அதனை அறிவாரா? அறிவதற்கு இவர்க் காற்றல் உண்டா? பிறந்தது முதலாக வேசிகமனம் முதலாகிய பல இழிதுறைகளில் முதல் நம்பர்க்காலிகளுடன் சேர்ந்து திரிந்தவரன்றோ இராமசாமியார்? அந்தோ இவரும் ஒரு பெரியாரா? இவருரையையும் ஒரு பத்திரிகை மேற்கொண்டு வெளிவருகின்றதே! கற்பென்பது ஒரு சிறிதுமிலாது காலிகளோடு சேர்ந்து திரிந்த இக்குணமிலாரையும் வைத்துக்கொண்டு திருமண மியற்றுகின்றனரே நம்மிற் சிலர். அது எவ்வளவு தூரம் வருந்தத்தக்கது. நிற்க, ஒருவிதயோக்கியதையும் சிறிதுமில்லாத நாயக்கரும் அவரின் வால்களும் வீணே சமயகுரவர்களையும், அவர்களின் சரித்திரங்களையும், அற்புதங்களையும் பழித்துக் கூறித்திரிதற்குக் காரணமாயிருக்கின்ற வலிப்பு நோய்க்கு இப்பகுதி ஒரு சூட்டினைத்தீட்டிவிட்டது. இனி அவர்கள் சமயத்தைப் பற்றிக் கூறுகின்றவற்றை ஆராய்வாம்.

## சமயம்.

சைவ, வைணவ சமயங்கள் அழிந்தொழியவேண்டுமென அரற்றுகின்றனர் சுயமரியாதையினர். காரணம் அச்சமயங்கள் இரண்டும் பார்ப்பனர்க்கு ஆதிக்கம் கொடுக்கின்றனவாம். இக்காரணம் எவ்வளவு சரியானது என்பதை ஆராய்தல் வேண்டும். ஆரியப்பார்ப்பனர்க்குச் சைவ வைணவசமயங்கள் எவ்வகையில் ஆதிக்கங்கொடுக்கின்றன என்பது நமது கேள்வி. சைவவைணவசமயங்கள் தமிழர்க்குரியன. அவைகட்கும் ஆரியப் பார்ப்பனர்கட்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. அவர்தம் சமயம் சுமார்த்தசமயமாகும். அவர்கள் கொண்டிருக்கிற ஆசாரியர்களே வேறு. தமிழர்க்கும் ஆரியர்க்கும் பல வேறுபாடுகளுள்ளன. அங்ஙனமிருக்கும் போது அவ்வாரியப் பார்ப்பனர்கட்குச் சைவவைணவசமயங்கள் ஆதிக்கங்கொடுக்கின்றன வென்பது பொருந்தாத புன்மையுரையேயாகும். ஆனால், அவ்விருசமயங்கள் ஒழுக்கத்திற் சிறந்தார்க்கு உயர்வு கொடுக்கின்றன. ஆரியப்பார்ப்பனர் ஒழுக்கத்திற் சிறந்தாராக விருப்பரேல் அவர்கட்குச் சைவ, வைணவ சமயங்கள் சிறப்புக்கொடுக்கும். சிறப்புக்கொடுத்தலாவது இறைவழிபாடு முதலிய அங்கங்களை அவர்கட்கு நல்கும். எனினும், ஆரியப்பார்ப்பனர் எவ்வளவு சீலமுடையவராயிருப்பினும், தமிழந்தணர்க்கே இறைவனிடத்து அணுக்கமாயிருக்கும் ஒன்றினைச் சைவவைணவசமயங்கள் கொடுக்கின்றன. இவ்வொன்று கொண்டு சைவவைணவசமயங்கள் ஆரியப்பார்ப்பனர்க்குச் சிறப்புக் கொடுக்கின்றன வென்று கூறுதல் பொருந்துமோ? இது கல்விப்பயிற்சியுடைமைக்காகப் பார்ப்பனர்கட்கு உத்தியோகங்களைக் கொடுக்கின்ற அரசாங்கத்தினரைத்திட்டுகின்ற ஒரு அறி

யாமையை ஒத்ததாம். இறைவனின் ஆலயங்கள் மக்களைப் பரிசுத்தப்படுத்துவதற்காகக் கட்டப்படுவன. மக்களைப் பரிசுத்தப்படுத்துவன ஆலயங்கள் என்னின் அவைகள் முதன் முதலாகப் பரிசுத்தமாக இருக்கவேண்டுவதவசியமாகும். மக்கள் வாழ்க்கையில் படிந்திருக்கும் மாசுகள் எவையும் ஆண்டு இருத்தல் கூடா. அவ்வாலயங்களில் தொண்டுசெய்வோரனைவரும் தூயர்களாக விருத்தல் வேண்டும். அங்கு நடக்கின்ற காரியங்கள் அனைத்தும் தூய்மையுடையனவாகவிருத்தல்வேண்டும். அப்பொழுதுதான் மக்களை உண்மையிலேயே பரிசுத்தப்படுத்தற்கு ஆலயங்கள் உதவுவனவாகும். ஆதலால், நம்முன்னோர் அவ்வாலயத்தொண்டிற்கு மிகமிகப் பரிசுத்தமாக விருப்போரையே நியமித்தனர். அங்ஙனம் நியமிக்கின்ற காலத்துத் தமிழர் பின்நின்றனர். ஆரியப்பார்ப்பனர் முன் நின்றனர். தமிழரேயெனினும், ஆரியரே யெனினும் தூய்மையான வாழ்க்கையுடையார் எவரோ அவரே ஆலயத்தொண்டிற்கு உரியவர் என்பது ஆன்றோரின் கருத்து. ஆகவே, ஆலயங்களில் நிறைய ஆரியப்பார்ப்பனர் தொண்டர்களாக நிறைந்தனர். இந்நாள் அதைக் கண்டு பொறாமையுறுதலில் பயனென்? தமிழர்களுள் நூற்றுக்குத்தொண்ணூற்றைந்து பேர் புலையுண்ணுகின்றனர்; கள்ளுண்ணுகின்றனர். எஞ்சியுள்ள ஐந்துபேரோ கோயிற்பூசை செய்தல் இழிவெனக் கருதுகின்றனர். ஆரியப்பார்ப்பனரோ அனைவரும், சுயமரியாதை போன்ற பாழும் இயக்கங்களிலும், பாழான நாகரிகத்திலும் மயங்கிய ஒரு சிலர் தவிர புலையுண்ணுகின்றார்களில்லை; கள்ளுண்ணுகின்றார்களில்லை; கல்வியறிவுகளிற் குறைபடுகின்றார்களில்லை. பின்னர் அவர்களைத்தாமே இறைவழிபாடுமுதலிய உயரிய அங்கங்களில் நியமித்தல்வேண்டும். கோழியையும், ஆடுமுதலியவற்றையும் வறுத்தும் அவித்தும் உண்டு ஏப்ப

மிட்டுழல்கின்ற தமிழரை ஆலயங்களில் வைத்தால் அவை கள் என்னுகும். முதல்நம்பர் மிலிடேரிகிளப்புகள் ஆகிவிட மாட்டாவோ? ஆண்டவனுக்கும் பாற் பொங்கலும் இடப் படுமோ? பரிசுத்தமும் அவ்விடங்களிலுண்டாகுமோ? தமிழர்களால் நடத்தப்பெறும் அங்காளம்மன் கோவில் முதலிய கோவில்கள் இன்று எந்நிலை பெற்றுள்ளன. கொலைக்களமாகவன்றோ அவைகள் விளங்குகின்றன. இதிலிருந்து தமிழர் ஆதிக்கத்திற்கு ஏனையகோயில்களையும் விடுவோமாயின் என்னும் என்பதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். இவைகளையெல்லாம் யோசித்தே நம் முன்னோர்கள் ஆலயங்களில் ஆரியப்பார்ப்பனர்களைத் தொண்டு செய்யநியமித்தார்களே யொழிய அவர்கட்குத் தமிழர்க்கில்லாத ஒரு பெருஞ் சிறப்பைக்கொடுக்கவேண்டும் என்னும் கருத்துக் கொண்டல்லவென்பது திண்ணமாகும்.

உண்மை இவ்வாறிருப்ப, சைவ வைணவசமயங்கள் ஆரியப் பார்ப்பனர்க்கு ஆதிக்கங்கொடுக்கின்றன; ஆதிக்கங் கொடுக்கின்றனவென்று அரற்றித்திரிதலில் என்னே பயன்? இன்று அவர்கள் சிலமுடையவர்களாயில்லையென்று புகார் சொல்லலாம். சொல்லுவதை ஒத்துக்கொள்ளலாம். தமிழர் என்ன எல்லாவகைகளிலும் சிறந்திருக்கின்றனர்? அவர்கள்பேரில் குற்றஞ் சுமத்துதற்கு என்று கேட்கின்றோம். பார்ப்பனர்கள் எவ்வளவு இழிந்த நிலையில் இருப்பதாகக் கருதப்படுகின்றதோ அதைப்போல பதின்மடங்கு கேவல நிலையில்தான் தமிழரிருக்கின்றார்கள். முதலாவதாகச் சுயமரியாதை இயக்கத்தவரைப் பாருங்கள். அவர்கள் எவ்வளவு அநாகரிக நிலையிலிருக்கின்றார்கள். அவர்கள் உண்ணுத இறைச்சிவகைகளும் நாட்டில் உண்டோ? காட்டில்தான் உண்டோ? இதைவிட

அநாசாரம் வேறு என்னவேண்டும். புலேயுண்ணுதல் அவர் கட்கும்அவரனேயார்க்கும்பெரியகுற்றமாகப்புலப்படாது. ஏன்? அவர்கள் உண்ணுகின்றார்கள் ஆதலால். எல்லோ ரும் அதனை ஏற்புடைத்தென ஒத்துக்கொள்ள இயலுமோ? இயலாதன்றோ? இவர்களேயோ, இவர்கள் போலிருப்பவ ரையோ எப்படிக் கோயில் தொண்டிற்கு நியமிப்பது? நிய மித்து விட்டால் இதுவரைப் பரிசுத்தமாக விருந்த ஆல யங்களில் இஸ்லாமியா ஒட்டலன்றோ நியமிக்கப்படும். ஆத லால் ஆரியப்பார்ப்பனர் ஆசார சீலமுடையர்களாயிருப் பதனுல் அவர்கட்கு ஆதிக்கங் கொடுக்கும் சைவ, வைணவ சமயங்கள் தமிழரைக் குறைக்க வேண்டுமென்னும் நோக்க முடையனவல்ல; மேன்மைக்குக் கொண்டுவர வேண்டு மென்னும் நோக்கமுடையனவே யென்பதை அன்பர்கள றிதல் வேண்டும். அறியவே, சமயஙகளின் பேரில் ஏற்றப் பட்ட இக்குற்றம் பயனிலதாக ஒழிந்ததென்பது திண்ண மான முடிவு ஆகும்.

இனிச் சைவ வைணவ சமயங்கள் புராணங்களின் மூலமாகவும் பிறநூல்களின் மூலமாகவும் பார்ப்பனர்க் குப் பொருள் முதலியவற்றைக் கொடுக்கவேண்டுமென வும், அவர்களே உயர்ந்தாரெனவும் கூறுகின்றன. அங் ஙனங் கூறுதல் குற்றமன்றோ? என்பார். அந்தணர் உயர்ந் தார்; ஏனேயோர் அவரினுந் தாழ்ந்தாரே என்று கூறுதல் எங்ஙனம் குற்றமுடையதாகும். சுயமரியாதையினரின் முக்கிய கொள்கையென்ன? பிறப்பினுல் உயர்வு தாழ்வு கிடையாதென்பது தானே. அக்கொள்கை சீலமுடை யது என்பதுதான் நம்முடைய கொள்கை யென்பதனை முன்னரே கூறியுள்ளோம். அக்கொள்கைக்குச் சிறிதும் முரண்பட்டதல்ல 'அந்தணரே உயர்ந்தார்' என்று சைவ வைணவ சமயங்கள் கூறுகின்ற கொள்கை. பின்னர் அக்

கொள்கை குற்றமுடையதென்னின் சுயமரியாதையினர் கொள்கையும் குற்றமுடையதாகுமே. இல்லை; இல்லை 'அந்தணர் சிறந்தார்' என்று அவ்விரு சமயங்கள் கூறுவது பிறப்பு பற்றியே என்று கூறுவாருளரோ? உளரேல், அவர்தாமும் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்த திருக்குறளில் அந்தணர் என்போர் எத்தகையோர்; பிறப்புபற்றிய சிறப்புடையரா? அன்றிச் செய்கை பற்றிய சிறப்புடையரா? யாரை அந்தணர் என்று கூறுகின்றார் என்பதை நோக்கித் தெரிந்துகொள்ளல் வேண்டும். சிறப்பினால் அதாவது செய்கையினால் உயர்வுடையோரை வாழ்த்துவது குற்றமாமோ? உயர்ந்தவரென உரைத்தலாவது குற்றமாமோ? ஒருக்காலும் குற்றமாகாவென்பது திண்ணமாகும். ஆகவே, சைவ வைணவசமயங்கள் அந்தணர்க்குச் சிறப்புக் கொடுத்தல் தவறென மொழியும் சுயமரியாதையினர் கூற்று தவறுடையதாகுமென்பது சொல்லாமலே விளங்கும். இன்று அந்தணர் என்று சொல்லிக் கொள்வோரில் எவர் சீலமுடையராயிருக்கின்றாரென்று ஒருவினா எழலாம். அதற்குச் சமயங்கள் பேரில் குற்றஞ் சுமத்தல் சால்புடையதாகுமோ? ஒரு காலத்து மாடமாளிகை கூடகோபுரங்களோடு நீர்வளநிலவள மெல்லாம் ஒருங்குபெற்று ஒளிருகின்ற நாட்டை ஒருகவி உயர்ந்ததென உரைத்துப் போகின்றாரென்று வைத்துக் கொள்வோம். அக்கவியினுடைய காலத்திற்குப் பிற்பட்டு அந்நாடு எல்லாவளங்களு மிழந்து நிற்குமானால், வளங்களையுடையதாயிருந்த காலத்துப் புகழ்ந்து கூறிய பாவலன் குற்றமுடையவனாவனோ? கூறுமின்கள். அதுபோல சீலமுடையோராக விருப்போரை அந்தணர் எனக்கூறி அவர் தமக்குச் சிறப்பும் பிறவும் வழங்கின சமயங்கள். அது ஒருகாலம். அக்காலத்திருந்த அந்தணர்

களின் வழிவழி வந்தவர்கள் அந்நெறிகளினின்று கால வேறுபாட்டால் மாறுதலடைவார்களாயின் அதற்கு அச் சமயங்கள் என்ன செய்யும்?

> "நாற்பாற் குலத்தில் மேற்பா லொருவன்
> கற்றில னாயின் கீழிருப் பவனே."

என்றவண்ணம் நீவிர் அந்தணரிலக்கணத்திற் றவறிவிட்டீர்; நும்போன்றாரை எச் சமயங்களும் அந்தணரெனக் கூறிற்றில்லை. ஆதலால் நீவிர் அந்தணருமன்று; சிறப்புடையாருமன்று எனத்தள்ளிவிட வேண்டுவது அறிஞர் கடனாகுமன்றிச் சமயங்களை அழிக்கவேண்டும்; சாத்திரங்களை யழிக்கவேண்டுமென்பது அத்திறத்தவர் கடனாகாது. இனிப் புராணங்கள் அனைத்தும் மூடப் பழக்க வழக்கங்களையும் இயற்கைக்குப் பொருந்தாத பல மூடக் கொள்கைகளையும் மக்கட்குப் போதிக்கின்றன. அப்புராணங்களனைத்தும் சமயங்களைச் சார்ந்தனவாகலின் முதற்கண் சமயங்களை ஒழித்து விடவேண்டும் என்றும் சொல்லுகின்றார்கள். முதலாவதாக சமயங்கட்கும் புராணங்கட்கும் இருக்கும் தொடர்பு எத்தகையது என்பதை நோக்குவாம். புராணங்கள் பல. அவைகளை இருபிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒருவகை, இறைவன்—இறைவனின் திருத்தலங்கள்—திருக் கோயில்கள் முதலியவற்றின் சிறப்பு நிகழ்ச்சிகளைக் கூறுவன; பிறிதொருவகை, அடியார் சிறப்பினைக் கூறுவன. உதாரணமாகச் சிவபுராணம் முதலியன இறைவனின் திருவருட் செயல்களையும், திருவிளையாடல் புராணம் போன்றவைகள் அவ்விறைவன் மக்கட் பிறவியினரை வாழ்த்துவிக்கும் பொருட்டுத் திருமேனி கொண்டெழுந்தருளியிருக்கும் திருத்தலங்களில் அவ் இறைவன் நிகழ்த்திய சிறப்பு நிகழ்ச்சிகளையும், பெரியபுராணம் முத

லீயன அடியவர்களின் அற்புத நிகழ்ச்சிகளையும் கூறுவன வாகும். அவ்வளவேயன்றி மக்கட்கு அவைகள் மூடநம் பிக்கையினைப் புகட்டுகின்றனவென்பதை நாம் ஒப்புக் கொள்ளுதற்கில்லை. எங்ஙனமெனின், புராணத்துள் ஒரு நிகழ்ச்சி கூறப்பெறுகின்றது. மாமனாக வந்து ஆண்டவன் வழக்கினைத் தீர்த்தருளினான் என்றால் அக்கதை என்ன மூட வழக்கத்தினை மக்கட்குப் புகட்டுகின்றது. ஆண்டவ னொருவனுளன்; அவன் நமக்குத்துன்பம் நேருங்காலத்து நாம் உண்மையாளராக—உயிர்களிடத்து அன்புடையராக விருப்பமேல் எழுந்தருளி அத்துன்பத்தினை நீக்கி இன் பத்தை அளிப்பன் என்னும் ஒரு பேருண்மையையன்றோ அது குறிக்கின்றது. இது ஒருமூடப் பழக்கமா? நரியைப் பரியாக்கினான்; பரியை நரியாக்கினான் இறைவன் என்று ஒரு புராணங் கூறுகின்றது என்று வைத்துக்கொள்வோம். அதிலிருந்து நாம் என்ன தெரிந்துகொள்ளுகிறோம்? அது என்ன நமக்குப் போதிக்கின்றது? ஆண்டவன் அடியவர் பொருட்டு எவ்விதத் தொண்டும் செய்தற்குக் காத்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய ஆற்றல் பெரிதினும் பெரிது. ஒருபொருளை மற்றொருபொருளாக ஆக்குவான்; அப்பொருளைப் பின்னர் பழமை நிலைக்குமாற்றுவான். அதனாற்றான் நாம் அவனை இறைவனாகக்கொண்டு வழிபட வும் வணங்கவும் வேண்டுமெனக் கருதுகிறோம் என்னும் உண்மையையே நாமும் உணருகின்றோம்; அதுவும் இத னைத்தான் உணர்த்துகின்றது. இங்ஙனமாகப் புராணவர லாறுகளின் உண்மைப்பொருளை உய்த்துணர்ந்துகொள்ள வழியிலாதார் உளறி வழிதலில் பயனெதுவுமுண்டோ? இல்லையென்க. எனவே, புராணங்களனைத்தும் கடவுள் நிலையை—கடவுளன்பை—கடவுட்டொண்டை உலகிடை வாழும் மக்களுக்கு எடுத்துப் புகட்டுவனவேயல்லாது சுய

மரியாதையினர் சொல்லுகின்ற வண்ணம் மூடப் பழக்க வழக்கங்களைப் புகட்டுவனவல்ல. இனிப் புராணங்கள் அங்ஙனமாகவே தாம் புகட்டுகின்றனவென்று வைத்துக்கொள்ளினும் அதற்காகச் சமயங்கள் என் செய்யும்? சமயங்களெல்லாம் புராணங்கள் சார்பாகத்தாம் இருக்கின்றனவோ? இல்லை; இல்லை. சமயங்கள் புராணங்களை ஆதாரங்களாகக் கொண்டவைகளன்று. அவைகள் சாத்திரங்களை ஆதாரமாகக் கொண்டவைகள்; அவ்வழிக்கு முரணாத—அவைகளை விரித்துக்கூறுகின்ற பன்னிருதிருமுறைகளென்ன—திவ்ய பிரபந்தமென்ன அவைகளின் ஆதாரங்களில் நிற்பன. ஆதலால் புராணங்கள் சொல்லுகின்ற வழிநடப்பது சமயமன்று; புராணங்கள் சொல்வது ஒருவேளை பொய்யுரைகளேயென்று புலனாயினும் அதுபற்றிச் சமயங்கட்கு வந்த இழுக்கொன்றில்லை. ஆகையால் புராணங்கள்மேல் குற்றஞ் சுமத்தப்பட்டாலும், சமயங்களைக் குறைகூறவு முடியாது; அழித்தொழிக்கவு முடியாது. அவை என்றும் எவ்விடத்தும் அழியாதனவாகும். காமாட்சியம்மை புராணத்தில் ஒரு பார்ப்பானுக்கு ஒரு ரூபாய் தானம் பண்ணினால் சுவர்க்கலோகக் கதவுடனே திறந்துவிடும் என்றிருந்தால் அதற்குச் சமயம் எவ்விதத்திலும் கட்டுப்படாது; கட்டுப்படுத்தவும் முடியாது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால் அந்தணர்க்குப் பொருள்முதலியன கொடுக்கவேண்டுமெனப் பிறபுராணங்கள் கூறுவது தள்ளவேண்டிய ஒன்றன்று; கொள்ளவேண்டிய ஒன்றே. ஏன்? அந்தணரென்போர் அறவோராதலினால் என்க. அறவோர்க்களித்தல் நம்மனோர் கடனே. ஆனால் அறவோர் யாவர் என்று அறிந்துகொண்டபின்னரே செய்தல் வேண்டுமென்பதுமட்டும் கவனிக்கவேண்டியதே. அறவோர்க்களிக்கவேண்டிய அவசியமென்னை? செல்வம் யாரி

டத்திருக்க வேண்டுமென்றால் அறவினையறிந்த ஒருவனி டத்தே யிருக்கவேண்டும். அங்ஙனமிருந்தாற்றான் அச் செல்வம் செல்லுமாற்றிற்செல்லும். இன்றேல், அது அறத் திற்குமாறான பல இழிதுறைகளில் வேசியர்க்கும் வீணர்க் குமே பயன்படுவதாகும். அறவினையறிந்தவன் பொரு ளைக் கல்விக் கழகத்திலும் அதுபோன்ற பிற மேலான மக் கள் உறுதிப்பயனைப் பெறுதற்குரிய பல நல்லாறுகளிலும் செலவிடக் காண்கிறோம். அவரல்லாதார் தம் பொருளை வேசிக் கூத்திற்கும் வீணர் களியாட்டத்திற்கும், அவர் களிக்கும் பிறவற்றிலும் செலவிடுதலை நாம் காணுமலில்லை. ஆதலாற்றான் நம் முன்னோர் அறவினை யறிந்தோரா கிய அந்தணர்க்கு அல்லாதாரைப் பொருள் முதலியன கொடுத்து உதவிசெய்யும்படிப் பணித்துள்ளார். இவ்விடத் தும் அவர்கள் பிறப்புபற்றிய அந்தணர்க்குக் கொடுக்கும் படியாகச் சொல்லவில்லை; சிறப்புபற்றிய அந்தணர்க்கே கொடுக்கும்படிச்சொல்லியுள்ளார் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இதுகாறுங் கூறிவந்தவாற்றால் சமயங் கள் வகுத்தமுறைகளெல்லாம் மிக உயர்வுடையன வும்—உண்மையுடையனவுமாகும். ஆனால் அவைகள் இந் நாள் முறைபிறழ்ந்து நிற்கின்றன வென்பதும் அதற்குச் சமயங்கள் புணை போவனவல்ல வென்பதும் நமக்குப் புல னாகும். ஆகவே இன்று முறைபிறழ்ந்து நடக்கின்றமைக் காகச் சமயங்களை அழிக்கப் புறப்படுதல் அறியாமையிற் சிறந்த அறியாமையாகுமென்பதை அனைவரும் அறிந்து கொள்ளலாகும்.

இனிச்சமயங்களைப் பற்றிய ஒரு உண்மையினை நாம் இது பொழுது அறிந்துகொள்ள வேண்டியதவசியமாகி றது. உலகு தொடங்கிய காலத்தில் மக்கள் எந்நிலையராக விருந்தனர்? அதன்பின்னர் எந்நிலையராயினர்? இன்று

எங்ஙிலையரா யிருக்கின்றனர்? என்பனவற்றைச் சிந்திப்போம். முதல் முதலாக மக்கள் மிருகவாழ்க்கையையே மேற்கொண்டிருந்தனர். அஃதாவது கண்டதை உண்பதும், கண்டவிடத்தில் உறங்குவதுமாகத் தமக்கு உணவு இன்னது; உறங்குகின்றமுறை இன்னது; இடமின்னது; இங்ஙிலையில் உண்ணுவது; இங்ஙிலையில் உறங்குவது; என்பனபோன்ற வரையறைகளின்றி இன்று மாக்கள் வாழ்க்கையானது எங்ஙன மிருக்கின்றதோ அங்ஙனமாகவே இருந்துவந்தனர். அதன்பின்னர் அங்ஙனமிருந்த அம்மக்கள் உண்ண உணவும், உடுத்த ஆடையும், படுக்கப்பாயலும், ஊர்திகளும் பிறவும் தங்கள் அறிவுமுயற்சிகொண்டு கண்டுபிடித்து உண்ணவும், உடுக்கவும், படுக்கவும், இன்ப வாழ்க்கையில் வாழவும் ஆரம்பித்தனர். அப்பொழுது தான் மாவினங்கட்கும் மக்களினமாகிய தமக்கும் இருக்கும் வேறுபாட்டினை அவர்கள் உணர்ந்தனர். உணர்ந்தபொழுது எவ்வண்ணம் உண்ணுதற்கு உணவையும், உடுத்தற்கு ஆடையையும், படுத்தற்குப் பாயலையும், ஊர்ந்து செல்லுதற்கு ஊர்திகளையுங் காணுதற்கு முயற்சித்துக் கண்டனரோ அவ்வண்ணமாகப் பிறவற்றையும் தாம் அடைதற்கு முயற்சிப்பாராயினர். பிறவென்ன? பிறப்பு முதலிய எல்லாவற்றிலும் ஒத்தவர்களாயிருக்கின்ற மக்களுள் நேற்றிருந்தானொருவன் இன்றிறந்துபோவதும், அதுபோன்ற பிறவும் தம்மையறியாது நிகழ்வனவும், ஒரு காலத்துத் தாம் எண்ணிய ஒன்று நிறைவேறுதலையும், பிறிதொரு காலத்துத் தாம் எண்ணிய ஒன்று நிறைவேறாதொழிதலும், எண்ணாத ஒன்று வலிய நிறைவேறுதலும் முதலானவைகளே. இவைதம்மை அவர் நாளாக நாளாகத் தெரிந்துகொள்ள அவைகட்குக் காரணமென்ன வென்பதைத் தத்தம் அறிவுகொண்டு அறிந்து முடிவுகட்டவேண்டு

மென முந்தினர். முந்திப் பலநாள் முயன்று பார்க்கின்ற அளவில் தம் அறிவுக்கும் பிறவற்றிற்கும் எட்டாத-அப்பாலதான ஒரு பொருளிருந்தே இம்மாதிரியாக இங்நிலமிசை உயிர்களை உண்டாக்குதலும், காத்தலும, அழித்தலும் ஆகியவற்றையும், நினைக்கின்ற ஒன்றை முடித்தற்குக்காரணமாயும், தடுத்தற்குக் காரணமாகியும், நினையாத ஒன்றைக்கொடுத்தற்குக் காரணமாயுமிருப்பதாகக் கண்டனர். காணவே, அத்தகைய ஒரு பொருளை நாம் தெரிந்துகொள்ளல்வேண்டும்; அப்பொருளின் அருளுக்கு நாம் ஆளாதல் வேண்டும்; அப்பொருளை நாம் தெரிந்தாற்றான் நமக்கு எல்லா நன்மைகளும் கிட்டும் என்னும் உண்மையினைக் கடைபிடித்துக் கொண்டு அரிதிற்பெற்ற ஆக்கையையும் பொருட்படுத்தாது,

"................மக்களை மனைவியை யொக்கலை யொரீஇ, மனையும் பிறவுந் துறந்து நினைவருங் காடு மலையும் புக்குக் கோடையிற், கைம்மே னிமிர்த்துக் காலொன்று முடக்கி, ஐவகை நெருப்பி னழுவத்து நின்று, மாரி நாளிலும் வார்பனி நாளிலும், நீரிடை மூழ்கி நெடிது கிடந்துஞ், சடையைப் புனைந்துந் தலையைப் பறித்தும், உடையைத் துறந்து முண்ணு துழன்றுங், காயுங் கிழங்குங் காற்றுதிர் சருகும், வாயும் நீரும் வந்தன வருந்தியுங், களரிலுங் கல்லிலுங் கண்படை கொண்டும்" அப்பொருளையறியத் தவங்கிடந்து, தவத்திற்கிரங்கித் தனிவந்த அப்பொருளையுணர்ந்தும், அப்பொருளின் அருளால் தாம் பல செயற்கரிய அரும்பெருஞ் செயல்களைக் கண்டும், செய்தும் இன்ப நிலையை எய்தி அந்நிலைக்குத்—தாம் அடைந்த அவ்வின்ப நிலைக்குத் தம்மினத்தவராகிய மக்கட்கூட்டத்தினர் வருதல் வேண்டித், தாம் அப்பொருளை அடைதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியினையும், அதன் இலக்கணத்தையும்,

அதன்பின்னர் அப்பொருளிலக்கணத்தையும், அப்பொரு ளின் அருளிலக்கணத்தையும் வகுத்து முறைபடக் கூறிப் போந்தனர். அங்ஙனம் கூறிப்போந்த முறைகளே சமயங் களாம். அச்சமயங்களைக் கடைபிடித்துவந்த முறையாற் றான் இதுபொழுது நாம் எல்லாவகையான அறிவுமுற் போக்கிலும் வல்லுனராகவும், பிறவலியுடையவர்களாக வும் விளங்குகின்றோம்.

எனவே, சமயங்கள் நம்முன்னோரின் பொய்மைக் கலப்பில்லாத மெய்மைத் தவத்தால் கைம்மாறோ பிற வொன்றோ கருதாது நடுநிலைநின்று பிறர் நன்மைநாடும் பெற்றி ஒன்றே பெரும்பொருளெனக் கொண்டு ஆக்கி வைத்துப் போந்த அரும்பெரும் பொக்கிஷங்களென்க; பொன்மணிப் பெட்டிகளென்க. அத்தகைய சமயங்க ளையோ அழிக்கப்புகுவது? அறிஞர்களே! கூறுமின்கள். ஆனால், அவைகள் இந்நாள் தீமை பயக்கின்றன வென்றால் அவைதம்மை ஒழித்துவிட வேண்டுவதுதான்; இல்லையே. சமயங்களைப் பற்றிக்கூறுகின்ற குற்றங்களனைத்தும், சம யங்களென்பன இன்ன தன்மையன வென்பதை யறியாத அறிவில் பெரியார்களின் அவலமதியிற்பாற்பட்டனவா கத்தாம் இருக்கின்றன வென்பதை முன்னரே விளக்கி யிருக்கின்றோம். புராணங்கள் குற்றமுடையனவாயினும், அவைகளில் கூறியுள்ள ஆலயங்களும், பிறவும், அந்தண ரொழுக்கங்களுமே இதுபொழுது தவறி விட்டாலும், கோவில்களில் பல குற்றமுடைய செயல்கள் நிகழினும் சமயங்கள் குற்றமுடையனவாகா. அவைகள் என்றும் புனிதமானவை. அவைகளின் பெயரால் குற்றங்கள் நிக ழின் அவைகளைக்களைந்து, சமயங்களை வளர்க்க, அவை களின் கொள்கைப்படி மக்களை நடக்கச்செய்ய முந்துவதே அறிஞர் கடனாகுமன்றி அக்குற்றங்கட்காகச் சமயங்களை

14931(77507)



அழித்தொழிக்கவேண்டுமென்பது அத்திறத்தவர் கடனுகாது. ஏனெனில், மாணிக்க மொன்று நம்பால் உளதென்று வைத்துக் கொள்வோம். அதனை விலையுயர்ந்த மாணிக்கமென நாம் அறியாது அதன்கண் மாசுகள் பல படியுமாறு செய்து விடுகிறோம். எனினும், பின்னர் மாணிக்க மென்பதனை உணர்ந்து கொண்ட பொழுது மாசுகளைப் போக்கி மாணிக்கத்தைக் கைக்கொள்ளுவோமே யன்றி மாசுகள் படர்ந்திருப்பதற்காக அதனை எறிந்து விட மாட்டோம் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஆதலால் சமயங்கள் என்னும் மாணிக்கங்களில் படிந்திருக்கும் மாசுகளைப் போக்கி அம்மணிகளைச் சிரமேற்கொண்டு சிறப்புறுங்கள் என்பதே நமது பெருவிண்ணப்பமாகும்.

# கடவுள்.

'கடவுள்' இல்லையென்பதும் சுயமரியாதையினரின் கொள்கையாம். இக்கொள்கை கொண்டுதான் அறிவு உலகம் அச்சுயமரியாதையினரை நாத்திகர் என்று அழைக்கின்றது. மிகப்பரந்தது இவ்வுலகம். வாழுகின்ற மக்களினத்தவரும் எண்ணற்றவர். இங்ஙனமாகப்பரந்த உலகிடை உயிர்வாழுகின்ற எண்ணற்ற மக்கள் கூட்டத்தவருள் கடவுள் உண்டென்று கூறுவார் தொகைக்குக் கடவுள் இல்லை யென்று கூறுவார்தொகை மிகமிகச்சிறியது. உலகில் இதுபொழுதிருக்கும் சமயங்களும் எண்ணில. அவையுள்ளும்,கடவுள் இல்லையென்று கூறும்சமயம் ஒன்றுமில்லை. இந்நாள், உலகமுழுதும் பரவியிருக்கின்ற சமய வேறுபாடுடைய, வாழ்க்கை வேறுபாடுடைய, உணவு வேறுபாடுடைய, உடை வேறுபாடுடைய, நிற வேறுபாடுடைய மக்கள் அனைவரும் கடவுள் உண்டென்னும் ஒரு கொள்கையில் மட்டும் வேறுபாடு என்பதிலராய் ஒத்த கருத்துடையராக விருக்கக் காண்கிறோம். ஒரு சமயம் நல்வினை தீவினை இல்லையென நவிலும்; மற்றொரு சமயம் முற்பிறப்பு இல்லையென முரணும்; இன்னொன்று ஒழுக்கமே சிறந்ததென உரைக்கும்; மற்றது அது வேண்டுவதில்லையெனவிளம்பும். இவ்வண்ணம் தத்தம் நெறிகளில் வேறுபாடுடையனவாய் நிற்கின்ற சமயங்கள் தாமும் கடவுட்கொள்கையில் மட்டும் ஒருமித்து நிற்கின்றனவென்றால் அக்கொள்கையி னுண்மையைப் பற்றி உரைக்கவும் வேண்டுமோ? கடவுள் உண்டெனும் கொள்கை நேற்றுவந்ததில்லை; சில நூற்றாண்டுகட்குள் வந்ததில்லை; சில ஆயிரக் கணக்கான வருடங்கட்குள் வந்ததில்லை; கணக்குவரையறைக்கப்பாற் பட்டதாக மிகமிகத் தொன்மையானது

கடவுட்கொள்கை. அத்தகைய கொள்கை இதுபொழுது மறுக்கப்படுகிறது. காரணம் ஆய்ந்த அறிவும்பிறவும் இல்லாமையே என்பதை மறுக்க வொண்ணுமோ? கடவுள் என்று ஒன்றில்லை; எல்லாம் இயற்கையே என்று கூறுகின்றனர். இது இவருடைய புதுக்கொள்கையன்று; பழமையான மிகப்பழமையான ஒன்றேயாகும். உண்மைதான்; உலகம் உண்டாதலும், காக்கப்படுதலும், அழிக்கப்படுதலும் எல்லாம் இயற்கையே.

இயற்கையென்றால் எப்பொழுதும் எந்நிலையினும் மாறுதல்களடையாது ஒரு நிலைத்தாக இருப்பதேயாகும். இயற்கை இந்நிலையதென்னின் அவ்வியற்கையினின்றும் தோன்றும் மக்கள் ஏன் பேதமுடையவர்களாக வேண்டும். எல்லோரும் இயற்கைபோல ஒருமாதிரியாகத்தாமே இருக்கவேண்டும். அங்ஙனமின்றி அவர்கள் பலவேறுபேதமுடையராக விருத்தலினாலேயே இயற்கையினால் மட்டும் தோன்றியவர்களல்லர்; அவ் வியற்கைக் கப்பாலதாகிய ஒருபொருளினால் தோன்றியவர்களே அவர்களும் பிற உயிர் வருக்கங்களும் என்பது முடிவாகும். வார்ப்புச்சாலையில் இருப்புக் குழாய் வார்க்கப்படுகிறது. என்னின் வார்க்க ஆரம்பித்த காலம் முதலாக எவ்வளவு காலம் வார்த்தாலும் முதலில் எவ்வுருவோடு - எவ்வளவோடு சமைந்ததோ அம்மாதிரியே தான் கடைசிவரைக் குழாய் சமையுமேயொழிய வெவ்வேறு மாதிரியாக ஆகாது. வெவ்வேறு மாதிரியாக வெளிவரின் ஆங்கு ஒரு மனிதனிருந்து அதனை மாற்றுகின்றான் என்பதே உண்மையாகும். அதுபோல இயற்கையிலேயிருந்து தோன்றுகின்ற மக்கள் தாமும் ஒரு குணமுடையராக—ஒரு நிலையராக—ஒரு வயதளவினராக் விருப்பார்களேல் அவர்களை நாம் இயற்கையினின்றும் தோன்றுபவர்கள் என்று கொள்ளலாம். அங்

னமின்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியினராக விருப்பதனுல்தான் நாம் அவ்வியற்கையிலிருந்து தோன்றுபவர் மக்கள் எனினும் தோன்றச் செய்பவன் கடவுள் ஒருவன் உண்டென்பதை நம்புகிறேம். நம் முன்னேரும் கடவுளுண்மையை உணர்ந்தனர். ஒரு தாய்தந்தையர்க்குப் பிறந்தாருள் ஒருவன் செந்நிறமுடையவனுகவும், ஒருவன் கருநிறமுடையவனுகவும், மற்றெருவன் குருடனுகவும், இன்னெருவன் ஊமையாகவும் இருக்கின்றதைக் காண்கின்றேமே. இயற்கைவழித் தோன்றுவதென்னின் மக்கட் கூட்டம் இவ்வளவு பேதமுடையதாகக் காணப்படுமோ? அவ்வியற்கையைக்கடந்த ஒரு பொருளிருந்தால் மட்டுமே இவ்வளவு பேதங்கள் காணமுடியும். ஆகவே, இயற்கைக் கப்பாலதோர் பொருளிருக்கின்றது; அப்பொருளே இம்மாதிரியான வேறுபாடுகளோடு தோற்றங்களை உண்டுபண்ணுகிறது என்னும் உண்மை திண்ணமானதாக முடிவுபெறும். கடவுள் உண்டென்று நாம் இன்று புதிதாகக் கூறுகின்றேமில்லை. நம்முள் வாழ்ந்துபோய பெரியாரனைவரும் கடவுள் உண்டு; கடவுள் உண்டு என்றே கழறியிருக்கின்றனர். அங்ஙனமிருக்க இன்றுவந்தயாரோ ஒரு சிலர் கடவுள் இல்லையென்று கரைவதற்காக கடவுட் கொள்கையிலதாகி விடாது. கடவுள் உண்டென்றுல் காட்டமுடியுமா? என்பது சுயமரியாதையினரின்வினு? பகுத்தறிவு ஒன்று இருப்பதாகக் கூறுகின்றீரே; அதனைக் காட்டமுடியுமா? முடியுமானுல் காட்டுங்கள் என்பது மற்றையவரின் வினு. பகுத்தறிவு உண்டென்பதைக் காரண காரியவகைகளிற் காட்டுகின்றேம் என்பது சுயமரியாதையினரின் விடை; கடவுள் உண்டென்பதையும் காரணகாரியவகைகளிற் காட்டுகின்றேம் என்பது மற்வையவர்களின் விடை. இரண்டும் சரியானகேள்விகள் தாம்; விடைகள் தாம்.

ஆதலால் வேறுசமாதானம் இதற்குக் கூறவேண்டியதில்லை.

இனி, இக்கடவுட் கொள்கையைச் சுயமரியாதையினர் மக்களிடையில் பலவாருகக் கூறிவருகின்றனர். அவர்கள் கூறுகின்றவகை மூன்று. ஒன்று கடவுள் இல்லை என்பது. இன்னொன்று கடவுள்உண்டு; ஆனல் நீங்கள் சொல்லுகின்ற கடவுள் இல்லை என்பது; மூன்ருவது கடவுள் உண்டா? இல்லையா என்பதைப்பற்றிய கவலை வேண்டுவதில்லை என்பதாகும். கடவுள் இல்லையெனக் கூறுவது பாமர மக்களிடையில்; குக்கிராமங்களில். கடவுள் உண்டு; ஆனல் நீங்கள் சொல்லுகின்ற கடவுள் இல்லையெனக் கூறுவது பாமரரும் பண்டிதரும் கலந்தகூட்டத்தில். கடவுளைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை யென்பதைப் பண்டிதர்கள் கடவுள் இல்லையென்று சொல்வதுதவறு எனச் சூடிடுகிறபொழுது அச்சூட்டிற்குத் தப்பித்துக் கொள்ளச் சொல்வது. இவ்வாருகப் பிரசாரஞ் செய்துவருகின்றனர் சுயமரியாதையினர். ஆதலால் அவர்களுடைய மூன்று கொள்கைகளையுமே ஆராய்ந்து பார்ப்போம். முதலாவதாகக் கடவுளைப் பற்றியகவலை யென்பது வேண்டாமென அவர்கள் விளம்புகின்ருர்கள். ஏன் வேண்டாம்? ஒரு பொருளுளதேல் அப்பொருளைப்பற்றிய கவலைவேண்டாதாகுமோ? தந்தை ஒருவன் இருப்பது உண்மையாயின் அவனைப்பற்றிய கவலையை அவன் மகன் கொள்ளவேண்டாமோ? உலகில் எவரேனும் கொள்ளாதிருப்பரோ? அதேபோலக் கடவுள் உண்டென்பது உண்மையாக விருக்குமேல் அக்கடவுளைப்பற்றிய கவலை அனைவர்க்கும் இருந்தே தீரவேண்டும். கவலை கொள்ளுவதனல் பயனென்னையெனில், கவலை கொண்டாற்ருன் அவன் இருப்பது உண்மைதான? இல்லையா? என்பதைத் தத்தம் அறிவு கொண்டு தெளிதற்கியலும். ஆண்டவன் ஒருவனுளன்; அவனற்

ருன் இவ்வுலகம் படைக்கப்படுகின்றது; காக்கப்படுகின்றது; அழிக்கப்படுகின்றது என்னும் உண்மைகள் புலனாகும். புலனாவதினின்று இவ்வுலகத்தில் தோன்றுகின்ற உயிர்கள் அனைத்தும் கடவுளினால் ஆக்கப்பட்டவை ஆதலினால் அவைகள் அனைத்தினிடத்தும் நாம் சகோதர நேயத்தோடு இருத்தல் வேண்டும் என்னும் நல்லுணர்வும் பிறவும்தோன்றும். இன்றேல் அவையனைத்தும் தோன்றா. ஆகலான் கடவுள் உண்டென்பது உண்மையாயின் அதைப் பற்றிய கவலையிருந்தே தீரவேண்டுமென்பது திண்ணமாம். கவலைவேண்டாமெனக் கூறுதற்கு ஒரு காரணம் அவர்களால் கூறப்படுகின்றது. அமெரிக்கா முதலிய மேல்நாடுகளில் பல அற்புதங்களையெல்லாம் கண்டுபிடிக்கின்றார்கள். அம்மாதிரி அற்புதங்களைக் கண்டுபிடிக்க முயலாது கடவுள் கடவுள் என்று கரைந்துகொண்டிருத்தல் நன்மையைப் பயப்பதன்று என்பதற்காகவே இம்மாதிரிக் கூறப்படுகின்றதாம். உண்மைதான். அம்மாதிரி அற்புதங்களைக் கண்டுபிடிக்க வேண்டுவதுதான். ஆனால் அவ்வற்புதங்களைக் கண்டுபிடிப்பதானால் கடவுட் கொள்கையைக் கைக்கொள்ளுதல் கூடாதென்பது எதனால் என்பது நமக்குப் புலனாகவில்லை. இந்நாள் கடவுளைப் பற்றி அதிகமாகக் கவலைவைத்துக் கொண்டிருப்பவர் நம்மவரா? மேல்நாட்டவரா? பிறசமயத்தவரா? என்றால் நம்மவர் கடவுட் கொள்கையில் கவலை அதிகமாகக் கொண்டிருக்கவில்லை; ஏனையோர்தாம் அக்கொள்கையில் அதிகமான கவலையுடையவராகவிருக்கின்றனர் என்று தான் பதில் கூறவேண்டியிருக்கும். அமெரிக்கா முதலிய நாடுகளில் அற்புதங்களைக் கண்டுபிடிப்பவரனைவரும் கடவுளைப் பற்றிய கவலையேயில்லாதார் என்று எவரேனும் கூறமுடியுமா? அவர்களனைவரும் கடவுட்டொண்டில் தலைசிறந்தவர்களன்றோ? அங்ங

ணமாயின் அற்புதங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் கடவுட் கொள்கையைப் பற்றிய கவலை இருத்தல் கூடா தெனச் சுயமரியாதையினர் கூறுதற்குக் காரணம் என்னை? கடவுளைப் பற்றிய கவலை மலையளவுடையதன்றே. தினையள வுடையதுதானே. இருபத்துநான்கு மணிநேரங்களுடைய ஒருநாளில் ஒருமணிநேரமே கடவுளைப்பற்றிய கவலைக்கெ னச் செலவழிக்க வேண்டியிருக்கும். மீதமிருக்கும் இரு பத்துமூன்று மணிநேரங்களில் அற்புதங்களைக் கண்டு பிடிப்பதிற்றலையிடலாமே. ஒருமணிநேரம் தினையளவில் லாது வேறு என்னை? இனிச் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்த—பாதுகாத்த—அழிக்கப் போகின்ற முத் தொழிலுடைய முக்கணனே போன்ற இராமசாமி நாயக்கராம் மூர்த்தியார் இந்நான்குவருட காலமாகச்சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்துச் 'சும்மாகிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி' என்னும் பழமொழிக் கிணங்க ஏதோ மூலையில் ஒதுங்கிக் கிடந்த ஜாதிச் சண் டையை நாட்டிடை இழுத்துவைத்து நாத்திகத்தைப் பரப் புவதை ஆரம்பத்திலேயே விடுத்து மேல்நாட்டவர்போல ஆராய்ச்சி அறிவுத் துறைகளில் இறங்கிப் பல அற்பு தங்களைக் கண்டுபிடிக்க முற்பட்டிருந்தால், இதுபொழுது ஈரோடில் வீடும் சென்னையில் அச்சுக்கூடமும் இருப்பதற்கு ஏற்பச்சுலபமாகப்போக்குவரத்தைச் செய்தற்கு ஒருஆகா யக்கப்பலாவது கண்டுபிடித்திருக்கலாமே. அதைவிடுத்து அவலமாகச் சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்துப் பார்ப்பனரிடத்தும் பிறரிடத்தும் பாட்டுக்களை நிரம் பப் பெற்றுக்கொண்டு கடைசியாக வெளியேறிச் செல்வ தற்கும் வழியிலாத நிலையைத் தமக்குவருவித்துக் கொண் டது பகுத்தறிவுடைய அவதார மூர்த்தியாருக்கு அழகு தானே? கடவுளைப்பற்றிக் கவலைப்படுவோர் ஆராய்ச்

சித்துறையில் இந்நாள் இறங்கப்போவதில்லை. ஆதலால் அக்கவலையில்லாத இராமசாமியாரும் அவர் சீடவருக்கங்களுமே இப்பொழுது அமெரிக்க நாட்டவர் ஆதல் வேண்டும். சுயமரியாதைக்காரர்கள் அனைவரும் பகுத்தறிவுடையவர்கள் என்பதை நாம் மறுக்கமுடியாது. ஏன்? இத்தகைய மாண்புமிக்க—மதிப்புமிக்க அமெரிக்க நாட்டவரின் அற்புதத்தைக்கண்டு பிடிக்கத்தூண்டிய ஒரு செயலே அவர்களின் பகுத்தறிவின் ஆற்றலை விளக்குகின்றது. ஆகலானே, அப்பகுத்தறிவிற் சிறந்தபண்புடையார்கள் விரைவில் ஆராய்ச்சித் துறையில் இறங்குவார்களாக. இறங்கி விரைவில் அற்புதங்களைக் கண்டுபிடிப்பார்களாக. அப்பொழுதுதான் அவர்கள் உண்மையாகச் சுயமரியாதையும், வீரமும், பகுத்தறிவும் உடையவர்கள் என்பதை உலகம் ஏற்கும். வேறு வகையான அற்புதங்களைக் கண்டுபிடிக்காவிடினும், மதுவிலக்குப் பிரசாரத்தின் பேரால் ஒதுக்கிவைத்திருக்கும் நான்குலட்ச ரூபாய்க்குள் கனம் மந்திரியார்க்கு அடுத்ததேர்தல் வெற்றிபெறும் வண்ணம் செய்வதானால் எவ்வகையான அற்புதம் செய்யவேண்டும் என்பதைக் கண்டுபிடிக்கட்டும். ஏனெனில், மதுவிலக்குப் பிரசாரம்; மதுவிலக்குப் பிரசாரம் என்று அவர்கள் ஊர் ஊராகக் கனம். மந்திரியார்க்கு ஓட்டுச்சேகரிக்கப் போகுங்காலத்து அவர்கள் சூழ்ச்சி பலிக்காதபடிச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தற்குப் பல மெய்யன்பர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால். முடிவாக அற்புதங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பது அவசியமாயினும் அதற்காகக் கடவுள்கொள்கையைப்பற்றிக் கவலைவேண்டா மென்பது பயனற்ற-பொருளற்ற புன்மையுரையேயா மென்பது புலனாகும். இனிக் கடவுள் உண்டு; ஆனால் நீங்கள் சொல்லுகின்ற கடவுள்

அல்லவென்று சொல்வதைப்பற்றிச் சிந்திப்பாம். உண்டு என்று சொல்லும் கடவுள் எது? இல்லையென்று கூறும் கடவுள் எது? சிவபெருமானா? அன்றித் திருமாலா? பிரமனா? அல்லாவா? பரம்பொருளா? அருகனா? மதுரைவீரனா? பேச்சியாயியா? அங்காளம்மனா? எது உள்ள கடவுள். இவற்றுள் ஒன்றும் உள்ள கடவுள் இல்லையானால் இவைகளையல்லாத ஒரு உண்மைக் கடவுளை எங்கு போய்க் கண்டுபிடித்தனர் சுயமரியாதையினர். இராமசாமியார் கண்டுபிடித்தாரா? அல்லது அவரின் சீடவருக்கங்கள் கண்டுபிடித்தனவா? மதுரைவீரன் முதலியன கடவுள் அல்லவென்றால் அது சுயமரியாதையினர் சொல்லுவதாகாது. அறிவு நூல்களும், ஞான நூல்களும், ஆன்றோரும் சொல்லுகின்ற ஒன்றுதான் அது. இல்லை பரமசிவன் என்றும் இன்னொரு பெயர் என்றும் கொண்டிருக்கின்ற ஒன்று கடவுள் ஆகாது. ஒரு நாமம் ஒருருவமில்லாதாகவிருக்கும் ஒன்றே கடவுள் என்றால் அக்கொள்கையும் புதிதன்று. கடவுள் இல்லையெனும் நாத்திக எண்ணம் மனத்தினில் ததும்புகின்றது. வெளியிற்சொல்ல அச்சம். அதற்காகக் கடவுள் இல்லையென்று சொல்லுவதை இந்தக் கடவுள் இல்லையென்று சொல்லிக்கொண்டு திரிகின்றனர் என்பதே உண்மையாக அவர்கள் உள்ளக்கருத்தை உணர்ந்து சொல்லுவதாகும். மூன்றாவதாகக் கடவுளே இல்லையெனப் பாமர மக்களிடைப் பேசுவதை முன்னரே மறுத்துரைத்திருக்கின்றோம். ஆதலால் அதனைவிடுத்து எதற்காகக் கடவுள் இல்லையெனச் சுயமரியாதையினர் கூற முன்வருகின்றனர் என்பதைக் கூறி முடிப்போம். கடவுள் இல்லையென்று மக்களிடைப் பிரசாரஞ்செய்து வெற்றி பெற்றுவிட்டால் கோயிலில் பூசைகள் முதலிய நடைபெறா? நடைபெறாமற் போயின் பார்ப்பனர் ஆதிக்கம் குன்றும்.

தங்களுடைய எண்ணம் அதுபொழுது முடிவுபெறுமென்பதே. இது எவ்வளவு முழுமூடமான கொள்கையென்பதை அறிஞர்களே கூர்ந்து நோக்குங்கள். பிராமணரைத் தொலைக்க வேண்டுமாயின் அதற்காகக் கடவுள் கொள்கையைத் தொலைக்க வேண்டுமென எண்ணுவது அறிவுடைமையா? பகுத்தறிவுடையார்க்குப் பண்பைத் தருவதா? மருமகள் கொட்டம் அடங்க வேண்டுமென மகனைக் கொல்ல எண்ணும் மாமியின் கொள்கையினும் இக்கொள்கை எவ்வளவு உயர்வுடையது? இப்படியெல்லாம் ஒவ்வொருவர்க்கு ஒவ்வொருவர்பேரி லிருக்கும் எரிவுகட்கே ஒரு இயக்கம்; ஒரு கொள்கை. இம்மாதிரிச் செய்யும் செயல்களனைத்தும் சூழ்ச்சியின்பாற் பட்டனவேயன்றோ? ஆதலினால் சுயமரியாதையினர் கூறுகின்ற கடவுள் கொள்கை சரியன்றென்பதும், கடவுள் உண்டு என்பதும், அக்கடவுளைப்பற்றிக் கவலைகொள்ள வேண்டுவது மக்களாகப் பிறந்தார் ஒவ்வொருவர்க்கும் அவசியமாகுமென்பதும் பிறவும் முடிவாகின்றன. ஓம் சிவம்.

1493
(7750)

---

PRINTED AT THE SRI BHARATHI PRESS, CHOOLAI, MADRAS.